# தட்பம் தவிர்




2014-யில்
ஈ-புத்தகமாக
வெளியாகி
பெரும் வரவேற்பை
பெற்ற நாவல்

அரவிந்த் சச்சிதானந்தம்


தட்பம் தவிர்
NO MERCY


2014-யில்
ஈ-புத்தகமாக
வெளியாகி
பெரும் வரவேற்பை
பெற்ற நாவல்
அரவிந்த் சச்சிதானந்தம்



# தட்பம் தவிர்

அரவிந்த் சச்சிதானந்தம்

அந்தாதி பதிப்பகம்

தட்பம் தவிர்— நாவல்

ஆசிரியர்: அரவிந்த் சச்சிதானந்தம்

© அரவிந்த் சச்சிதானந்தம்

முதல் பதிப்பு: 31, ஜூலை 2014

அந்தாதி பதிப்பகம்

49, பெரியார் தெரு, தாம்பரம் சானடோரியம்
சென்னை—600 047

Thatpam Thavir— Novel
Author: Aravindh Sachidanandam
©Aravindh Sachidanandam
First edition: 31, July 2014
Kindle edition: 31, July 2017
Andhadhi Pathippagam
49 Periyar Street, Tambaram Sanatorium
Chennai—600047

www.andhadhi.com
Email: andhadhipathippagam@gmail.com

*“(அவன்) மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவன், பெரியவன் உயர்ந்தவன்”*

*—திருக்குர்ஆன் அத்தியாயம் 13:9*

# *Excerpt*

*“உலகத்துலயே கொடூரமான செயல் ஒண்ணு இருக்கு. சக மனுஷன அடிமைப்படுத்திப் பார்க்குறது. அவன நம்மளவிட தாழ்ந்தவனா நடத்துறது. அடுத்தவன திட்டுறது, அடிக்கறது எல்லாம் கோபத்துல செய்யுற செயல்கள். ஆனா இன்னொருத்தன அடிமை படுத்திப் பாக்கனும்னு நினைக்குறது ஒருவகையான பெர்வேஷன்.”*

# 1

“ஹே ய் கய்ஸ், வாஸப்...”

மேடையில் இருந்த அந்தத் திரைத்துறை பிரபலம் மாணவர்களைப் பார்த்துக் கேட்க, அங்கிருந்த பல்வேறு கல்லூரி மாணவர்களும் ‘ஓ’வென சப்தமிட்டுக் கரகோஷம் செய்தனர்.

“நான் நிறைய கல்ச்சுரல்ஸ் அட்டென்ட் பண்ணியிருக்கேன்... பட் K.I.T கய்ஸ் யூ சிம்ப்ளி ராக்...”

இப்போது K.I.T மாணவர்கள் மட்டும் கரகோஷம் செய்தனர்.

மிகவும் ஆரவாரமாக நடந்து கொண்டிருந்தது கல்ட்ஃபெஸ்ட் (cultfest) எனப்படும் அந்த கல்ச்சுரல்ஸ். சுற்று வட்டாரத்தில் மிகப் பிரபலமான கல்லூரி என்பதால் வருடா வருடம் அந்தக் கல்சுரல்ஸுக்குத் தமிழகம் முழுவதிலுமிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் K.I.T பொறியியல் கல்லூரியில் கூடுவது வழக்கம்.

தரமான கல்விக்கும் சரி (!), கல்ச்சுரல்ஸிற்கும் சரி, K.I.T பொறியியல் கல்லூரி மிகப் பிரசித்தம். ஆட்டம், பாட்டம் என அன்று அந்த ஒட்டுமொத்த இடமும் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.

ஜோடியாகத் திரியும் தற்காலிகக் காதலர்கள், பெண்களை கேலி செய்யும் காளையர்கள், திண்பண்டங்களை இருமடங்கு விலையில் விற்கும் கடைகள் என புதியதோர் கோலாகல உலகம் அங்கே உருவாகியிருந்தது.

பல கல்லூரி மாணவர்கள் கூடும் இடமென்பதால் அசம்பாவிதங்களைத் தடுக்க ஆங்காங்கு அந்தக் கல்லூரியின் ஊழியர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களோடு ஒருவராய் அமர்ந்திருந்தார் பேராசிரியர் பிரகாஷ். கடுமையான முகம், கறுத்த உருவம். தொப்பை வீங்கி வெடிக்கும் நிலையிலிருந்தும் வழக்கம்போல் கல்லூரி செலவில் கொடுக்கப்பட்ட தீனியை அசைபோட்டுக் கொண்டிருந்தார்.

“என்னடா பஜ்ஜி இது? உப்பு சப்பில்லாம… போடா வேற ஏதாவது கொண்டுவா“ என்று கிளார்க்கை அதட்டியபடியே மாணவர்களின் நடனத்தை ரசித்துக்கொண்டிருந்தார். கிளார்க் தன் தலையில் அடித்துக்கொண்டே “எவன் எவனோ சாகுறான். இதுக்கு ஒரு அழிவு வரமாட்டேங்குதே“ என்றபடி நகர்ந்து சென்றான் .

முயன்று அமர்ந்தும், ஒரு நிலைக்கு மேல் பிரகாஷால் இயற்கையின் அவசரத்தை அடக்க முடியவில்லை.

அங்கிருந்து எழுந்து வேகமாக அவர் கழிவறைக்கு சென்றார். கழிவறை அவர் வேலை பார்க்கும் உற்பத்திப் பொறியியல் கட்டிடத்தில் இருந்தது. தன்னை யாரோ பின்தொடர்வதை உணர்ந்து திரும்பியவர் திடுக்கிட்டார். அங்கே நின்று கொண்டிருந்தது அந்த உயர்ந்த உருவம்.

அடர்த்தியான முடி, நெஞ்சு வரை வளர்ந்த தாடி என கிட்டத்தட்ட ஓர் அகோரியை நினைவூட்டியது அந்த முகம்.

சற்றே சுதாரித்துக் கொண்டார் பிரகாஷ்.

“என்னய்யா இப்படி மாறீட்ட?“

“மாத்தீட்டீங்க சார்“ என்றபடி தன் சட்டைப்பையில் கையை விட்டான் அந்தப் புதியவன்.

நிலைதடுமாறி பிரகாஷ் ஓடிக்கொண்டிருந்தார்.

அந்த உயர்ந்த மனிதனின் கையில் இருந்த கத்தியில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

பிரகாஷின் வெள்ளைச்சட்டை முழுக்க சிவப்பாக மாறிக்கொண்டிருந்தது.

“மச்சி! என்னடா பீட்டராக்ஸா இருக்கானுங்க? தமிழ்ப்பாட்டுக்கு ஒரு குத்து குத்துவானுங்கனு பாத்தா, எல்லாம் இங்கிலீஷ் பாட்டுக்கு ஒப்பாரி வைக்குறாங்க!“ சற்று வெறுப்புடனே கேட்டான் விக்னேஷன்.

“இதான் மச்சி வெஸ்டர்ன் ஸ்டைல்“ என்றான் ராஜசேகர்.

“என்ன கொடுமையோ… நான் கிளம்புறேன்... அவசரமா உச்சா வருது“

“சரி இரு… நானும் வரேன்“

இருவரும் அங்கிருந்து நகர்ந்தனர்.

வெளிக்கதவு பூட்டியிருந்தது. பிரகாஷ் சாவியைத் தேடினார். உயர்ந்த மனிதனின் கையில் சாவி குலுங்கிக்கொண்டிருந்தது.

‘‘இது நான் எடுத்துட்டு வந்த பூட்டு சார். சாவி என் கையில தான் இருக்கும்‘‘ சிரிப்பு காற்றில் ஒலித்தது. பைத்தியக்காரத் தனமான சிரிப்பு.

‘‘பைத்தியக்காரா! ஏன்டா உனக்கு என்ன வேணும்?‘‘

‘‘பைத்தியக்காரனா? சாகும்போதும் அடுத்தவன் மேல கோபப்படுறியே... நீதாண்டா பைத்தியக்காரன். எனக்கு தேவையானத நீ மட்டுமில்லடா, யாராலும் தர முடியாது‘‘

வேறு வழியின்றி அங்கிருந்து இடப்பக்கம் ஓடினார் பிரகாஷ். மாடிப்படியில் வேகமாக ஏறினார். இரத்தம் சொட்டிக்கொண்டேயிருந்தது...

‘‘டேய் மாமா... என்னடா ஒரு பாத்ரூமுக்கு இவ்வளவு தூரம் நடக்குறோம்?‘‘

‘‘வேற வழி? எது தேவையோ அதக் கட்டுறத விட்டுட்டு, தேவையில்லாததக் கட்டி வச்சுருப்பானுங்க. லைப்ரரியெல்லாம் யாருக்கு வேணும்!’’

‘‘எனக்கு வேணும். நான் செஞ்சத் தப்புக்கு எனக்கு இன்னும் வேணும். என்ன மன்னிச்சுடு. இனிமே எந்தத் தப்பும் செய்ய மாட்டேன். என் உயிர மட்டும் விட்டுடு‘‘

‘‘உயிர மட்டும்தான் சார் விடப்போறேன். தனியா காத்துல‘‘

அவன் கையில் இருந்த கத்தி அவர் நெஞ்சைக் கீறியது. மேலிருந்து கீழாக அவரது நடு நெஞ்சில் அவன் கீறினான். துடித்துக்கொண்டே பின்னோக்கி நகர்ந்தவர், கால் இடறி மாடியில் இருந்து கீழே விழுந்தார். அவர் வழுக்கைத் தலை இரண்டாகப் பிளந்தது. வெளியே தொங்கியது அத்தனை பேரையும் ஆட்டி வைத்த சில நூறு கிராம் எடை கொண்ட அந்த மூளை. அவரது வலது கண் சற்று வேகமாகத் துடித்தது. மாடியில் இருட்டில் நின்றுகொண்டிருந்த அந்த உருவத்தின் பல் பளீரெனத் தெரிந்தது. எதையோ சாதித்த பரவசம் அவன் முகத்தில் தெரிந்தது.

*‘‘தூமையும் திரண்டுருண்டு உன்னைப்போல் ஆனதே*

*ஆமைபோல் வாழ்ந்த ஜீவனின் உயிரும் போனதே‘‘*

என்று உரக்கக் பாடிய அவன் இப்போது சித்தனாகவே காட்சியுற்றான்.

அனைவரும் கல்ச்சுரல்ஸில் மூழ்கியிருக்க, விக்னேஷனும் ராஜசேகரும் கழிவறை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர்.

“டேய்! இங்க பாருடா இரத்தம்!“ என்றான் விக்னேஷன்.

“ஏதாவது மேக்கப் சாயமா இருக்கப் போது! நல்லாப் பாரு”

“டேய்! இல்லடா ரத்தம் சொட்டியிருக்கு பாரு... டேய்! இது மாடிப்பக்கம் போகுதுடா“

“சரி இரு... மாடி வரை போய் என்னானு பாப்போம்“

“இல்ல! நான் வரல. ஒழுங்கா செக்கியூரிடியக் கூட்டிட்டு வருவோம். என் பேச்சக் கேளு“

“ஏன்டா இப்படி பயந்து சாகுற? நான்தான் இருக்கேன்ல. என்கூட வாய மூடிக்கிட்டு வா“

இருவரும் இரத்தத்துளிகளைப் பின்தொடர்ந்து மாடி நோக்கிச் சென்றனர். அது ஒரு முட்டுச்சுவரிடம் சென்று முடிந்தது.

அங்கு நின்று கீழே எட்டிப்பார்த்தார்கள். இருள் சூழ்ந்திருந்ததால் எதுவும் தென்படவில்லை.

இராஜசேகர் லைட்டின் ஸ்விட்சைத் தேடினான். இறுதியில் அந்தக் காரிடாரின் லைட்டைப் போட்டவுடன் அதன் வெளிச்சம் வெளியே பரவியது. அந்த மங்கலான ஒளியில் கீழே ஒரு உருவம் கிடப்பதை யூகிக்க முடிந்தது .

இப்போது விக்னேஷன் லைட் ஸ்விட்ச் போர்டைக் கண்டு அலறினான். அதில் இரத்தக்கறை படிந்திருந்தது...

கடைசியாய் நடப்பதாயிருந்த ‘ராக் ஷோ’ ரத்தாகியிருந்தது. பிரகாஷின் பிணத்தைச் சுற்றி ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. மாணவர்கள் தங்களுக்குள் மரணத்தைப் பற்றி புதுப்புது கற்பனைக்கதைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்போது கூட்டம் வேகமாகக் கலைந்தது, காக்கிச்சட்டைகள் வந்ததால்...

# 2

மோ ப்பநாய்களும், ஃபாரன்ஸிக் ஆட்களும் பிணத்தைச் சுற்றி வேலை செய்து கொண்டிருந்ததை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர் விக்னேஷனும் ராஜசேகரனும்.

‘‘யாரு தலைவரே அந்தப் பசங்க?‘‘ ஹெட் கான்ஸ்டபிள் ஏழுமலையைக் கேட்டபடி வந்தார் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன்.

‘‘இவனுங்கதான் சார் ஃபர்ஸ்ட் பாத்தது... டேய் இங்க வாங்கடா‘‘

பயந்து கொண்டே அங்கே வந்தான் விக்னேஷன். ‘‘ஏய்! உனக்கு மட்டும் தனியா சொல்லணுமா‘‘ என்று இராஜசேகரை அதட்டினார் கான்ஸ்டபிள்.

‘‘சொல்லுங்க... என்ன நடந்துச்சு?‘‘ வினவினார் இன்ஸ்பெக்டர்.

‘‘காலைலயிருந்து எத்தனை பேர் சார் இதே கேள்விய கேப்பீங்க. ரெஸ்ட்ரூம் போனோம். அங்க அவரு செத்து கிடந்தாரு. அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும். அந்தாளு உயிரோட இருக்கும் போதும் பிரச்சனை. செத்ததுக்கு அப்புறமும் பிரச்சனை‘‘ சீறினான் இராஜசேகர்.

‘‘ஏய்... இன்னா திமிரா பேசுற? மரியாத தெரியாது?‘‘

‘‘ஏழுமலை... விடுங்க. இளவட்டம், அப்படித்தான் இருப்பாங்க. நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்கடா. ஏதாவது சொல்லணும்னு நினைச்சா எனக்கு கால் பண்ணுங்க.

‘‘ஏழுமலை... என் நம்பரைக் கொடுத்துருங்க‘‘

அதைச் சட்டைசெய்யாமல் இராஜசேகர் விக்னேஷனை இழுத்துக் கொண்டு நகர்ந்தான்.

‘‘ரொம்ப சூடா இருக்கானுங்க‘‘

‘‘சொல்லுங்க சார். உள்ள வச்சு விசாரிக்கலாம். பையன் கொஞ்சம் திமிராதான் பேசுறான்‘‘ என்றபடி முன்னே நகர்ந்தார் ஏழுமலை.

‘‘அதெல்லாம் வேணாம். இது ரொம்ப சென்சிடிவ் மேட்டர். பக்குவமா ஹேண்டில் பண்ணனும். அதுவும் இல்லாம பிணத்தப் பாத்து பயந்து

போயிருக்கானுங்க. அதான் என்ன பேசுறோம்னு தெரியாம பேசுறான். நீங்க அவனுங்களுக்குத் தெரியாம அவனுங்க நடவடிக்கைய நோட் பண்ணிக்கிட்டு இருங்க‘‘

‘‘ஏன் சார்... இவனுங்க மேல ஏதாவது சந்தேகம்..!’’ என்று ஏழுமலை இழுக்க, ‘‘அதெல்லாம் இல்ல. அவன் பேசுறதப் பாத்தா அவன் கொலை பண்ணீருப்பான்னு எனக்குத் தோணல. ஏதோ வெறுப்புல கத்துறான். இவனுங்கதான முதல்ல டெட்பாடியப் பாத்திருக்கானுங்க. கொலைகாரன் இவனுங்கள விட்னஸா நினைச்சான்னா, இவனுங்க உயிருக்கு ஆபத்து வரும். அதான் அவனுங்க மேல ஒரு கண்ணு இருக்கட்டும்னு சொன்னேன்‘‘

திடீரென இன்ஸ்பெக்டரின் செல்போன் ஒலித்தது.

‘‘சொல்லுங்க சார்‘‘

மறுமுனையில் அசிஸ்டென்ட் கமிஷனர் தேவ்.

‘‘ம்ம்.. கார்த்திகேயன்... இன்வெஸ்டிகேஷன் எப்படி போய்ட்டு இருக்கு?‘‘

‘‘எல்லா பிராஸசும் நடந்துக்கிட்டிருக்கு. மோடிவ் என்னனு தெரியல. கொலைய ஃபர்ஸ்டு பாத்ததா சொன்ன ரெண்டு பசங்கள விசாரிச்சுகிட்டு இருக்கோம்‘‘

‘‘பாத்து கேர்ஃபுல்லா ஹேண்டில் பண்ணுங்க. காலேஜுக்குள்ள வச்சு கொன்னுருக்கான்னா சாதாரண விஷயமில்ல. திஸ் மஸ்ட் பி ஏ பிளான்ட் மர்டர்‘‘

‘‘ஆமா சார். பெர்ஃபக்ட் பிளானிங். பாடியப் பாத்தா அப்படித்தான் தெரியுது. ரொம்பக் கொடூரமா கொன்னுருக்கான். அதான் சிசிடிவி கேமரால ஏதாவது பதிவாகியிருக்குமானு விசாரணை பண்ணிக்கிட்டு இருக்கோம்‘‘

‘‘நான் ஸ்பாட்டுக்கு வர்றது நல்லதாப்படல. அதனால நீங்களே விசாரிச்சுட்டு, டைரக்டா டி.ஜி.பி ஆபீஸ் வந்துடுங்க. 3 மணிக்கு. ஆல்ஸோ கைண்ட்லி அப்டேட் மீ‘‘

போனை சற்று வேகமாகத் துண்டித்தார் இன்ஸ்பெக்டர்.

‘‘யாரு சார்?‘‘

‘‘ஏ.சி பயந்தாங்கொள்ளிப்பய. ஸ்பாட்டுக்கு வரமுடியாதாம். சென்ஸிட்டிவான இஷ்யூவாம். அவர் வந்தா சீரியஸ் ஆகிடுமாம். நேத்து வந்த

பய எனக்கு அட்வைஸ் பண்ணுறான்‘‘

‘‘பின்ன... அவரு இப்பதான் புதுசா டிரான்ஸ்ஃபர் ஆகி வந்துருக்காரு. இப்பவே கொலை கொள்ளைன்னா பிரஸ்ஸு சும்மா இருக்குமா? அதான் வெளீல வர பயப்படுறாரு. இருந்தாலும் ஏசி கொஞ்சம் தொடைநடுங்கிதான் சார்‘‘

‘‘சரிசரி. வீடியோ ஏதாவது கிடச்சுதா?‘‘

‘‘நம்ம ஆளுங்கதான் செக்கியூரிட்டி ஆஃபீஸ்ல விசாரிச்சுக்கிட்டு இருக்காங்க. நீங்க வந்தீங்கன்னா நம்மளும் போய் பாத்துட்டு வரலாம்‘‘

‘‘வாங்க... என்னமோ சினிமா பாக்கலாங்கிற மாதிரி கூப்புடுறீங்க...!’’

‘‘என்ன சார். பேர்ல மட்டும் வெற்றினு வச்சுருக்கீங்க? கோட்ட விட்டுட்டீங்களே‘‘ என்று செக்கியூரிட்டி ஹெட் வெற்றிச்செல்வத்தைப் பார்த்து ஏளனமாகக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

‘‘சார். அளந்து பேசுங்க. எக்ஸ் ஆர்மி‘‘

‘‘நான் ஏதும் தப்பா கேக்கலயே சார். உங்க கண்ட்ரோல்ல காலேஜ் இருக்கும்போது உள்ள வந்து ஒருத்தன் வேலையக் காட்டீட்டுப் போயிருக்கான். நீங்க என்னன்னா எக்ஸ் மிலிட்டரி ஒய் மிலிட்டரினு புலிக்கதை சொல்லீட்டு இருக்கீங்க‘‘

தான் தவறு செய்துவிட்டோம் என்பது தெரிந்தும், வெற்றிச்செல்வம் தன் சுயகவுரவத்தை விட்டுத்தராமல் பேசினார். ‘‘என்ன சார் பண்ணுறது. ஏதாவது பிரச்சனைனா எங்க தலதான் உருளுது. நான் பத்து வருஷமா செக்கியூரிட்டி ஹெட்டா இருக்கேன். இதுவரைக்கும் எந்தப் பிரச்சனையுமில்லாம ஸ்மூத்தாதான் போய்க்கிட்டுருந்தது. இந்த கல்ச்சுரல்ஸ் கிட்டத்தட்ட ஐம்பது வருஷத்துக்கு மேல நடக்குது. எந்தத் தப்பும் நடந்ததாகவும் நாங்க கேள்விப்படல‘‘

‘‘சும்மா சப்பக்கட்டு கட்டாதீங்க சார்…‘‘

‘‘இப்ப என்ன சார் பண்ண சொல்றீங்க. என்னப் பொறுப்பேத்துக்க சொல்றீங்களா?‘‘ வெற்றிச்செல்வத்திற்கு உடம்பெல்லாம் வேர்த்திருந்தது. அந்த ஆஜானுபாகுவான இராணுவ வீரனின் உடம்பு சற்றே நடுங்கிக்கொண்டிருந்தது.

“நீங்க பொறுப்பேத்துக்கிட்டு எங்களுக்கு என்ன சார் பிரயோஜனம். இனி எங்க தூக்கம் போச்சு. உள்ள வந்தவங்கள செக் பண்ணி அனுப்புனீங்களா?“

“சார்... மத்த நாள்னா செக் பண்ணிதான் அனுப்புவோம். கல்ச்சுரல்ஸ் நடக்கும்போதெல்லாம் செக்கிங்க் நாட் பாசிபுள் சார். உங்களுக்குத் தெரியாததா? ஸ்டுடன்ட்ஸ் அது இதுனு குதிப்பாங்க. அதனால சந்தேகப்படுற மாதிரி இருந்தாதான் செக் பண்ணுவோம். ஆனா இன்னைக்கு அப்படி யாரும் போகல“

“சரி. வீடியோ ஏதாவது ரெக்கார்டு ஆகி இருக்கா?“

“எங்க சைட்ல இருந்து தரோவா செக் பண்ணிட்டோம். ஒரு க்ளூவும் இல்ல. உங்க ஆளுங்களும் வந்து பாத்தாங்க. வேணும்னா நீங்களும் ஒருமுறை செக் பண்ணிருங்க“

“அத நான் வேற பாக்கணுமா? ஏழுமலை... போய் நீங்க வீடியோவ பாத்துட்டு அப்படியே சி.டில ரைட் பண்ணீட்டு வந்துடுங்க” என்றார் இன்ஸ்பெக்டர், தன் செல்ஃபோனை இயக்கிக்கொண்டே...

# 3

“இங்கெல்லாம் வரக் கூடாதுமா... கிளம்பு” மஞ்சள் புடவை அணிந்த அந்த வயதான பெண்மணியை விரட்டிக் கொண்டிருந்தார் சென்ட்ரி.

“ஏன்! கவர்மென்ட் ஆபீஸ்தானே இது! வெள்ள நிவாரண நிதிக்கு இங்கதான் மனு கொடுக்கணும்னு சொன்னாங்க... நீ என்னனா இப்டி

வெரட்டுறீயே தம்பி!''

''அதெல்லாம் தாசில்தார் ஆஃபீஸ்ல போய் கேளுமா... இது டி.ஜி.பி ஆஃபிஸ்...''

சென்ட்ரி அந்தப் பெரியம்மாவைப் போராடித் துரத்திக் கொண்டிருந்தார்.

வாசலில் பெரிய கேட். அருகில் உயர்ந்த ஒரு போலீஸ்காரர், உள்ளே வரும் கவர்மெண்ட் கார்களுக்கு சல்யூட் அடித்துக்கொண்டிருந்தார்.

டி.ஜி.பி அலுவலகம்

சென்னை—600004

வெளியே நிற்கும் காவலரைக் கடந்து உள்ளே நுழைந்தால், வரிசையாக கவர்மென்ட் கார்கள் நின்று கொண்டிருக்கும். சற்று வலப்புறம் திரும்பி, மீண்டும் இடப்புறம் திரும்பி நேராகச் சென்றால் கடைசியில் வரும் அறையில்தான் மீட்டிங் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது.

''ஃபேமிலி முன்பகை ஏதாவது?'' மிகவும் மெத்தனமாக இருந்தது அசிஸ்டென்ட் கமிஷனர் தேவின் கேள்வி. டீயை உறிஞ்சிக் கொண்டிருந்த கான்ஸ்டபிள் ஏழுமலை வேகமாக தேவை ஒரு பார்வை பார்த்தார். 'இவன்லாம் எப்படி ஏ.சி ஆனான்!' என்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

கார்த்திகேயன் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு பேசினார். ''ஃபேமிலி பிரச்சனையா இருந்தா இவ்ளோ ரிஸ்க் எடுத்து காலேஜுக்குள்ள போட மாட்டாங்க சார்''

''ஐ தாட் சோ'', மேலும் தொடர்ந்தார் தேவ். ''காலேஜுக்குள்ள தைரியமா வந்திருக்கான்... மாட்டிக்காம தப்பிச்சிருக்கான்... அவனுக்கு அந்தக் காலேஜ் பத்தி நல்லாத் தெரிஞ்சிருக்கு''

''இவன் என்ன சொன்னதையே திரும்பித் திரும்பி சொல்றான்'' என்று முணுமுணுத்துக் கொண்டார் உதவி ஆய்வாளர் ஆண்டனி. அந்த அறையில் அவர்கள் நால்வர் மட்டுமே இருந்தனர். ஏழுமலை பெரிதாக எதைப் பற்றியும் அலட்டிக் கொள்ளவில்லை. அவருக்கு எப்போதாவதுதான் இது போன்று மீட்டிங் அறையினுள் நுழைய வாய்ப்பு கிட்டும். கிட்டும் வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்திக் கொள்வார், நொறுக்குத் தீனிகளை வாங்கித் தின்பதன் மூலம்.

அசிஸ்டென்ட் கமிஷனர் தேவ் புதிதாகப் பதவி ஏற்றவர். ட்ரைனிங்குக்குப் பின் சில பல ஊர்களில் பொறுப்பேற்று, தன் மெத்தனப் போக்கினால் பல ஊர்களுக்கு மாற்றல் பெற்றவர். இறுதியில் சில பல லட்சங்களை லஞ்சமாக இறைத்து மீண்டும் தான் வளர்ந்த ஊரான சென்னைக்கே வந்துவிட்டார். தான் ஒரு பெரிய திறமைசாலி இல்லை என்பது தேவிற்குத் தெரியும். அது மற்றவர்களுக்குத் தெரிந்துவிடாமல் பார்த்துக்கொள்ள அவர் பெரிதும் முயல்வார். இருந்தும் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் தேவை தெளிவாக எடை போட்டு வைத்திருந்தார். 15 வருட அனுபவம் கொண்ட கார்த்திகேயனுக்கு, வயது நாற்பதைத் தொட்டு விட்டது. அவர் திறமைக்கேற்ற அங்கீகாரம் அவருக்குக் கிடைக்கவில்லை என்பதை அவர் நன்கறிவார். இந்த முறை இந்தக் கேசில் உண்மைகளைக் கண்டறிந்து, வேகமாக அடுத்த படிக்குச் செல்லவேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். அதனால்தான் கொலை நடந்து ஓர் இரவு முடிவதற்குள் பல விடயங்களை வேகமாகக் கண்டறிந்திருந்தார்.

தேவ் எதையோ வெகு நேரமாக சிந்தித்துக் கொண்டிருக்க, கார்த்திகேயன் இடைமறித்துப் பேச முயன்றார். தேவ் கார்த்திகேயனை உதாசீனப் படுத்திவிட்டு மீண்டும் சிந்திக்கத் தொடங்க, வேகமாக உள்ளே நுழைந்தார் டி.ஜி.பி வீரபத்திரன்.

அனைவரும் எழ எத்தனிக்க, வீரபத்திரன் அதெல்லாம் வேண்டாம் என்பது போல் வேகமாகக் கையசைத்தார். பின் தேவ் பேசத் தொடங்கினார், ‘‘சார்... பெர்ஃபெக்டா பிளான் பண்ணி இருக்காங்க...’’

‘‘யோவ்... அதான் ஃபோன்லயே சொல்லிட்டியே!’’ என்றவாறே கார்த்திகேயனைப் பார்க்க, கார்த்திகேயன் வாய்ப்பு கிட்டிவிட்டது என்பதை உணர்ந்து வேகமாகப் பேச ஆரம்பித்தார்.

‘‘சார்... இதுவரை மேஜர் க்ளூ எதுவும் கிடைக்கல..’’

வீரபத்திரன், ‘‘சிசிடிவி?’’

‘‘பிரகாஷ் தான் ஹெட் வார்டன். செக்யூரிட்டி கண்ட்ரோலும் அவர்கிட்ட இருந்திருக்கு. யூனிவெர்சிடில 33 கேமரா பொருத்த ஃபண்ட் ஒதுக்கி

இருக்காங்க... ஆனா இவர் 12 கேமரா பொருத்திட்டு பொய் கணக்கு எழுதி இருக்கார். அதுலயும் அஞ்சு கேமரா ரிப்பேர்''

வீரபத்திரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''தன் வினை தன்னைச் சுடும்... கொடும... அந்த கேமராலயாவது எதாச்சும் மாட்டுச்சா?''

''இல்ல சார்... அவனுக்கு எந்தெந்த கேமரா வர்கிங்க்னு தெரிஞ்சிருக்கணும். அதான் கேமரால சிக்காம உள்ள நுழைஞ்சி இருக்கான். காலேஜ் பின்னாடி இருக்குற சுவர்ல ஏறிக் குதிச்சு தான் உள்ள வந்திருக்க முடியும்... சிசிடிவி—ல சிக்காம டிபார்ட்மென்ட் வரைக்கும் வந்திருக்கான். பிரகாஷ் வேலை பாக்குற ப்ரொடக்சன் டிபார்ட்மென்ட்ல ஒரு கேமரா மட்டும் இருந்திருக்கு. அதுவும் போன வாரம்தான் ரிப்பேர் ஆகியிருக்கு. பிரகாஷ் அதக் கண்டுக்கல...''

''ம்ம்ம்... நிறைய ஊழல் பண்ணி இருக்கார்... பர்சனல் லைஃப்?''

''பர்சனலி வெரி கிளீன் சார். லேட் மேரேஜ். பர்சனல் லைஃப்ல யாரும் எதிரிங்க இல்ல... சோ, அந்தக் காலேஜ் சம்மந்தப்பட்ட யாரோ ஒருத்தன்தான் போட்ருக்கனும்''

''அது என்ன சிங்குலரா சொல்றீங்க... ஏன் கேங்கா இருக்கக்கூடாது?''

''நோ சார். ஃபாரான்சிக் ரிப்போர்ட்ஸ் ஆர் கிளியர்… நிறைய பேர் வந்த தடயம் ஏதும் இல்ல. நேத்து சாயந்தரம் அஞ்சு மணிக்குத் தான் அந்த எடத்தக் கழுவி விட்டுருக்காங்க... அங்க வேலை பாக்குற ஆயாவ விசாரிச்சோம். வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை டிபார்ட்மென்ட்ட கிளீன் பண்ணுவாங்களாம். நேத்து நைட் கொலை நடந்திருக்கு... இடைப்பட்ட நேரத்துல யாரும் வந்த மாதிரி தெரியல''

''ஒருத்தனத் தவிர…!''

''அஃப்கோர்ஸ் சார். அதுக்கப்பறம் இந்த ரெண்டு பசங்க பார்த்திருக்காங்க''

சிறிது நேரம் சிந்தித்த வீரபத்திரன், ''அடாப்சி?'' ஆர்வமாக வினவினார்.

''நேத்து நைட் பதினோரு மணி போல கொலை நடந்திருக்கலாம். பிரகாஷ் உடம்பெல்லாம் காயம். ஷார்ப் வெப்பன் இஞ்சுரிஸ். கத்தியா இருக்கலாம். பட் டெத் ஈஸ் ட்யூ டூ…'' கார்த்திகேயன் சிறிது தயங்கினார்.

பின் ஒரு வழியாகச் சொல்லி முடித்தார். ‘‘டெத் ஈஸ் ட்யூ டு சிவியர் ஹெட் இஞ்சுரி… மேல இருந்து விழுந்ததுல, கல்லு மேல அவர் தல இடிச்சிருக்கு… அவர் ஸ்கல் ஓபன் ஆகி இருக்கு’’

அனைவரின் கண்களிலும் ஒரு வகையான பயம் தெரிந்தது.

வீரபத்திரன், ‘‘ஹீ மஸ்ட் பீ ஏ சாடிஸ்ட். சோ, அவர டார்ச்சர் பண்ண தான் ஆயுதத்தால தாக்கி இருக்கான். அவர் பயந்து போய் மாடில இருந்து விழுந்திருக்கார்?’’

‘‘அப்படிதான் நானும் நினைக்கிறேன் சார்‘‘

அங்கு பெருத்த அமைதி நிலவியது. தாங்கள் மிகக் கொடூரமான கொலைகாரனைத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர். அங்கே ஒருவருக்கு மட்டும் தெரியும், இந்தக் கொலைகள் இத்துடன் நிற்கப்போவதில்லை என்று..

# 4

‘‘எ ப்டி சார் இன்னொரு கொலை நடக்கும்னு கரெக்டா சொல்றீங்க?’’ இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனிடம் வினவினார் ஏழுமலை.

ஏழுமலையும் கார்த்திகேயனும் மட்டுமே காவல் நிலையத்திற்குள் இருந்தனர். நைட் ஷிஃப்ட். வெளியே நிற்க வேண்டிய சென்ட்ரி ரிசப்ஷனில் உறங்கிக் கொண்டிருந்தார். மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. காவல் நிலையத்தின் வலது புறத்திலும், பின்புறத்திலும் செடிகளும், மரங்களும் நிறைந்து இருந்தன. காவல் நிலையத்தின் இடது புறத்தில், பறிமுதல் செய்யப்பட்ட ஆட்டோக்களும், பைக்குகளும் நின்று கொண்டிருந்தன.

“ஒருவாரமா விசாரிச்சும் எந்தக் க்ளூவும் கிடைக்கலையே... அதனாலதான் சொன்னேன்” அலட்டிக்கொள்ளாமல் பதில் சொன்னார் கார்த்திகேயன்.

“புரியலயே சார்...”

“உங்களுக்குப் புரிஞ்சாதான் ஆச்சர்யம்” என்றவாறே கார்த்திகேயன் சிகரெட் பெட்டியை பாக்கெட்டில் இருந்து எடுத்து ஏழுமலையை நோக்கி நீட்ட, அவர் ஒரு சிகரெட்டை எடுத்துக் கொண்டார். கார்த்திகேயன் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைக்கும் வரை ஏழுமலை காத்திருந்தார். பின் அவரும் புகை பிடிக்கத் தொடங்கினார். சிகரெட்டை இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு, கார்த்திகேயன் பேச்சைத் தொடர்ந்தார்.

“பிரகாஷ் கொஞ்சம் முசுடு தான். அதனால காலேஜ்ல சில பேருக்கு அவர் மேல கோபம் இருக்கு. ஆனா இவ்ளோ கொடூரமா கொலை பண்ற அளவுக்கு அவருக்கு எதிரிங்க யாரும் இல்ல... அவர் சாதாரணமான ஒரு ஆளு. அவரக் கொல்லணும்னா வேற எங்க வச்சு வேணும்னாலும் கொன்னுருக்கலாம்...

“காலேஜ ஒட்டி இருக்குற ஸ்டேஷன் பார்டர் ரோட் வழியா தான் அவரு எப்பவும் வீட்டுக்குப் போவார்... ஏழு மணிக்கு மேல அந்த ரோடே வெறிச்சோடி தான் கிடக்கும்... அங்க அவர போடுறதுதான் ஈஸி... ஏன் மெனக்கெட்டு காலேஜுக்குள்ள பூந்து அவரக் கொல்லணும்...?”

“தான் எவ்வளவு பெரிய திறமைசாலினு காட்றதுக்காக அவன் அப்டி பண்ணிருக்கலாம்...”

“கரெக்ட். அதனால தான் சொன்னேன்... இந்த மாதிரி திறமைசாலிங்களால ரொம்ப நாள் சும்மா இருக்க முடியாது. அவனுக்கு ஏதாவது மோட்டிவ் இருக்கா, இல்ல இது வெறும் ரேண்டம் சைக்கோ கில்லிங்கானு இன்னொரு கொலை நடந்தாதான் சொல்ல முடியும்...“

“இன்னொரு கொலை நடக்கலனா?”

“பைல க்லோஸ் பண்ணிட்டு, நைட் ஷிஃப்ட்ல டைம் பாஸ் பண்ணவேண்டியது தான்...”

‘‘இன்னொரு கொலை நடக்கணும்னு நான் அந்த சுடலைய வேண்டிக்குறேன் சார்... அப்பதான் நீங்க அந்தக் கொலைகாரனப் புடிக்க முடியும்... நமக்கும் ப்ரமோஷன் கிடைக்கும்... நானும் எத்தனை நாள் தான் இப்டி ஹெட்கான்ஸ்டபிளாவே இருக்கிறது’’

சிரித்தவாறே கார்த்திகேயன் தொப்பியை எடுத்து மாட்டிக்கொண்டு, ‘‘செகண்ட் ஷோ விடுற நேரமாச்சு... நான் வரதராஜா தியேட்டர் வரைக்கும் ரவுண்ட்ஸ் போயிட்டு வந்துர்றேன்... ஸ்டேஷனைப் பார்த்துக்கோங்க’’ என்று சொல்லி விட்டு வெளியே நகர்ந்தார்.

ஆனால், ஸ்டேஷனுக்கு வலதுபுறத்தில் இருக்கும் ஜன்னல் வழியே இவ்வளவு நேரம் ஒரு உயர்ந்த உருவம் அவர்களை வேவு பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை அவர் கவனிக்கவில்லை. கார்த்திகேயனைப் பின்தொடர்ந்து வந்த ஏழுமலை, வாசலில் நின்று, சுற்றும்முற்றும் பார்த்தார். அதற்குள் அந்த உருவம் காவல் நிலையத்திற்கு அருகாமையில் இருக்கும் மரத்திற்குப் பின் சென்று ஒளிந்து கொண்டது. பைக்கின் அருகில் சென்ற கார்த்திகேயன், எதையோ மறந்து வைத்துவிட்டவரைப் போல் மீண்டும் திரும்பி வந்தார்.

‘‘என்ன சார்... என்ன ஆச்சு...?‘‘ என்று ஏழுமலை பதற்றத்துடன் வினவ, ‘‘ஒண்ணுமில்ல ஏழுமலை... ஒரு முக்கியமான வேலையை மறந்துட்டேன்...’’ என்றவாறே மரத்தை நோக்கிச் சென்றார். மரத்திற்குப் பின்னால் நின்றுக்கொண்டிருந்த அவன், தன் சட்டைக்குள் கையை விட்டுக் கத்தியை எடுத்தான். பிரகாசைக் குத்திய அதே கத்தி. அவன் இதயம் வேகமாகத் துடித்தது. அவன் உடலெல்லாம் வேர்த்தது, எனினும் அவனுடைய கத்தி கார்த்திகேயனின் நெஞ்சில் இறங்குவதற்குத் தயாராகக் காத்திருந்தது. கார்த்திகேயன் மரத்தின் அருகே சென்று சிறுநீர் கழிக்கத் தொடங்கினார். கத்திக்கு இப்போது வேலை இல்லை, தான் இருப்பதை கார்த்திகேயன் அறிந்திருக்கவில்லை என்பதை அந்த ‘இருட்டு மனிதன்’ உணர்ந்ததும், கத்தியை மீண்டும் சட்டைக்குள் வைத்துக்கொண்டான்.

கார்த்திகேயன் பைக்கை எடுத்துக்கொண்டு, வெளியே சென்றுவிட, ஏழுமலை மட்டும் வாசலில் நின்றவாறே, வலது புறத்தில் இருக்கும் அந்த மரத்தையே உற்றுப் பார்த்தார். மரம் அமைதியாக நின்றது. ஏழுமலையும்

அமைதியாக உள்ளே சென்றுவிட, மரத்திற்குப் பின்னே நின்ற அந்த இருட்டு மனிதன் கணநேரத்தில் அங்கிருந்து மறைந்தான்.

***

K.I.T கல்லூரி இயல்பு நிலைக்குத் திரும்பி இருந்தது. மணி சாயங்காலம் 5.30. கல்லூரியின் வடக்கு மூலையில் உள்ள விவேகானந்தா அரங்கில் கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்தக் கல்லூரியின் விழாக்கள், கூட்டங்கள் எல்லாம் அந்த அரங்கில் தான் நடக்கும். பிரகாஷ் இறந்து எட்டு நாட்கள் ஆகியிருந்தன. சம்பிரதாயமாக ஒரு அஞ்சலி கூட்டம் ஏற்பாடு செய்து அனைவரும் சம்பிரதாயமாகப் பேசிக் கொண்டிருந்தனர். பேராசிரியர் இளங்கோ, பிரகாசைப் பற்றி மூச்சிரைக்கப் பேசிக் கொண்டிருந்தார். மேடையில் அமர்ந்திருந்த பலரில், ஓரிருவர் மட்டுமே அவரது பேச்சில் கவனம் செலுத்தினர். மற்றபடி பலரும் கூட்டம் முடிந்தபின் தரப்படும் சமோசா, காபிக்காகத்தான் வந்திருந்தனர். மாணவ மாணவிகளில் சிலர் கவனிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருக்க, பலர் வாட்சாப்பில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

கடைசி வரிசையில் அமர்ந்து அரங்கை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார் ஹெட்கான்ஸ்டபிள் ஏழுமலை. தூக்கம் அவர் கண்களைத் தழுவிற்று. திடீரென்று கைபேசி ஒலிக்க, ஃபோனை எடுத்துப் பார்த்தார். டிஸ்ப்ளேவில் இன்ஸ்.கார்த்திகேயன் என்று வந்தது. “இவனுக்கு வேற வேலையே இல்லை” என்று முனகியவாறே கைபேசியை எடுத்துப் பேசத் தொடங்கினார்.

“சொல்லுங்க சார்...”

“என்ன ஏழுமலை... கூட்டம் எப்படி போய்ட்டுருக்கு...?”

“என்ன சார்... சரியா கேக்கல... இருங்க வெளிய வரேன்” என்றவாறே விவேகானந்தா அரங்கிலிருந்து வெளியே வந்தார். ஏ.சி அறையில் இருந்து திடீரென்று வெளியே வந்ததால், சூரியன் சற்று அதிகமாகவே சுட்டது.

“சொல்லுங்க சார்...”

“மீட்டிங் எப்டி போய்ட்டிருக்குனு கேட்டேன்...”

“ரொம்ப பொங்கு பொங்குனு பொங்குறாங்க சார்... என்ன ஏன் சார் இங்க அனுப்புனீங்க…?”

“எல்லாம் காரணமாதான் ஏழுமலை. இன்னைக்கு வெள்ளிக்கிழமை... போன வெள்ளிக் கிழமை தான் பிரகாஷ் மர்டர் நடந்துச்சு. சோ நீங்க அங்க சந்தேகப்படுற மாதிரி ஏதாவது நடந்தா ரிப்போர்ட் பண்ணுங்க… குறிப்பா அந்த விட்னெஸஸ், அதான் அந்த ரெண்டு பசங்க, அவங்களுக்கு ஏதாவது ஆகாம பாத்துக்கோங்க…”

“சார்… அந்த கொலைகாரன் இங்க வருவான்னு சொல்றீங்களா?” ஏழுமலையின் குரலில் பயம் குடிகொண்டிருந்தது.

“ச்ச... அப்டிலாம் இல்ல... ஜஸ்ட் ஒரு சேஃப்டிக்காக தான் உங்கள அனுப்பினேன்… கவனமா இருங்க... நெக்ஸ்ட் வீக் ஆஃப் எடுத்துக்கோங்க...“

“ஓகே சார்” ஏழுமலை ஃபோனைத் துண்டித்துவிட்டு, தண்ணீர் குழாயை நோக்கி நடந்தார். யாரோ தன்னைக் கண்காணிக்கிறார்கள் என்ற உள்ளுணர்வு ஏற்பட, அக்கம்பக்கம் திரும்பிப் பார்த்தார். யாரும் இல்லை. ஏதோ அசம்பாவிதம் நடக்கப்போகிறது என்று அவரது உள்ளுணர்வு சொல்ல, வெளியே வந்து, யாராவது இருக்கிறார்களா என்று தேடினார். விவேகானந்தா ஹாலின் பின்புறம் இருக்கும் செடிகளுக்குப் பின்னே ஒருவன் பதுங்கிப் பதுங்கிச் செல்வதைப் பார்த்து விடுகிறார்.

“அவனே தான்”

அவன் அங்கு வருவான் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. பயம் அவரைக் கவ்விக்கொள்ள, அவர் உடம்பு நடுங்கியது.

# 5

ஏழுமலைக்கு பயம் தெளியவில்லை. எனினும் தன் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் தெரியாத அளவிற்கு பார்த்துக் கொண்டார். தான் அவனைப் பார்த்ததை அவன் தெரிந்து கொண்டு விட்டால், அது தனக்கு நல்லதல்ல என்று அவர் கருதினார். அதனால் எதுவும் நடக்காதது போல் அமைதியாகவே இருந்தார்.

இரவு தாமதமாக காவல் நிலையத்திற்கு வந்த கார்த்திகேயன், ஏழுமலையிடம் ஏதோ மாற்றம் தெரிவதைக் கண்டுகொண்டார். கார்த்திகேயன், சப் இன்ஸ்பெக்டராக இருந்த காலத்திலிருந்தே ஏழுமலையுடன் நட்பு கொண்டிருந்தார். பத்துவருடங்களுக்கு முன் அந்த சிட்லப்பாக்கம் காவல் நிலையத்திற்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தார். அதற்கு முன்பிருந்தே ஏழுமலை அங்கு பணிபுரிந்து வருகிறார். கார்த்திகேயன் புத்திசாலி. பார்வையிலேயே மனிதர்களை எடை போடத் தெரிந்த அவருக்கு, தன்னுடைய நீண்ட கால நண்பரிடம் ஏதோ மாற்றம் தெரிகிறது என்பதைக் கண்டுகொள்வது கடினமாக இல்லை. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவர் சகஜமாக நடந்து கொண்டார். இரவு அவர் மட்டும், K.I.T அரசு பொறியியல் கல்லூரி வரை ரவுண்ட்ஸ் சென்று வந்தார். மஃப்டியில் அந்தக் கல்லூரியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவலர்களுடன் உரையாடிவிட்டு, காவல் நிலையத்திற்கு கார்த்திகேயன் திரும்பும் போது மணி விடியற்காலை மூன்றாகி இருந்தது. ஏழுமலை ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். ஏழுமலை ஐம்பது வயதைக் கடந்தவர். இந்த வாரம் அவர்தான் ரோந்து பணியில் ஈடுபடவேண்டும். அவர் ஆஸ்துமா நோயாளி என்பதால் கார்த்திகேயன், இரவில் அவரை அலைய விடுவதில்லை. கார்த்திகேயன் தன் இருக்கையில் அமர்ந்து, செல்ஃபோனில் இளையராஜா பாடல்களைக் கேட்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில் அப்படியே உறங்கிப் போனார். இன்னொரு சராசரி நைட் ஷிஃப்ட்டாக அந்த நாள் கழிந்தது.

காலை ஏழு மணிக்கு அலாரம் அடித்தது. வழக்கமாக அலாரம் அடிப்பதற்கு முன்னரே, ஏழுமலை கார்த்திகேயனை எழுப்பிவிட்டு விடுவார்.

ராதா நகர் மணிகண்டன் டீ ஸ்டாலில் டீ அருந்திய பின், ஏழுமலையை அவர் வீட்டில் விட்டுவிட்டு, கார்த்திகேயன் காவலர் குடியிருப்பிற்குச் சென்றுவிடுவார். இன்று ஏழுமலை ஒரு நிலையில் இல்லை என்பதைப் புரிந்துகொண்ட கார்த்திகேயன், தானாகவே பேச்சைத் தொடங்கினார்.

"என்ன தலைவரே... டீ சாப்பிட போலாமா...?"

ஏழுமலை சம்பிரதாயமாக சரி என்று தலையை ஆட்ட,

"அப்படியே அந்தக் காலேஜ ஒரு நோட்டம் விட்டுட்டுப் போய்டுவோம்" என்றவாறே கார்த்திகேயன் வாசலை நோக்கி அடி எடுத்து வைக்க, ஏழுமலை எதுவும் பேசாமல் அவரைப் பின் தொடர்ந்தார்.

K.I.T கல்லூரி முழுக்க அமைதி குடிகொண்டிருந்தது. எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை, சந்தேகப்படும்படி யாரும் நடமாடவில்லை என்பதைத் தெரிந்து கொண்டபின் தான் கார்த்திகேயனுக்கு நிம்மதி பிறந்தது. ராதா நகரை நோக்கி பைக்கை முறுக்கினார்.

இவர்களைப் பார்த்ததுமே, மாஸ்டர் இஞ்சி டீயைப் போட்டு எடுத்து வந்து கையில் கொடுத்தார். ஏழுமலை தலையைக் குனிந்து கொண்டே டீயைக் குடிக்கத் தொடங்கினார்.

"என்ன ஏழுமலை... நேத்துலயிருந்து உங்கக்கிட்ட ஏதோ வித்தியாசம் தெரியுதே...!" என்று கேட்டவாறே ஏழுமலையைக் கூர்ந்து நோக்கினார் கார்த்திகேயன்.

"அப்டிலாம் ஒண்ணுமில்ல... வீட்டுல ஒரு சின்ன பிரச்சனை..." நிமிர்ந்து பார்க்காமலேயே பதில் சொன்னார் ஏழுமலை. அவர் பொய் சொல்கிறார் என்பது கார்த்திகேயனுக்குத் தெரியும். எனினும் மேற்கொண்டு அவர் எதுவும் கேட்கவில்லை.

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த கார்த்திகேயனின் தூக்கத்தை திடீரென்று அடித்த செல்ஃபோன் மணி கலைத்தது. நேரம் காலை பத்து.

"ஹலோ.. சொல்லுங்க சார்" தூக்கக் கலக்கம் சிறிதுமின்றி தெளிவாகப் பேசினார் கார்த்திகேயன்.

"...."

“இப்பவேவா சார்… ஓகே... வந்துடுறேன்”. போனைக் கட் செய்துவிட்டு, ஏழுமலைக்குக் கால் செய்தார்.

***

ஏ.சி பழுதடைந்திருந்தது. பழைய மின்விசிறி கடமைக்கென்று ஓடிக்கொண்டிருந்தது. ஏழுமலை, தன் முகத்திலிருந்து வழிந்து கொண்டிருந்த வேர்வையை டிஷ்யூ பேப்பரால் துடைத்துக்கொண்டிருந்தார். டிஜிபி அலுவலகம் அதே பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது.

“யூ காட் எனி க்ளூ?” இந்தக் கேள்விக்கு கார்த்திகேயனிடம் சரியான பதில் இல்லை என்பதை அசிஸ்டென்ட் கமிஷனர் தேவ் அறிந்திருந்தார். எனினும் வேண்டுமென்றே அந்தக் கேள்வியை கேட்டார்.

“இல்ல சார்.. பட்...”

தேவ் போதும் என்பது போல் கையை உயர்த்திக் காண்பித்துவிட்டு, “வீ காட் அனதர் க்ளூ... இப்பையாவது கொலைகாரனக் கண்டு புடிக்க ட்ரை பண்ணுங்க... எவ்ளோ நாள் தான் டைம் பாஸ் பண்ணுவீங்க...” என்று சொல்லிவிட்டு நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்.

கார்த்திகேயன் கோபத்தை அடக்கிக் கொண்டு, “என்ன க்ளூ” என்பது போல் ஆச்சர்யமாகப் பார்க்க, தேவ் பேச்சைத் தொடர்ந்தார்.

“நேத்து நைட் கோயம்புத்தூர்ல ஒரு மர்டர் நடந்துருக்கு... விக்டிம் நேம் கணேஷ்... கார்ப்பரேட் டிரைனர்... 35 வயசு... காலைல தான் கோயம்புத்தூர்ல இருந்து ஃபேக்ஸ் வந்துச்சு... பிரகாஷக் கொன்ன அதே ஆள் தான் இவனக் கொன்னுருக்கணும்னு டிபார்ட்மென்ட்ல சந்தேகப்படுறாங்க...”

“எப்டி சொல்றீங்க? சேம் பேட்டர்ன்?” வினவினார் கார்த்திகேயன்.

“இல்ல... இவர் உடம்புல எந்தக் காயமும் இல்ல... கழுத்து அறுப்பட்டு இறந்திருக்கார்னு ரிபோர்ட்ல இருக்கு...“

கார்த்திகேயன் தேவைக் கூர்ந்து நோக்கினார். தேவ், மேஜையில் தன் அருகாமையில் இருந்த ஃபைலை, கார்த்திகேயனை நோக்கி நகர்த்தினார். பிரகாஷின் கேஸ் ஃபைல். கார்த்திகேயனுக்கு ஏன் அந்த ஃபைலை தன்னிடம் தேவ் தருகிறார் என்று குழப்பமாக இருந்தது. ஏனெனில் அந்த ஃபைலை கம்பைல் செய்ததே அவர்தான்.

“ஹ்ம்ம்... எடுத்துப் பாருங்க...” தேவின் பேச்சைத் தட்டாமல், அந்த இன்ஸ்பெக்டர் ஃபைலைப் புரட்டினார்.

தேவ், “இப்பையாவது உங்களுக்கு ஏதாவது க்ளூ கிடச்சுதா?”

கார்த்திகேயனுக்குப் புதிதாக ஒன்றும் புலப்படவில்லை. தேவ் அதற்கு மேல் கார்த்திகேயனைக் குழப்ப விரும்பவில்லை.

“வெல்... நானே சொல்லிட்றேன்.. பிரகாஷோட க்ரைம் சீன் ஃபோட்டோஸ பாருங்க” என்றதும் கார்த்திகேயன் வேகவேகமாக ஃபைலினுள் இருந்து ஃபோட்டோக்களை எடுத்துப் பார்க்கத் தொடங்கினார்.

ஃபோட்டோக்களில் பிரகாஷ் பிணமாகக் காட்சி தந்தார்.

“விக்டிமோட நடுநெஞ்சப் பாருங்க...”

“அதான் முன்னாடியே பார்த்தாச்சே! கத்தில கீறி...” கார்த்திகேயனால் பேச்சை முடிக்க முடியவில்லை. அவருக்குப் புரிந்துவிட்டது.

“கணேஷோட க்ரைம் சீன் ஃபோட்டோ” என்று அவர் கேட்டு முடிப்பதற்குள், தேவ் கணேஷின் ப்லோ அப் செய்யப்பட்ட ஃபோட்டோவை கார்த்திகேயனிடம் விட்டெறிந்தார். வாயைப் பிளந்தவாறே இறந்து கிடந்தார் நூறு கிலோ எடைகொண்ட கணேஷ். அவரது நடு நெஞ்சை ஒருமுறை பார்த்ததும், கார்த்திகேயன் தயங்கித் தயங்கிப் பேசினார், “சோ... அடுத்தது இன்னொரு கொலையும் நடக்கப்போகுது!”

“அப்சல்யூட்லி...”

ஏழுமலைக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் அவர் முகம் தெளிவாக இருந்தது. அவர் முகத்தில் பயமில்லை. அவர் வேகமாக அந்த இரண்டு ஃபோட்டோக்களையும் எடுத்துப் பார்த்தார். பிரகாஷின் நடு நெஞ்சில் கத்தியால் ஒன்று என்று எழுதப்பட்டிருந்தது. கணேஷின் நடு நெஞ்சில் கத்தியால் இரண்டு என்று எழுதப்பட்டிருந்தது.

# 6

கோவை ஆர்.எஸ் புரத்திலுள்ள அருணாச்சலம் தெருவில்தான் கணேஷின் அலுவலகம் அமைந்திருந்தது. ஒரு டூப்ளெக்ஸ் வீட்டை ஒத்திக்கு எடுத்து அலுவலகமாக மாற்றி ‘ஜிகே கார்ப்பரேட் கன்சல்டன்சி’ என்ற நிறுவனத்தை நடத்தி வந்தார். கோவையிலேயே பிறந்து வளர்ந்த கணேஷ், அம்பாள் நகரில் உள்ள பிரபல தனியார் பொறியியல் கல்லூரி ஒன்றில் மெக்கானிக்கல் இஞ்சினீயரிங்க் படித்துவிட்டு, பத்து ஆண்டுகள் பரோடாவில் பணிபுரிந்தார். நான்கு வருடங்களுக்கு முன் கோவைக்குத் திரும்பி வந்து சொந்தமாக கன்சல்டன்சி நிறுவனத்தை தொடங்கினார். கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, கார்ப்பரேட் கம்பெனிகளில் புதிதாக வேலைக்குச் சேருபவர்களுக்கு கார்ப்பரேட் பழக்க வழக்கங்களை சொல்லித் தருவதே கணேஷின் வேலை. இதற்காக பல பெரிய நிறுவனங்கள் அவரை ஒப்பந்தம் செய்திருந்தன. கணேஷின் வங்கிக்கணக்கில் பணம் ஏறிக் கொண்டே போனது.

கணேஷ் தனியாகவே அலுவலகத்தை நடத்தி வந்தார். ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் ஒருவரை மட்டும் உதவிக்கு வைத்திருந்தார். நிறைய டைப்பிங்க் வேலைகள் இருந்தால், அதை அவுட்சோர்ஸ் செய்துவிடுவார். நேபாளி போல் தோற்றமளிக்கும் டார்ஜிலிங் வாலிபன் ஒருவன் அங்கே காவலாளியாக பணிபுரிந்து வந்தான். கார்த்திகேயன் அங்கு வரும்போது மணி காலை பத்தடித்தது. அந்த ஆசிரியரும் காவலாளியும் கணேஷ் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடன் இரண்டு கான்ஸ்டபிள்களும் இருந்தனர். கார்த்திகேயனுடன், ஏழுமலையும் ஆர்.எஸ் புரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மரியபிச்சைமுத்துவும் இருந்தனர். முதல்நாள் இரவே கார்த்திகேயனும் ஏழுமலையும் கோயம்புத்தூர் வந்துவிட்டனர். பிச்சைமுத்துவின் கையில் ஒரு சிவப்பு நிற ஃபைல் இருந்தது. கணேஷின் கேஸ் ரிப்போர்ட் அது. கார்த்திகேயன் அதை முழுவதுமாகப் படித்திருந்தார்.

கார்த்திகேயன் காவலாளியின் அருகில் செல்ல, இரண்டு கான்ஸ்டபிள்களும் சல்யூட் அடித்துவிட்டு ஒதுங்கிக்கொண்டனர். காவலாளி பதட்டமாகக் காணப்பட்டான். கார்த்திகேயன் சற்று கடுமையான குரலில்,

‘‘உண்மைய சொல்றியா... இல்ல உள்ள போறியா...?’’ என்று நேரடியாகவே கேட்டார்.

‘‘சாப்… எனக்கு ஒண்ணும் தெரியாது சாப்... முன்னாடியே எல்லாத்தையும் சொல்ட்டேன்...‘‘

‘‘நீ எதையோ மறைக்குற… சொல்லுடா...’’

அந்தக் காவலாளியின் மீது கார்த்திகேயனுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. இருந்தும் அவன் ஏன் பதட்டமாக இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள அவர் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

‘‘சாப் நான் நேபாளி இல்ல… டார்ஜிலிங்ல இருந்து வரேன்... நேபாள்னு சொன்னாதான் வாட்ச்மேன் வேலை கொடுக்றாங்க... அதான்... நேபாளினு சொல்லி வேலைக்குச் சேர்ந்துட்டேன்... மாஃப் கரோ சாப் ஜி... நான் வேற எந்தத் தப்பும் செய்யுல…’’

இதைக் கேட்டதும் அருகே நின்று கொண்டிருந்த ஆசிரியர் வின்சென்ட், ‘‘டேய் பிரியாணிலாம் வாங்கிக் கொடுத்தேனே… என்கிட்ட கூட உண்மைய சொல்லலயே…‘‘ என்று தன்னை மறந்து கத்தினார். கார்த்திகேயன் வின்சென்டை நோக்கித் திரும்ப, வின்சென்ட் ‘‘ஐ அம் வின்சென்ட், ரிடையர்ட் டீச்சர்’’ என்றவாறே கையை நீட்டினார். கார்த்திகேயனும் மரியாதைக்காக அவருடன் கை குலுக்கினார்.

‘‘இங்க எவ்ளோ நாளா வேலை செய்றீங்க..?’’

‘‘ஆச்சே... நாலு வருஷம்... கணேஷ் தம்பி ஆஃபிஸ் ஆரம்பிச்சதுல இருந்தே கூட இருக்கேன்...‘‘

வின்சென்ட்டுக்கு வயது அறுபதுக்கும் குறைவாகத்தான் இருக்கும் என்பதைக் கண்டுகொள்வதற்கு கார்த்திகேயனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. நான்கு வருடங்களாக வேலை செய்கிறார் என்றால் அவர் 58 வயதிற்கு முன்னரே ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்பதையும் கார்த்திகேயன் அனுமானித்தார்.

‘‘வி.ஆர்.எஸ் வாங்கிட்டீங்களா?‘‘

‘‘போலீஸ்காரன் போலீஸ்காரன்தான். கரெக்டா கண்டுபுடிச்சிட்டீங்க…‘‘ வின்சென்ட் புகழ்ந்ததை கார்த்திகேயன் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

“ஏன் வி.ஆர்.எஸ் வாங்குனீங்க?” தன் கேள்வியிலேயே குறியாக இருந்தார் கார்த்திகேயன்.

“எங்க சார் பசங்க சொன்ன பேச்ச கேக்குறாங்க... பசங்கள கண்டிச்சா போலீஸ் கேஸ் ஆகிடுது… அதான் அஞ்சு வருஷம் சர்வீஸ் இருக்கும்போதே வி.ஆர்.எஸ் வாங்கிட்டு வந்துட்டேன்... இங்க ராஜா மாதிரி வேலை. ஆல் இன் ஆல் நாமதான். ரிசப்ஷனிஸ்ட் வேலையில இருந்து காபி போடுற வரைக்கும்…”

வின்சென்ட் பேசிக்கொண்டே போனார். கார்த்திகேயனுக்கு கதை கேட்க நேரமோ பொறுமையோ இல்லை.

“சார் நிறுத்துங்க... நேத்து எப்ப வீட்டுக்குப் போனீங்க? அத மட்டும் சொல்லுங்க”

“எப்பவும் போறமாதிரி ஆறு மணிக்குலாம் போயிட்டேன்... காலையில ஒன்பதுல இருந்து சாயங்காலம் ஆறு வரைக்கும் தான் ஆபீஸ்“

வின்சென்டையும், காவலாளியையும் மாறி மாறி விசாரித்தும் ஒரு பிரயோஜனமும் இல்லை. காலை ஒன்பது மணியிலிருந்து ஆறு மணி வரைக்கும் அலுவலகம் இயங்கும். சரியாக ஆறு மணிக்கு வின்சென்ட் கிளம்பிவிடுவார். வேலையிருந்தால் கணேஷ் மட்டும் அங்கேயே தங்கிவிடுவார். வேலை முடிந்ததும் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு ராம் நகரில் இருக்கும் தன் வீட்டிற்கு சென்றுவிடுவார். அவர் உயிரோடு இருந்திருந்தால் சிங்கப்பூரில் உள்ள ஒரு கம்பெனியில் அன்று வகுப்பு எடுத்துக் கொண்டிருந்திருப்பார். சிங்கப்பூர் கம்பெனி அவருக்குக் கிடைத்த முதல் வெளிநாட்டு கிளையண்ட் என்பதால் வெள்ளி இரவை அலுவலகத்திலேயே கழித்துவிட்டு, சனிக்கிழமை காலை நேரடியாக விமான நிலையம் செல்லவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார். கொலை நேற்று முந்தையநாள் இரவு ஏழிலிருந்து எட்டு மணிக்குள் நடந்திருக்கிறது. மோப்ப நாய்களை வரவழைத்தும் ஒரு பயனுமில்லை. காலையில் காவலாளி இருப்பதில்லை. இரவு பத்துமணி முதல் காலை ஒன்பதுமணி வரை தான் காவலாளிக்கு வேலை. நேற்று வேலைக்கு வந்த காவலாளி தான் கணேஷின் உடலை முதலில் பார்த்திருக்கிறான். வெள்ளிக்கிழமை காலை அவர் ராம் நகர் வீட்டைப் பூட்டும் போது அண்டை வீட்டுக்காரர்கள் பார்த்திருக்கிறார்கள். நேற்று காலை போலீஸ்காரர்கள்

சென்றுதான் வீட்டின் பூட்டை உடைத்திருக்கிறார்கள். அங்கேயும் எந்தக் க்ளூவும் கிடைக்கவில்லை. மேலும், அருணாச்சலம் தெருவில் சந்தேகத்துக்கு இடமாக யாரும் நடமாடவில்லை என்று தெருவாசிகள் சொல்கின்றனர். இதெல்லாம் பிச்சைமுத்துவின் ரிப்போர்ட்டில் இருந்தது. இதை வைத்துக்கொண்டு கொலைகாரனை எப்படிக் கண்டுபிடிப்பது?

கார்த்திகேயன் அங்கிருந்து நகர்ந்தார். அலுவலகத்தைச் சுற்றி ‘‘டு நாட் என்டர்’’ என்ற டாக் (Tag) கட்டப்பட்டிருந்தது. அதை உயரத் தூக்கிவிட்டு, அடியில் குனிந்து அலுவலகத்திற்குள் நுழைந்தார். ஏழுமலையும், பிச்சைமுத்துவும் பின்தொடர்ந்தனர். தரைத்தளத்தில் வரவேற்பறை இருந்தது. இரண்டு சோஃபாக்களும் அதன் அருகே ஒரு மேஜையும் இருந்தது. அந்த மேஜையில் ஏராளமான ஆங்கில மாத இதழ்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வாசலைப் பார்த்தவாறு மாடிப்படி இருந்தது. மாடிப்படியின் கீழே, ஒரு மூலையில், ஒரு சிறிய காஃபி மெசின் இருந்தது. வரவேற்பறை சுத்தமாக அழகாக இருந்தது. கார்த்திகேயன் படியேறி மாடியில் இருக்கும் அலுவலக அறைக்குச் சென்றார். உள்ளே நுழைந்தவர், மீண்டும் வெளியே வந்து வலப்புறத்தில் மொட்டை மாடிக்குச் செல்லும் வழி ஒன்றிருப்பதைப் பார்த்தார். கதவு திறந்திருந்தது. கதவிற்குப் பின் இருக்கும் கிரில் கேட் மட்டும் பூட்டப்பட்டிருந்தது. அந்த வழியை உபயோகித்துப் பல மாதங்கள் இருக்கும் என்பதை அந்தப் பூட்டின் லட்சணத்தில் இருந்து தெரிந்து கொண்டார். பூட்டு துருப்பிடித்திருந்தது. கொலைகாரன் வாசல்வழியாக தான் வந்திருக்கிறான். இங்கேயும் சிசிடிவி கேமரா இல்லை என்பது அவனுக்குத் தெரிந்திருக்கிறது.

‘‘அந்தப் பூட்ட உடைச்சு மாடியைச் செக் பண்ணுனீங்களா?’’

‘‘மாடிப்பக்கம் போறதே இல்லனு சொன்னாங்க. இந்தக் கதவ மட்டும்தான் ஓபன் பண்ணி வச்சிருப்பாங்களாம்... எப்டியும் கொலைகாரன் அந்த வழியா வந்திருக்க முடியாது... அதான்‘‘ என்றவாறே தலையைச் சொறிந்தார் பிச்சைமுத்து.

‘‘ஃபார்மலிட்டினு ஒண்ணு இருக்குல்ல... செக் இட் நவ்...’’ என்று கோபமாகக் கூறினார். அந்த வழியில் கொலைகாரன் வரவில்லை என்பது அவருக்கும் தெரியும். எனினும், எப்போதும் எந்த சந்தேகத்திற்கும் இடம்

கொடுக்காமல், பெர்ஃபெக்டாக விசாரணை செய்ய வேண்டும் என்று விரும்பும் மனிதர் அவர்.

அங்கேயே நின்று கொண்டிருந்த பிச்சைமுத்து, ‘‘எங்க இன்ஸ்பெக்டர் சார் கிட்ட ஒரு வார்த்தை...’’ என்று இழுத்தார்.

‘‘ஓபன் இட் நவ்...’’ என்று கார்த்திகேயன் கத்த, உதவி ஆய்வாளர் ‘‘எஸ் சார்’’ என்று சல்யூட் அடித்து விட்டு வேகமாக கான்ஸ்டபிளின் உதவியைத் தேடி கீழே ஓடினார். ஏழுமலை, அந்த வீட்டைச் சுற்றும்முற்றும் நோட்டம் விட, கார்த்திகேயன் அலுவலக அறைக்குள் நுழைந்தார். பெரிய அறை. அறை நடுவே சாக் அவுட்லைன் இருந்தது. கணேஷ் அங்குதான் விழுந்து இறந்திருக்கிறார். அவுட்லைன் மிகப் பெரிதாக இருந்தது. கணேஷ் பருத்த உடல் கொண்டவர். ஆரம்பத்தில் ஒல்லியாகத் தான் இருந்திருக்கிறார். தைராய்ட் பிரச்சனையினால் அவரது உடல் எடை கூடியிருக்கிறது. தன் உடல் எடையைச் சகித்துக்கொள்ள முடியாமல் தான் தன் மனைவி தன்னை விவாகரத்து செய்துவிட்டதாக, கணேஷ் வின்சென்டிடம் பலமுறை சொல்லியிருப்பதாக வின்சென்ட் விசாரணையில் தெரிவித்திருந்தார். உடல் பருமனால் அவதிப்படும் கணேஷால் நிச்சயம் எங்கேயும் தப்பி ஓட முடியாது என்பதால், அவரைக் கொல்வது அந்தக் கொலைக்காரனுக்கு சுலபமாகவே இருந்திருக்கும் என்பதையும் கார்த்திகேயன் புரிந்து கொண்டார்.

அறையில் எந்தப் பொருளும் கலையவில்லை. அறை நடுவே இருந்த பூச்செடி மட்டும் கீழே விழுந்து உடைந்திருந்தது. கணேஷின் மேஜையின் மீது போட்டோவில் கணேஷ் சிரித்துக் கொண்டிருந்தார். நாற்காலியின் அருகில் தரையில் சில கீறல்கள் இருந்தன. கணேஷ் கழுத்து நரம்பு அறுக்கப்பட்டு இறந்திருப்பதாக ரிப்போர்ட் சொல்கிறது. உடைந்த பூச்செடியின் அருகில் ரத்தம் உறைந்திருந்தது. கார்த்திகேயனின் போலீஸ் அறிவு வேலை செய்யத் தொடங்கியது. சம்பவம் அவர் கண் முன் விரியத் தொடங்கியது.

*‘அவன் வந்திருக்கிறான். கணேஷ் சுதாரிப்பதற்குள் கதவை அடைத்திருக்கிறான். அவர் பயந்து நடுங்கி சீட்டிலிருந்து வேகமாக, முழு பலத்தையும் கொடுத்து எழுந்ததால், நாற்காலி சக்கரங்கள் தரையைக் கீறி இருக்கின்றன. ஏசின அறை. எல்லா ஜன்னல்களும் அடைக்கப்பட்டிருக்கின்றன. கணேஷ் எவ்வளவு கத்தியிருந்தாலும் வெளியே கேட்டிருக்காது. எனினும்*

*அந்தக் கொலைகாரன் அவ்வளவு அவகாசத்தை அவருக்குத் தரவில்லை. கணேஷ் அவனை நோக்கி நகர்ந்திருக்க வேண்டும். அவன் கணப்பொழுதில் கத்தியை எடுத்திருக்கிறான். பயந்து பின்னாடியே நகர்ந்திருக்கிறார். கூர்மையான அந்தக் கத்தியைக் கொண்டு ஒரே வெட்டில் கழுத்து நரம்பை அறுத்திருக்கிறான். அவர் தடுமாறிப் பூச்செடி மீது விழுந்திருக்கிறார். துடித்துக்கொண்டிருந்த அவர் அருகே சென்று, நெஞ்சில் இரண்டு என்று எழுதியிருக்கிறான். பின் அவன் வந்த வழியே திரும்பிச் சென்றிருக்கிறான்.'*

*'யார் அவன். எதற்காக கொலை செய்கிறான். மோப்பநாய்களால் எதையும் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை? நிச்சயம் அவன் புத்திசாலிதான். ஆனால் எவ்வளவு பெரிய புத்திசாலியும் ஏதாவது தடயத்தை விட்டுவிட்டுத்தானே செல்வான். இங்கே எந்தத் தடயமும் கிடைக்கவில்லையே!'* கார்த்திகேயனுக்குத் தலை சுற்றியது. உடலெல்லாம் வேர்த்தது. அமைதியாக நடந்து சென்று பின் ஜன்னலைத் திறந்தார். மாடியிலிருந்து அந்த டூப்ளெக்ஸ் வீட்டின் கொல்லைப்புறத்தைப் பார்த்தார். வெறிச்சோடி இருந்தது. வீட்டின் மதில் சுவருக்குப் பின் காலி நிலம் ஒன்றிருந்தது. அதைத் தாண்டி அடுத்த தெரு இருந்தது. அந்தத் தெருவில் வீடுகள் குறைவாக இருந்தன. காலி நிலத்தை ஒட்டி ஒரு மாருதி ஸ்விஃப்ட் கார் நின்று கொண்டிருந்தது. அவர் காரை உற்று நோக்கினார். அந்தக் காரில் டிரைவர் இருக்கையில் அமர்ந்தவாறே ஒருவன் கணேஷ் வீட்டு மாடியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அவன் நிறைய முடி வளர்த்திருந்தான். தாடியும் அடர்த்தியாக இருந்தது. அவன் ஏன் இங்கேயே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று கார்த்திகேயன் சிந்தித்தார். *ஒருவேளை, அந்தக் கொலைகாரன் இவனா? ஏன் இங்கு வந்திருக்கிறான், அவனுக்கு என்ன தைரியம்?* கார்த்திகேயன் ஸ்தம்பித்து நின்றார். காரினுள் இருக்கும் அவன், ஒரு காகிதத்தில் எதையோ எழுதிக் கசக்கி வெளியே வீசினான். அவன் முகம் சரியாகத் தெரியவில்லை. அவன் கை கியர் கம்பியைப் பிடித்தது. சுதாரித்துக் கொண்டு கார்த்திகேயன், வெளியே ஓடினார். கார் சீறிப் பாய்ந்தது.

"ஏழுமலை.. சீக்கிரம்" என்றவாறே கார்த்திகேயன் மாடியிலிருந்து கீழே வேகவேகமாக இறங்கினார். பிச்சைமுத்துவும் கார்த்திகேயன் பின் ஓடினார்.

மொட்டை மாடி பூட்டை உடைத்துவிட்டு, அங்கேயே நின்றுகொண்டிருந்த கான்ஸ்டபிள்கள் இருவரும் நடப்பது புரியாமல் ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கார்த்திகேயன் வீட்டின் பின்புறம் ஓடி, சுவர் ஏறிக் குதித்து, காலி நிலத்தைக் கடந்து, அதன் கேட் ஏறிக்குதித்து, வேர்க்க விறுவிறுக்க கார் நின்ற இடத்திற்குச் சென்று மூச்சிறைக்க நின்றார். தெரு வெறிச்சோடி இருந்தது. தரையில் கசங்கிய காகிதம் ஒன்று இருந்தது. மனம் பதைபதைக்க அவர் அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தார். அதில் ‘3’ என்று எழுதி இருந்தது.

# 7

அறையில் ஒரே ஒரு நைட் லேம்ப் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. கதவுகளும் ஜன்னல்களும் அடைக்கப்பட்டிருந்தன. அலமாரியில் ஏராளமான புத்தகங்கள் இருந்தன. அவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. முகத்தில் சோகம் குடி கொண்டிருந்தது. அவனுடைய அடர்ந்த முடியும், நெஞ்சு வரை வளர்ந்த தாடியும் அவன் வயதைக் கூட்டிக் காட்டின. இரண்டு கொலைகளைச் செய்து விட்டு, அமைதியாக சுந்தர காண்டம் படித்துக் கொண்டிருக்கும் அவன், கதவின் சப்தம் கேட்டு உள்ளறைப் பக்கம் திரும்பினான்.

அங்கே ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். கண்கள் கலங்க இவனையே பார்த்தாள். ஆனால் எதுவும்

பேசவில்லை. அவள் பேச்சை நிறுத்தி ஐந்து வருடங்கள் ஆகின்றன. அவளது கண்களை அவனால் தொடர்ந்து பார்க்க முடியவில்லை. புத்தகத்தை மூடிவைத்து விட்டு, ‘‘சாப்ட்டீங்களா?’’ என்றான். அவள் பதில் பேசவில்லை. உள்ளறையைப் பார்த்தாள். பின் சாமி வந்தவளைப் போல், கதவில் வேகமாகக் குத்தினாள். திடீரென்று தலையில் அடித்துக் கொள்ள ஆரம்பித்தாள். இவன் வேகமாக ஓடிச்சென்று, அவளைத் தடுத்தான். அவள் கைகளை இறுகப்பற்றி, ‘‘அவங்கல்லாம் நல்லா இருக்கும் போது, நீங்களும் நானும் ஏன் அழுவணும்...? இன்னும் நாலு பேர் சாவணும்.. சாவாங்க.. அப்பறம் என்ன செய்றதுனு யோசிப்போம்...’’ என்று அழுகையை அடக்கிக் கொண்டு கூறினான். அவள் எதுவும் பேசாமல், அறைக்குள் சென்றுவிட்டாள். இவன் அங்கிருந்து நகர்ந்து எதிர் அறைக்குச் சென்றான். அந்த அறை அலங்கோலமாகக் கிடந்தது. அதில் ஒரு சுவற்றில் ஏராளமான காகிதங்கள் ஒட்டப்பட்டிருந்தன. நடுவே ஒரு ஃபோட்டோ ஒட்டப்பட்டிருந்தது. ஃபோட்டோவில், ஒரு பக்கம் முழுவதுமாக கிழிந்திருந்து, மீதமிருந்த போட்டோவில் ஐந்து பேர் நின்று கொண்டிருந்தனர். இடது மூலையில் பிரகாசும், நடுவில் கணேசும் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் தலைக்கு மேல் ‘‘X’’ என்று வரையப்பட்டிருந்தது. பிரகாஷிற்குப் பக்கத்தில் ராமகிருஷ்ணனும், கணேஷிற்குப் பக்கத்தில் பேராசிரியர் ரங்கதுரையும் நின்றுகொண்டிருந்தனர். வலது மூலையில் அழகேசன் நின்றுகொண்டிருந்தார். ஃபோட்டோவையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த அவன், ஒரு பேனாவை எடுத்து, ரங்கதுரையின் தலைக்கு மேல் X என்று வரைந்தான்.

***

‘‘டிஜிபி திட்டீட்டாருனா இவ்வளவு கோபமாக இருக்கீங்க...?’’ கார்த்திகேயனை வினவினார் ஏழுமலை. லைட் ஹவுஸ் அருகே இருக்கும் டீக்கடையின் உள்ளறையில் அமர்ந்து இருவரும் டீ அருந்திக் கொண்டிருந்தனர். புகை பிடிப்பவர்களுக்கென்றே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட அறை அது. நேற்றெல்லாம் கோயம்புத்தூரில் விசாரணை செய்து முடித்துவிட்டு இன்று பகல் தான் அவர்கள் சென்னை வந்தனர். டிஜிபியிடம் ரிப்போர்ட் செய்து விட்டு வீடு திரும்பும் வேளையில், மனம் டீக்கும் தம்முக்கும் அலைந்ததால் பைக்கை அங்கு நிறுத்தினர்.

“இல்ல. அந்த ஏ.சி முன்னாடி வச்சு திட்டுனதுதான் கொஞ்சம் கஷ்டமா இருக்கு.. கார ட்ரேஸ் பண்றதுனால எந்தப் பிரயோஜனமும் இல்ல... சொன்னா புரிஞ்சிக்க மாட்டேங்குறாரு. இன்னைக்கு திரும்புற பக்கம்லாம் ஸ்விஃப்ட் காருதான் ஓடுது. இவ்ளோ புத்திசாலியான கொலைகாரன் சொந்தக் கார்லயா வந்திருப்பான்? அப்டியே அது அவன் காரா இருந்தாலும் நிச்சயம் எங்கயாவது காரோட பதுங்கியிருப்பான்... நேத்து வரைக்கும் நீதான் எல்லாம்... இந்தக் கேஸ் முழுக்க உன் கண்ட்ரோல்லதான்னு சொன்னாரு... இன்னைக்கு அந்த ஏ.சி பயல தூக்கி வச்சுக்குட்டு ஆடுறாரு. யார நம்புறதுனே தெரியல...”

“கரெக்ட்டுதான்... யார நம்புறதுனே தெரியல... எல்லாமே அதிகாரிங்கதான!” என்று சொல்லிவிட்டு நக்கலாகச் சிரித்தார் ஏழுமலை.

“என்ன ஏழுமலை... ஏதோ உள்ளர்த்தத்துல பேசுற மாதிரி இருக்கு...?”

“பின்ன என்ன சார்... உங்களதான் நான் ரொம்ப நம்பிக்கிட்டு இருந்தேன்... என்ன வேவு பாக்க K.I.T காலேஜுக்கு அனுப்சிட்டு நீங்க என்னைய வேவு பாக்குறீங்களா?“

கார்த்திகேயன் ஆச்சரியமாகப் பார்த்தார்.

“என்ன எனக்குத் தெரியாதுனு நினச்சிங்களா? அன்னைக்கு எதுக்கு சார் நீங்க காலேஜ் வந்தீங்க? யாரோ ஃபாலோ பண்ற மாதிரி இருந்துச்சு... கவனிச்சுப் பார்த்தா நீங்க... அந்த ஆடிட்டோரியம் பின்னாடி செடி நடுவுல பதுங்கிப் பதுங்கிப் போயிட்டு இருந்தீங்க... எனக்கு உசிர் இல்ல. ஏதோ என்னவச்சு ஆட்டம் ஆடுறீங்களோனு பயம்..." சொல்லிவிட்டு பெருமூச்சு விட்டார் ஏழுமலை.

"அதான் பேய் அறைஞ்ச மாதிரி இருந்தீங்களா? உங்களால கண்டுபுடிக்க முடியாதுனுதான் நினைச்சேன். இனிமே என் டெக்னிக்க மாத்தணும்."

"இப்பக்கூட. எதுக்கு வந்தீங்கனு சொல்ல மாட்றீங்க பாத்தீங்களா?"

"இனிமே மறைக்க என்ன இருக்கு! அந்தக் காலேஜுக்கும் அந்தக் கொலைக்கும் ஏதோ சம்மந்தம் இருக்குனுதான் நான் நினச்சிக்கிட்டு இருந்தேன். அந்தக் காலேஜுள்ள இருக்க எவனோதான் பிரகாஷ கொன்னுருக்கமுடியும்னு தோணுச்சு... அதான் உங்கள அங்க அனுப்புனேன். பொதுவா கிரிமினல்ஸ்லாம் தைரியம் ஆனவனுங்கனு சொல்லுவங்க. ஆனா

உண்மையில அவனுங்கலாம் பயந்தாங்குளிங்க.. நம்ம மாட்டிறகூடாதுனு பயம் இருந்துக்கிட்டே இருக்கும். அந்தப் பயமே அவனுங்கள காட்டிக் கொடுத்துரும். அவன் அன்னைக்கு நிச்சயம் வெளிய வருவான்னு நான் நம்புனேன்..."

ஏழுமலை இடைமறித்துப் பேசினார், "வெளியவந்தா உங்களப் பாத்தா உஷார் ஆகிருவான். அதுவே, என்னப் பாத்தா கையாலாகாத கான்ஸ்டபிள் தானேனு நெனச்சிக்கிட்டு அடுத்தது ஏதாவது ட்ரை பண்ணுனான்னா, நீங்க வந்து புடிச்சிடலாம்னு நினச்சிருப்பீங்க, அதானே பிளானு?"

இன்ஸ்பெக்டர் சிறு புன்னகை மட்டும் புரிந்தார்.

"எல்லா இன்ஸ்பெக்டரும் ஒரே மாதிரிதான் இருக்கீங்க… நான் ராயபுரத்துல டியூட்டிக்கு சேர்ந்த புதுசுல, என் கூட புருஷோத்தமன்னு ஒரு கான்ஸ்டபிள் இருந்தான். இதேமாதிரிதான் அக்யூஸ்ட வேவு பாக்க அந்த இன்ஸ்பெக்டர் அனுப்புனார். போன இடத்துல புருஷோத்தமன போட்டுட்டாங்க. அப்பறம் நம்மாளுங்க அந்த அக்யூஸ்ட என்கவுண்டர் பண்ணிட்டாங்க... ஆனா இது எல்லாமே அந்த இன்ஸ்பெக்டரோட பிளானுனு அப்புறம்தான் எனக்குத் தெரிஞ்சுது. வேணும்னே அந்த அக்யூஸ்ட வெளிய வர வைக்கணும்ங்கறதுக்காக கான்ஸ்டபிள பலி கொடுத்துட்டானுங்க. பாவம் புருஷோத்தமன். கல்யாணம் பண்ணிக்காமயே போயிட்டான்…" ஏழுமலையின் குரலில், துக்கம் சோகம் இரண்டுமே கலந்திருந்தது.

"அப்டிலாம் உங்களுக்கு எதுவும் ஆக நான் விட்றமாட்டேன் ஏழுமலை. ஒரு இன்ஸ்பெக்டர் மாதிரியா உங்ககிட்ட பழகுறேன்!"

"அதுவும் சரிதான்… கோவைல கொலைனதும்தான் எனக்கு உசுரு வந்துச்சு. அந்தக் கொலைகாரன் காலேஜ்ல இல்ல பாருங்க.." என்றவாறே மீதமிருந்த டீயைக் குடித்துவிட்டு கிளாசை கீழே வைத்துவிட்டு மேலும் பேசினார்.

"காலேஜ்ல உங்கள பாத்ததுமே, கொலைக்காரனும் அங்கதான் இருக்கான்னு தெரிஞ்சுகிட்டுதான் நீங்க அங்க வந்திருக்கீங்கனு சந்தேகப்பட்டேன். அவன் அங்க இருந்து, நான் அவன ஃபாலோ பண்றதா நினச்சுக்கிட்டு காண்டாய்ட்டான்னா? அதான் கொஞ்சம் நடுங்கலாவே

இருந்துச்சு. இப்ப பரவாயில்ல... அவன் என்ன பாத்துருக்கமாட்டான்" ஏழுமலை ஒரு குழந்தை போல் சிரித்தார்.

"வாங்குற சம்பளத்துக்கு கொஞ்சமாவது வேலை பாக்கணும் ஏழுமலை..."

"பாத்துக்கலாம் சார். அது சரி, காலேஜ்ல கும்பல்ல அவன யாரும் பாக்கல... அங்க கோவைல, ரெஸிடென்ஷியல் ஏரியாவுலயுமா அவன யாரும் பாக்கல...?" எதுவும் தெரியாமல் வினவினார் ஏழுமலை. கோவையில், முழு விசாரணையிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. பாதியிலேயே ஓய்வு எடுக்க ஆர்.எஸ் புரம் காவல்நிலையத்திற்கு சென்று விட்டார். கார்த்திகேயனும், பிச்சைமுத்துவும் தான் விசாரணையில் ஈடுபட்டிருந்தனர்.

"அவன் அருணாச்சலம் தெரு வழியா வரல. அந்தத் தெருவுக்குப் பின்னாடி ஒரு தெரு இருக்கு... வீடுங்க ரொம்ப கம்மி. பாதி காலி நிலம் தான். அந்தத் தெருவுக்குள்ள வந்து, கார பார்க் பண்ணிட்டு, காலி லேண்டுக்குள்ள எகிறி குதிச்சு, கணேஷ் ஆ∴பிஸ் பின் பக்கமா பூந்திருக்கான். அதே வழில வெளிய போயிருக்கான். அங்க விசாரிச்சதுல, கொஞ்ச நாளாவே அங்க ஒரு மாருதி ஸ்வி∴ப்ட் வந்து நிக்கும், பாத்துருக்கோம்னு ரெண்டு மூணு பேர் சொன்னாங்க. ஆனா உள்ள இருந்தது யாருனு பாக்கலனு சொல்றாங்க. அந்தத் தெருவுல மொத்தமாவே பத்து வீடுதான் இருக்கு, அதுவும் ரொம்ப தள்ளித் தள்ளி இருக்கு. அதனாலேயே இருட்டிப் போச்சுனா யாரும் வெளிய வர மாட்டாங்களாம். அங்க இருக்க ஒரு ரயில்வே எம்ப்லாயீ மட்டும் நைட் ஷி∴ப்ட்டுக்கு போகும்போது இந்தக் கார உன்னிப்பா பார்த்துருக்கார்... அவர் பாக்கும்போது காருக்குள்ள யாரும் இல்லையாம். அவருக்கு நம்பர் ஞாபகம் இல்ல. ஆனா நிச்சயம் அது கோயம்பத்தூர் ரிஜிஸ்டிரேசன் இல்லனு மட்டும் சொல்றாரு. ஒண்ணும் புலப்பட மாட்டேங்குது"

"அதான் மூணுனு எழுதிக் கொடுத்துட்டுப் போயி இருக்கானே... மூணாவது கொலை வரைக்கும் வெயிட் பண்ணுவோம். அதைத்தான இவ்ளோ நாளா பண்ணிக்கிட்டு இருக்கோம்"

"இல்ல ஏழுமலை. அவன் மூணுனு சொன்னது மூணாவது கொலைய இல்லை. எப்படியும் மூணாவது கொலை நடக்கும்னு நமக்கே தெரியும். அது அவனுக்கும் தெரியும்... அப்பறம் ஏன் அவன் மூணுனு சொல்லப் போறான்... நிச்சயம் இந்த மூணுக்கு அர்த்தம் வேற..."

"என்னமோ போங்க சார்... எனக்கு ஒண்ணும் புரியல. அதுவும் இந்தக் கேஸ் ஆரமிச்சதுல இருந்தே மனசு சரியில்ல சார். நைட் ஸ்டேஷன்ல தனியா இருக்க முடியல. யாரோ நம்மள ஃபாலோ பண்ற மாதிரியே இருக்கு. நீங்கதான் எல்லாத்தையும் பாத்துக்கணும். இன்னும் ஆறு வருசத்துல ரிடையர்மென்ட். திருவண்ணாமலைல கொஞ்சம் பூர்வீக நிலம் இருக்கு. அங்கேயே வீடுகட்டிட்டு போய்டலாம்னு இருக்கேன்"

அவர் சொல்வது உண்மைதான். அவர்கள் அந்த நிமிடம் வரை கண்காணிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த அறை தகரத்தால் கட்டப்பட்டிருந்ததது. தகரத்தில் இருக்கும் ஓட்டைகளை சாக்குப்பை வைத்து அடைத்திருந்தார்கள். அதில் ஒரு சாக்குப் பையை கொஞ்சமாக விலக்கிவிட்டு, வெளியே நின்று ஒரு உருவம் இவர்கள் பேசுவதை கவனித்துக் கொண்டிருந்தது.

"சும்மா மனசப் போட்டுக் குழப்பிக்காதீங்க. நான் இருக்கேன்" என்றவாறே கார்த்திகேயன் எழ, ஏழுமலையும் அங்கிருந்து எழுந்தார். அங்கே வந்த டீக்கடை சிறுவனிடம் காசைக் கொடுத்தார். அதை அவன் வாங்கிக் கொள்ள,

"பாய் இல்லையா?" என்று கார்த்திகேயன் அந்தச் சிறுவனை வினவினார்.

"ஓனர் ஊருக்கு போய்ருக்காரு.. மூணாம் தேதிதான் வருவாரு'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வேகமாக அடுத்த அறைக்குச் சென்றுவிட்டான். கார்த்திகேயனுக்கு பொறி தட்டியது.

"ஏழுமலை"

"சார்"

"மூணுன்றது மூணாவது கொலை இல்லை.."

ஏழுமலை என்ன என்பது போல் பார்த்தார்.

"இன்னைக்கு தேதி என்ன.." கார்த்திகேயன் வினவினார்.

"ஒண்ணு..." சற்று நிறுத்திய ஏழுமலை, "சார்.. நாளானைக்கு மூணு சார்.." என்றார் பதற்றமாக.

"அன்னைக்கு தான் கொலை நடக்கப் போகுது. இப்ப வீட்ல போய் தூங்குவோம்" என்று சொல்லிவிட்டு டேபிளில் இருந்த தொப்பியை

எடுத்துக்கொண்டு வெளியே செல்ல, ஏழுமலை பதற்றத்துடன் அவரைப் பின் தொடர்ந்தார்.

அவர்களை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த அவன் இப்போது அங்கு வந்தான். டீக் கடை சிறுவன் அவனைப் பார்த்ததும், ‘‘ஓனருக்குத் தெரிஞ்சா பிரச்சனை ஆயிரும்...’’

அவன் எதுவும் பேசாமல் இரண்டு ஐநூறு ரூபாய் தாள்களை எடுத்து நீட்டினான். சிறுவன் அதை வாங்கி வைத்துக்கொண்டு, கார்த்திகேயன் அமர்ந்திருந்த டேபிளுக்கு அடியில் கைவிட்டுத் துழாவினான். கருப்பு நிறத்தில் சிறு கருவி ஒன்றைக் கையில் எடுத்தான்.

அது ஒரு ஜிஎஸ்எம் ஸ்பை மைக்ரோ.ஃபோன். மெமரி கார்ட் அளவு தான் இருந்தது.

அதில் ரெகார்டிங் வசதி இருந்தது. அதில் சிம்கார்டை போட்டு விட்டு, எங்காவது பொருத்திவிட்டால் போதும். உலகின் எந்த மூலையிலிருந்து அந்த நம்பருக்கு அழைத்தாலும், அந்த மைக்ரோ.ஃபோன் ஆக்டிவேட் ஆகிவிடும். அந்த அறையில் நடப்பதையெல்லாம் ஒலிப்பதிவு செய்யத் தொடங்கிவிடும்.

அவன், சிறுவனிடமிருந்து அதை வாங்கிக்கொண்டு வெளியே நகர எத்தனித்தான்.

‘‘ஓனருக்கு தெரிஞ்சா பிரச்சனை ஆயிரும்...’’ மீண்டும் சொன்னான் அந்தச் சிறுவன். அவன் சிறுவனின் அருகில் வந்து, அவன் பாக்கெட்டில் கை விட்டு, தான் கொடுத்த இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக்களையும் எடுத்துக்கொண்டு திரும்பினான்.

‘‘ஓனருக்கு தெரிஞ்சா...’’ ‘பளார்’ என்று சப்தம் கேட்டது. சிறுவன் அழுகையை அடக்கிக் கொண்டான்.

# 8

“எனக்கு செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்கு பயப்படாமல் அமைதியாயிருப்பான்…”

பாதிரியார் இம்மானுவேல் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். தேவலாயம் நிரம்பி இருந்தது. கடைசி வரிசையில் பரிச்சயமான ஒருவன் அமர்ந்திருப்பதைப் பார்த்தார். யார் என்று சரியாகத் தெரியவில்லை. அவனாக இருக்காது. தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். அவருக்கு வயது எழுபதைத் தொட்டுவிட்டது. தூரத்தில் இருப்பதைப் பார்க்க மட்டும் கண்ணாடி தேவைப்பட்டது. மற்றபடி பார்வை கூர்மையாகவே இருந்தது. தன் அங்கிக்குள் கைவிட்டு கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டார். அவர் முகம் மலர்ந்தது. கார்த்திகேயன் கடைசி வரிசையில் அமர்ந்து பாதிரியாரையே கவனித்துக் கொண்டிருந்தான். மேலும் அவன் யூனிஃபார்ம் அணிந்திருக்கவில்லை. கார்த்திகேயனின் மனதில் ஏராளமான எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்ததால், பிரசங்கம் அவன் மனதில் பதியவில்லை. அவன் முகம் வாடி இருந்ததை பாதிரியார் கண்டுகொண்டார். ‘இத்தனை வருடங்களுக்குப் பின் எதற்காக தன்னைத் தேடி வந்திருக்கிறான்? எதற்காக வந்திருந்தாலும் சந்தோஷம் தான்.’ பத்துவயதில், விபத்தில் பெற்றோரை இழந்து நின்ற அவனைத் தத்தெடுத்து வளர்த்தவர் அவர். போலீஸாக வளர்ந்து நின்றதும், அவனுக்கு தன் தங்கையின் மகளைத் திருமணம் செய்து வைத்தவர் அவர். தங்கையின் மகள், இனிமேல் அவனோடு வாழமாட்டேன் என்று 7 வயது குழந்தையுடன் வந்து அவர் முன் நின்று இரண்டு வருடங்களாகின்றன. இரண்டு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் கார்த்திகேயனைப் பார்க்கிறார்.

கார்த்திகேயனுக்கு பேச நா எழவில்லை. பாதிரியார் அவன் எதிரில் அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் தலையைக் குனிந்து கொண்டான். அவனுக்காக வைக்கப்பட்ட டீ ஆறிக் கொண்டிருந்தது.

“என்ன பிரச்சனை? ஹவ் கேன் ஐ ஹெல்ப் யூ?” பாதிரியாரே பேச்சை ஆரம்பித்தார். இந்தக் கேள்வி கார்த்திகேயனை ஆச்சரியப் படுத்தவில்லை. தன்னை இம்மானுவேல் நன்கு புரிந்து வைத்திருக்கிறார் என்பது கார்த்திகேயனுக்குத் தெரியும். மேலும் தனக்கு எந்தப் பிரச்சனை வந்தாலும் அவரைத்தான் அவன் தேடி வருவான். கடந்த இரண்டு வருடங்கள் மட்டும் விதிவிலக்கு.

கார்த்திகேயன் தன்னுடைய எல்லா பிரச்சனைகளையும் சொன்னான். அமைதியாக எல்லாவற்றையும் கேட்ட இம்மானுவேல்,

“சோ... இந்த கேஸ்ல தோத்துருவமோங்குற பயம் உனக்குள்ள வந்திருச்சு...”

கார்த்திகேயனால் உண்மையை ஒப்புக்கொள்ள முடியவில்லை. எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான்.

“அந்தக் கொலைகாரன் உன்ன இன்ஃபீரியரா ஃபீல் பண்ண வைக்கிறான்”

“அப்டி ஒண்ணும் இல்ல...”

“நீ ஒத்துக்கிட்டாலும் ஒத்துக்கலனாலும் அதான் உண்மை. உன்ன அறியாமலேயே உனக்குள்ள அந்தத் தாழ்வுமனப்பான்மை வந்திருச்சு... கொலைகாரன் நம்மளவிட புத்திசாலினு நீ நினைக்க ஆரம்பிச்சுட்ட... உன் தூக்கம் போச்சு, நிம்மதி போச்சு... நீ நல்லாத் தூங்கி ரொம்ப நாள் ஆச்சுனு உன் முகமே சொல்லுது...”

கார்த்திகேயன் மறுத்துப் பேசவில்லை. இம்மானுவேல் மனோதத்துவம் படித்தவர். பின் தான் பாதிரியாரானார். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சைக்கியாட்டிரிஸ்டாக பிராக்டிஸ் செய்து வருகிறார். அதனால் கார்த்திகேயனின் மனநிலையைப் புரிந்துகொள்வதில் அவருக்கு அதிக சிரமம் இருக்கவில்லை.

“இப்ப இந்த விசயத்த பேசக் கூடாதுதான். இருந்தாலும் கேக்குறேன்... நீ ஜெனிஃபரையும், நகுலையும் விட்டுட்டு போயி ரெண்டு வருசமாச்சு. நகுல் எப்டி இருக்கான் என்ன படிக்கிறானு ஏதாவது விசாரிச்சியா? அட்லீஸ்ட் என்னையாவது வந்து பாத்தியா?“

தன் முகத்தைப் பார்க்க தைரியமில்லாமல் தான் கார்த்திகேயன் தன்னை வந்து பார்க்கவில்லை என்பது இம்மானுவேலுக்குத் தெரியும். அதனால்தான் அவனாக வரட்டும் என்று இதுநாள் வரை காத்திருந்தார். இன்று ஆறுதல் தேடி வந்தவனிடம் அவர் இதையெல்லாம் பேசுவதற்கு காரணம் இருந்தது.

“நீ ரொம்ப எமோஷனல் ஆகுற கார்த்திக்... அதான் உன்னால சரியான முடிவு எடுக்கமுடியல... அந்த எமோஷன் தான் பெத்த புள்ளையப் பத்தியும், வளத்த கிழவனப் பத்தியும் கவலப்படமா சுத்த வைக்குது. இன்னைக்கு நீ என்னத் தேடி வந்ததுக்கும் அதான் காரணம்...”

கார்த்திகேயன் கலங்கிய கண்களுடன் அவரையே பார்த்தான். அவன் இன்ஸ்பெக்டராக அங்கே வரவில்லை. அவர் தோளில் சாய்ந்து அழும் உரிமையும் சுதந்திரமும் அவனுக்கு இருந்தது.

“நாளைக்குதான் மூணாந்தேதி. நாளைக்கு இன்னொரு கொலை நடந்தா!” கார்த்திகேயனின் குரல் தழுதழுத்தது.

“நடந்தா? அத எப்படியும் உன்னால தடுக்க முடியாது. அப்பறம் ஏன் ஃபீல் பண்ணுற?”

“எந்தக் க்ளூவுமே கிடைக்கல. டிபார்ட்மென்ட்ல மரியாதை குறைஞ்சிக்கிட்டே போகுது”

“மறுபடியும் எமோஷன் ஆகுற... இதான் உன் பிரச்சனை. அவன் உன்னை டார்கெட் பண்ணல. அவனோட விளையாட்டுல நீ சிக்கிட்ட அவ்ளோதான். நீ போலீசா இல்லனாலும் இந்தக் கொலையெல்லாம் நடந்துருக்கும். இதெல்லாம் எப்பவோ திட்டம் போட்டிருப்பான்... எங்க தன் வேலை முடியுறதுக்குள்ள உன் கிட்ட சிக்கிப்போமோனு அவனுக்குப் பயம்... அதனால உன்ன இன்ஃபீரியரா ஃபீல் பண்ண வைக்குறான். ஏன் டேட் கொடுத்துட்டுப் போகணும்? நாளைக்கு கொலை நடந்தா நிச்சயம் நீ இன்னும் அதிகமா கஷ்டப்படுவ. நாம தோத்துட்டமேனு எண்ணி வருத்தப்படுவ. உன்னோட வேலைல உன்னால கவனம் செலுத்த முடியாது... அதுதான் அவனுக்கு வேணும். டோன்ட் கெட் அட்டாச்சிட் டு திஸ் கேஸ் டூ மச்.”

பாதிரியார் தொடர்ந்து பேசினார்,

“நியாபகம் இருக்கா... ஸ்கூல் முடிஞ்சதும் உனக்கு காலேஜுக்குப் போக விருப்பமில்ல. உங்க கூடவே இருந்து செர்விஸ் பண்றேனு என்கிட்ட சொல்லிக்கிட்டே இருப்ப... இப்ப அப்டி நினச்சுக்கோ. நாளைக்கே நீ இந்த வேலைய விட்டுட்டு வந்துட்டீனா, உனக்கும் இந்தக் கேசுக்கும் என்ன சம்பந்தம்? இல்ல அந்த கொலைகாரந்தான் உன்ன டார்கெட் பண்ண போறானா? சோ பிரச்சனை இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனுக்குத் தான். கார்த்திகேயனுக்கு இல்ல... வீட்டுக்குப் போய் நிம்மதியாகத் தூங்கு.”

கார்த்திகேயனுக்கு கொஞ்சம் தெளிவு பிறந்தது. அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான். சிறிது தூரம் சென்றவன், மீண்டும் திரும்பி வந்து பாதிரியாரிடம், “இந்த கேஸ் முடியட்டும். அவ கிட்டையும் என் புள்ளக்கிட்டையும் மன்னிப்பு கேக்கணும். நானே வீட்டுக்கு வரேன்.” என்றான். பாதிரியாரின் முகம் முன்னைவிட அதிகம் மலர்ந்தது.

***

சானடோரியம் ப்ரிட்ஜை ஒட்டி அமைந்திருந்த தனியார் வங்கி ஏடிஎம்—யில் பணம் எடுத்துவிட்டு வெளியே வந்தார் ரங்கதுரை. வெளியே அரைப்போதையில் அமர்ந்திருந்த ஏடிஎம் காவலாளி காக்கையன் ரங்கதுரையைப் பார்த்து வணக்கம் வைத்தான். ரங்கதுரை சிறு புன்னகை புரிந்து விட்டு நகர, அவன், “சார்” என்றான்.

துரை அவனிடம் ஒரு பத்துரூபாயை நீட்ட அவன் சந்தோஷமாகப் பெற்றுக்கொண்டு, “சாரு மனைவி மக்களோட ரொம்ப நாள் வாழணும்” என்று வாழ்த்தினான்.

“என் பொண்டாட்டி செத்து பலவருஷம் ஆகுதுயா” என்று சொல்லி விட்டு செர்விஸ் ரோடில் இறங்கி நடந்தார் துரை. வேகமாக வந்த போலீஸ் பேட்ரோல் கார் ஒன்று அவரை உரசிக் கொண்டு போக, அவர் ஸ்தம்பித்து நின்றார்.

“எப்டி போறானுங்க... எதிர்த்துக் கேட்டா உள்ள வச்சு குத்துவானுங்க...” என்று அரைப்போதையில் தன் கருத்தைப் பதிவு செய்துவிட்டு, தன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தான் காக்கையன். அடுத்த ரவுண்டிற்கு தயாராகிக் கொண்டிருந்தான் அவன்.

திடீரென்று அங்கே ஒரு மாருதி ஸ்விஃப்ட் வந்து நின்றது. ஜன்னல் கண்ணாடி இறங்கியது.

“ஹலோ சார்” காரினுள்ளிருந்து கேட்டது ஒரு ஆண் குரல்.

சிறிது நேரம் உற்று நோக்கிய ரங்கதுரை, “என்ன... ஆளே மாறிட்ட...?” என்று ஆச்சர்யமாகக் கேட்டார்.

“உள்ள ஏறுங்க சார்... பேசிக்கிட்டே போவோம்”

கார் பச்சைமலை அடிவாரத்தில் வந்து நின்றது. மணி காலை 11.30.

“நந்தன பார்த்து எவ்ளோ நாளாச்சு! ஆஸ்ட்ரேலியால இருந்து எப்ப வந்தான்...?” ரங்கதுரை ஆர்வமாக வினவினார்.

“லாஸ்ட் வீக்” அவன் அதிகம் பேச விரும்பாதவன். எனினும் இவருக்குப் பதிலளித்தாக வேண்டுமே என்பதற்காகவே பேசினான்.

“இங்க என்ன பண்றான்...?”

“அமைதியான இடமாச்சே! ரிலாக்சா பேசலாம்னு வரச் சொன்னார். வழியில அன்எக்ஸ்பெக்டடா உங்களப் பாத்தேன். உங்களப் பாத்தா சந்தோஷப்படுவார்” என்று சொல்லிவிட்டு தன் செல்ஃபோனை எடுத்து யாருக்கோ கால் செய்வது போல் பாசாங்கு செய்தான். பின்,

“நீங்க இங்கயே இருங்க... அவர் மொபைல் நாட் ரீச்சபிள்னு வருது. நான் போய் அவரக் கூட்டிட்டு வந்துறேன்...”

“ஏன் நான் மலை மேல வரக்கூடாதா?“

“சார் முன்னூறு படிக்கு மேல் ஏறணும்... வயசாயிருச்சு இல்ல...”

ரங்கதுரைக்குக் கோபம் வந்தது. “ஓய். எனக்கு என்ன அப்டி வயசாயிருச்சு... அவனவன் இந்த வயசுல கல்யாணமே பண்ணிக்கிறான்...”

இருவரும் மலையின் உச்சியை அடைந்தனர். மணி பன்னிரண்டு. அங்கே ஒரு மகாயுகக்காளி கோவில் இருந்தது. காளி உக்கிரமாகக் காட்சி அளித்தாள். இடம் வெறிச்சோடி இருந்தது.

“நந்தன் எங்க?”

“இங்கதான் சார் எங்கயாவது ஒதுங்கியிருப்பாரு... கொஞ்சம் இருங்க...” அவன் மேல் இன்னும் துரைக்கு சந்தேகம் வரவில்லை.

“சார்.. பிரகாஷ் சாரப் பத்தி கேள்விப்பட்டதும் ரொம்ப கஷ்டமாக ஆகிருச்சு...” அவன் சோகமாக முகத்தை வைத்துக்கொண்டு இதைச் சொன்னான்.

“ஆமா ஆமா... முன்னாடிநாள் தான்யா அவரப் பார்த்தேன். ரொம்ப நல்ல மனுஷன்”

“யாரு கொன்னுருப்பா...?”

துரை தெரியாது என்பது போல் தலையசைத்தார்.

“கணேஷும் செத்துட்டாராம்.. கொன்னுட்டாங்க...”

துரை யார் கணேஷ் என்பது போல் ஆச்சர்யமாகப் பார்த்தார்.

“அதான் சார்... மெட்டல் ஃபார்மிங்க் எக்ஸ்பெர்ட் கணேஷ். கோயம்புத்தூர்காரு. யாரோ அநியாயமா கொன்னுட்டாங்க”

துரைக்கு உண்மை புலப்பட ஆரம்பித்தது. உடல் வேர்த்தது.

“நந்தன் எங்க...?” அவனிடமிருந்து பதில் வரவில்லை.

“நந்தன் எங்கடா...?” மீண்டும் கத்தினார்.

“செஞ்ச தப்புக்கு யாரா இருந்தாலும் தண்டனை அனுபவிக்கணும் சார்...“ என்றவாறே அவன் சட்டைப்பைக்குள் இருந்து கூர்மையான கத்தியை எடுத்தான். ரங்கதுரைக்கு வயதாகி இருந்தாலும், உடம்பில் பலம் இருந்தது. அவனிடம் முடிந்தவரை போராடினார். அவன் முடியை பிடித்து இழுத்தார். அவனைப் பிடித்துத் தள்ள முயன்றார். இறுதியில் அவன் தான் வெற்றிபெற்றான். அவன், அவரது நெஞ்சில் மூன்று என்று எழுதிவிட்டு நகர்ந்தான். அவர் உடம்பில் இன்னும் உயிர் ஒட்டிக் கொண்டிருந்தது.

*“பேதை பெண்ணை வடிவுகண்டு காமுகனவன் நத்தினால்*

*விடுவனோ அவனை முன்னை வெட்ட வேண்டும் என்பனே...”*

அவர் முன் நின்று அவன் உரக்கப் பாடினான். அவர் தரையில் துடித்துக் கொண்டிருந்தார். அவர் கையில் கொத்தாக முடி சிக்கியிருந்தது. அவன் மீண்டும் மீண்டும் அதே வரிகளைப் பாடிக் கொண்டே அங்கிருந்து கீழே இறங்கினான். இப்போது காளியின் முகத்தில் அமைதி படர்ந்திருந்தது.

# 9

கா க்கையன் வழக்கம் போல் குடித்துவிட்டு, அவன் வீட்டருகில் இருக்கும் கங்கையம்மன் கோவில் வாசலில் விழுந்து கிடந்தான். கோவிலைத் திறக்க வந்த குருக்கள், “அம்மா... இவாள திருத்தவே முடியாதா...!” என்றவாறே தலையில் அடித்துக்கொண்டார். போலீஸ் பைக் கோவில் முன் வந்து நின்றது.

குருக்கள், “இவன முதல புடிங்கோ” என்று சொல்லிவிட்டு போலீஸ்காரர்களின் பதிலுக்குக் காத்திராமல் கோவிலினுள் சென்றார்.

கார்த்திகேயன் பைக் பின்னால் அமர்ந்திருந்தார். இறங்கி வந்து காக்கையனின் அருகில் நின்றார். பைக்கை ஓட்டி வந்த குரோம்பேட்டை காவல் நிலைய கான்ஸ்டபிள், காக்கையனை எழுப்பினார். ரங்கதுரை கொலை செய்யப்பட்ட பச்சைமலை, குரோம்பேட்டை சரகத்திற்குள் வருவதால், ஃபார்மாலிட்டிக்காக அந்தச் சரக கான்ஸ்டபிள் ஒருவரை உடன் அழைத்து வந்திருந்தார் கார்த்திகேயன்.

வெகு நேரம் எழுப்பியும் காக்கையன் எழுந்திரிக்காததால், கார்த்திகேயன் பொறுமை இழந்து கொண்டிருந்தார். இறுதியாக லத்தியை தரையில் ஓங்கித் தட்டினார் கான்ஸ்டபிள். காக்கையன் கண் விழித்துப் பார்த்தான். தெளிவாக இருந்திருந்தால், போலீசைப் பார்த்ததும் பயந்து ஓடியிருப்பான். போதை தலைக்கேறி இருப்பதால், திமிரும் தலைக்கேறி இருந்தது.

“போலீசா... நான் என் பொண்டாட்டிதான் எழுப்புறானு நினச்சேன்...”

கோவமுற்ற கான்ஸ்டபிள் கார்த்திகேயனிடம், “சார் கஸ்டடில வச்சு விசாரிக்கலாமா?” என்று கேட்க, கார்த்திகேயன் வேண்டாம் என்பது போல் தலை அசைத்தார். பொறுமையாக எழுந்து அமர்ந்த காக்கையன், இரண்டு கண்களையும் துடைத்துக் கொண்டு, கோவிலுள் எட்டிப் பார்த்தான். கர்ப்பகிரகத்தை திரைத்துணியால் மூடி வைத்துவிட்டு, குருக்கள் அம்மனுக்கு அபிஷேகம் செய்து கொண்டிருந்தார்.

"காலையுலா ஆத்தா மூஞ்சில முழிக்கலாம்னு பாத்தா… இப்பதான் அபிசேகமே நடக்குது.. ஐயரு ரொம்ப லேட்டு." என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். குருக்களுக்கு சக்கரை நோய் இருந்ததால் அவர் தாமதமாகத்தான் கோவிலுக்கு வருவார்.

அதே தெருவில் இருந்த தேவாலயத்தின் கடிகாரம் பத்து முறை அடித்தது. அதைக் கேட்ட காக்கையன் ‘‘மணி பத்துதான் ஆவுதா! ரெஸ்ட் எடுக்கலாம்னா விட மாட்றாங்களே…’’ என்று தலையைக் குனிந்து கொண்டே கூறினான்.

கான்ஸ்டபிள் தன் லத்தியை காக்கையனின் தாடையில் வைத்து அவன் முகத்தை நிமிர்த்தி, ‘‘ஓய். ஐயா கேக்குற கேள்விக்குலாம் ஒழுங்கா பதில் சொல்லு…‘‘ என்றார். காக்கையன் அதைச் சட்டை செய்யாமல், நிமிர்ந்து, எதிரில் நின்று கொண்டிருந்த போலீஸ் பைக்கைப் பார்த்தான். கண்களை மீண்டும் துடைத்தவாறே, பைக்கில் எழுதியிருப்பதை எழுத்துக் கூட்டி வாசிக்கத் தொடங்கினான்.

‘‘B…E…A…T… பீட் ஆ◌ஃபிசர்… இப்ப என்ன எல்லா வண்டிலயும் இப்டி எழுதியிருக்கு… ’பீட்’னா அடி தானே… வண்டில வந்து அடிப்பீங்களா…!’’

கார்த்திகேயன் பொறுமை இழந்தார். ‘‘யோவ்… ஆட்டோ புடி… இவன உள்ள வச்சு விசாரிப்போம். இவன் தான் நேத்து அந்த மர்டர பண்ணியிருக்கான்…’’ என்று கான்ஸ்டபிளை நோக்கி கோபமாகக் கத்துவதைப் போல் பாசாங்கு செய்தார்.

காக்கையனுக்கு போதை முழுவதுமாக இறங்கியது. அவன் அங்கிருந்து வேகமாக ‘‘பிரேமா… பிரேமா’’ என்றவாறே எழுந்து ஓடினான். கான்ஸ்டபிள் தாவிச் சென்று அவனைப் பிடித்து கார்த்திகேயனிடம் அழைத்து வந்தார்.

‘‘யாருடா, பிரேமா…?’’

‘‘என் பொண்டாட்டி சார்…’’

கார்த்திகேயனுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டார். ரங்கதுரையின் ◌ஃபோட்டோவை அவனிடம் காண்பித்தார்.

‘‘இவர பாத்திருக்கியா?’’

“ஐ. வாத்தியாரு... நேத்து கூட வந்து காசு எடுத்துட்டுப் போனாரே... பத்து ரூவா கொடுத்தார்... பெரிய மனுஷன்”

“அந்தக் காசு பத்தலனுதான் அவரத் தூக்கிட்டுப் போயி பச்சமலைல வச்சுக் கொன்னுருக்க... அவர் கிட்ட இருந்து எவ்ளோ கொள்ள அடிச்ச...?”

“ஐயா சத்தியமா நான் அப்டிப்பட்ட ஆள் இல்லயா”

“அப்பறம் ஏண்டா இன்னைக்கு வேலைக்குப் போகல?”

“உடம்பு சுகமில்ல சார். அதான் ஆபீசுக்கு லீவு போட்டுட்டேன்...”

“சரி சொல்லு… அவர எப்படி கொன்ன?”

“சார். சத்தியமா எனக்கு ஒண்ணும் தெரியாது சார்…”

“நேத்து கடைசியா அவரு ஏடிஎம்க்கு தான் வந்திருக்காரு. எல்லாம் ஏடிஎம் கேமரால இருக்கு… நீ தான் அவர லாஸ்டா பார்த்திருக்க”

“நான் இல்லனா சொன்னேன்…! அவரு எப்பவும் போல வந்தாரு. எப்பவும் அஞ்சுரூவா கொடுப்பாரு. நேத்து பத்து ரூவா கொடுத்தாரு. அஞ்சு ரூவாய்க்கு ஆசைப்பட்டு கொலை கேஸ்ல மாட்டிக்கிட்டேனே!” காக்கையன் புலம்பினான். கார்த்திகேயன் அவனைக் கூர்ந்து நோக்கினார். அவன் பொய் சொல்லவில்லை என்பது அவரது போலீஸ் மூளைக்குப் புரிந்தது. வருத்தத்துடன் அங்கிருந்து நகர்ந்தார். திடீரென்று காக்கையன் கத்தினான்.

“சார் நேத்து ஒருத்தன் வந்தான்...”

கார்த்திகேயனின் முகம் மலர்ந்தது. *‘முதல் விட்னெஸ்’*. வேகமாக காக்கையனிடம் வந்து அவனைப் பிடித்துக் குலுக்கினார்.

“சொல்லு யாரப் பாத்த... சொல்லு”

“மூஞ்சப் பாக்கல... கார்ல வந்தான்...” என்று தயங்கித் தயங்கிச் சொன்னான்.

“என்ன கார்?”

“அதான் ஒரு படத்துல தல கூட ஓட்டிட்டுவருமே… நம்ம தியேட்டர்ல கூட அந்தப் படத்த போட்டான்...”

கான்ஸ்டபிள், “மாருதி ஸ்விஃப்ட்ட சொல்றான் சார்” என்றார்.

“ஹான். அதே கார் தான்...”

“என்ன கலர்?”

“வெள்ளை கலர்”

“கார் நம்பர பாத்தியா?”

“இல்ல சார்...”

‘வெள்ளை கலர் மாருதி ஸ்விஃப்ட்’. கார்த்திகேயனுக்குப் பொறி தட்டியது.

காக்கையன் தொடர்ந்து பேசினான். அவனுக்கு பயம் தெளிந்திருந்தது.

“அவர் எப்பவும் நடந்துதான் வருவாரு நடந்துதான் போவாரு. நான் கூட ஆட்டோல போலாமே சார், எதுக்கு வயசான காலத்துல கஷ்டப்படுறீங்கனு கேட்டுருக்கேன். எனக்கு ஒண்ணும் அவ்ளோ வயசாகல போடானு சொல்லிட்டு சிரிப்பாரு. நேத்து மட்டும்தான் அவரு கார்ல ஏறிப் போனாரு... புண்ணியவான் ஒரேடியா போய்ட்டாரு.”

“உள்ள இருந்தவன கொஞ்சமாவது பாத்தியா. நல்லா யோசி...”

“இல்ல சார்...“

“நல்லா யோசி. இன்னைக்கு சரக்கு நான் வாங்கித் தரேன்”

“அந்த கஷ்டம் உனக்கு வேணாம் சார். காசு மட்டும் கொடு… நான் வாங்கிக்கிறேன்...”

அவன் ஒருமையில் விளித்ததை கார்த்திகேயன் கண்டுகொள்ளவில்லை.

“அது எப்டி ஒருத்தன கார்ல பாத்தோனையே ஏறிப் போக முடியும்? அவன் அவருக்கு நல்லாத் தெரிஞ்சவனாதான் இருக்க முடியும்” கான்ஸ்டபிளிடம் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

காக்கையன் மீண்டும் ஏதோ நினைவுக்கு வந்தது. “சார்... சார்…”

கார்த்திகேயன் திரும்பினார்.

“சார். அந்தக் கார் வந்து நின்னுது... ஜன்னல் தொறந்துது... வாத்தியாரு உள்ள இருந்தவன பாத்து, என்ன ஆள் இப்டி மாறிப்புட்டனு கேட்டாரு… அப்பறம் ரெண்டு பேரும் போயிட்டாங்க”

கார்த்திகேயனும் கான்ஸ்டபிளும் திரும்பி ஸ்டேஷனுக்குச் சென்றுகொண்டிருந்தனர். தன்னுடைய யூகம் சரிதான் என்று

கார்த்திகேயனுக்குத் தோன்றிற்று. அவன் அவருக்குத் தெரிந்தவன் தான். அதனால் தான் அவனைப் பார்த்ததும், வெகுநாட்களுக்குப் பின் தெரிந்தவர்களைப் பார்க்கும் போது கேட்கும் கேள்வியைக் கேட்டிருக்கிறார். ‘என்ன ஆளே மாறிட்ட…?’. கார்த்திகேயனுக்கு ஓரளவிற்குப் புரிந்துவிட்டது. ஆனால் சட்டம் யூகங்களை நம்பாது. அதற்கு ஆதாரங்கள் வேண்டும். இப்போது, ஆதாரங்களைத் திரட்ட வேண்டும். கார்த்திகேயன் கான்ஸ்டபிளின் தோளில் கைவைத்து அழுத்தினார்.

“என்ன சார்... ஸ்டேஷனுக்குத் தான போறோம்...?”

“இல்ல. K.I.T போ...”

இருவரும் K.I.T.காலேஜுக்குச் சென்றனர். அங்கே ஏழுமலை காத்துக்கொண்டிருந்தார்.

“ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் அனுப்புறேன், நீ போ” என்று சொல்லி அந்தக் குரோம்பேட்டை காவல் நிலைய கான்ஸ்டபிளை அனுப்பி வைத்தார் கார்த்திகேயன்.

ஏழுமலையும் கார்த்திகேயனும் உற்பத்தி பொறியியல் கட்டிடத்திற்குள் சென்றனர், தங்களை ஒருவன் பின்தொடர்கிறான் என்பது தெரியாமலேயே.

# 10

கா வல் நிலையத்தில் அமர்ந்து, நேரத்தை ஓட்டமுடியாமல் ஓட்டிக்கொண்டிருந்தார் ஹெட் கான்ஸ்டபிள் ஏழுமலை. மணி மதியம் மூன்றரை. கார்த்திகேயன் கேஸ் ரிப்போர்ட் தயார் செய்து கொண்டிருந்தார்.

திடீரென்று, யாரும் எதிர்பாராத விதமாக ஸ்டேஷனுள் நுழைந்தார் டி.ஜி.பி வீரபத்திரன். அசிஸ்டண்ட் கமிஷ்னர் தேவும் உடன் வந்திருந்தார்.

வீரபத்திரனைக் கண்டதும், கார்த்திகேயன் வேகமாக எழுந்து அவர் அருகில் வந்து, சல்யூட் அடித்தார். முன்னறிவிப்பின்றி டி.ஜி.பி அங்கே வந்தது கார்த்திகேயனை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. மேலும், அசிஸ்டண்ட் கமிஷ்னரையும் உடன் அழைத்து வந்திருப்பது அவருக்கு குழப்பத்தைத் தந்தது.

“சார் நீங்க என்ன இவ்ளோ தூரம்?”

“நீ தேடி வரமாட்றியே… நாங்கதான் வரணும்…” என்று சற்று நக்கலாகவே வீரபத்திரன் சொன்னார்.

உண்மையில் கார்த்திகேயனைத் தேடி அவர் வரவில்லை. எப்படியும் தன்னைத் தேடி கார்த்திகேயன் அன்று சாயங்காலத்திற்குள் வந்துவிடுவார் என்பது அவருக்குத் தெரியும். அவர் அவ்வளவு தூரம் வந்திருந்தது K.I.T கல்லூரியின் டீனை சந்திப்பதற்காகத்தான். டீன் வீரபத்திரனுடைய நண்பர். தொடர்ந்து அந்தக் கல்லூரியைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதால், அவர் பதறிப் போய் இருந்தார். அவருக்கு தைரியம் சொல்லவே வீரபத்திரன் கல்லூரிக்கு வந்திருந்தார். போவதற்கு முன் கார்த்திகேயனைப் பார்த்து விசாரணை நிலவரத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் அங்கு வந்திருந்தார்.

“சார் ரிப்போர்ட் ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன்… நானே வந்து பாக்கலாம்னு…”

“தூக்கிப் போடுயா உன் ரிபோர்ட்ட. கொலை நடந்து 30 மணி நேரம் ஆவுது… இன்னும் என்ன ரிப்போர்ட் ரெடி பண்ணிக்கிட்டு இருக்க…!”

இது போன்ற சூழ்நிலைகளில் கோபத்தை அடக்கிக் கொள்ளதான் வேண்டும் என்பது கார்த்திகேயனுக்குத் தெரியும். அமைதியாக நின்றார். அவரைப் பேசவிடாமல், வீரபத்திரன் தொடர்ந்து பேசினார்.

“அந்த சஸ்பெக்ட் பேப்பர்ல 3—னு எழுதிக் கொடுத்துட்டு போனானு சொன்னீயே… அது வெறும் நம்பர் இல்ல… மூணாந்தேதி கொலை

செய்யபோறேனு சொல்லீட்டுப் போயிருக்கான், ஸ்கௌண்ட்ரெல்... இத உன்னால கண்டுபுடிக்க முடிஞ்சதா..?''

வீரபத்திரன் ஒரு முடிவோடு தான் வந்திருக்கிறார். அவரிடம் பேசி எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பதை கார்த்திகேயன் புரிந்து வைத்திருந்ததால் அவர் அமைதியாகவே நின்றார். ஏழுமலைக்கு கார்த்திகேயனின் இந்த மாற்றம் ஆச்சர்யத்தைத் தந்தது.

''ஆனா ஏ.சியும் ஆண்டனியும் உன் ரிப்போர்ட்டப் படிச்சதுமே, மூணாந்தேதி கொலை நடக்க போகுதுனு கரெக்டா சொல்லிட்டாங்க...''

*'ஏ.சி எப்படி இதைக் கண்டுபிடித்திருக்க முடியும்? ஒருவேளை நாம்தான் அவனைத் தவறாக எடை போட்டு விட்டோமோ? அவன் புத்திசாலிதான். அவன் புத்திசாலிதான். நாம் தான் முட்டாளாகிக் கொண்டிருக்கிறோம்.'* எண்ணிக்கொண்டே கார்த்திகேயன் அமைதியாக நின்றார். மூன்றாம் தேதி கொலை நடக்கப்போகிறது என்பதைக் கார்த்திகேயன் கண்டுபிடித்திருந்தார். அதை வீரபத்திரனிடம் ரிப்போர்ட் செய்வதனால் எந்தப் பயனும் இல்லை என்று அவர் கருதியதால் அவர் அதைப் பற்றி வெளியே பேசவில்லை. ஆனால் ஏசீ முந்திக்கொண்டுவிட்டார்.

''என்னய்யா நான் பாட்டுக்கும் பேசிக்கிட்டே இருக்கேன்... அமைதியா நிக்கிற... யூஸ்லெஸ் ஃபெல்லோனு நான் நினச்சவன்லாம் புத்திசாலினு நிரூபிக்கிறான். புத்திசாலினு நம்புனவன் எல்லாம்...'' டி.ஜி.பி முழுவதுமாகச் சொல்லி முடிக்கவில்லை. கார்த்திகேயனுக்கு கோபம் தலைக்கேறியது.

கார்த்திகேயன், ''இப்ப என்ன சார் சொல்லணும்?'' என்று கோபமாகக் கேட்டார்.

''இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்ல...'' அங்கே சிறிது நேரம் மௌனம் நிலவியது. வீரபத்திரனின் கோபமும் தணிந்தது. பின் அவரே பேச்சைத் தொடர்ந்தார்.

''ஃபைன்டிங்க்ஸ்...?''

''அவர் கடைசியா ஏடிஎம்—ல பணம் எடுத்திருக்கார். வீடியோ ப்ரூஃப் இருக்கு. ஏடி எம் வாட்ச்மேன விசாரிச்சோம். அவரே விரும்பிதான் ஒருத்தனோட கார்ல போனாருனு அவன் சொல்றான். பச்சமலைல வச்சு கொன்னுருக்கான்.

உடம்பெல்லாம் காயம். ரத்தம் அதிகமாக லாஸ் ஆனதால இறந்திருக்கார். டாக்டர், கணேஷோட ரிப்போர்ட்டையும், பிரகாஷோட ரிப்போர்ட்டையும் ரிவ்யூ பண்ணுனார். எல்லாக் காயமும் ஒரே பேட்டர்ன்ல இருக்கு, ஒரே வெப்பனா தான் இருக்க முடியும்னு சொல்றார்''

''ஆப்வியஸ்லி கத்தி தான்... இதத் தான் முதல் மர்டர் அப்பவே கண்டுபுடிச்சுட்டோமே''

''யெஸ்... ஆனா இந்த முறை வேற ஒரு க்ளூ கிடச்சிருக்கு...''

வீரபத்திரன், தேவ் இருவரின் கண்களும் ஆச்சர்யத்தில் விரிந்தன. கார்த்திகேயன் பேச்சைத் தொடர்ந்தார்.

''ரங்கதுரை கைல கொத்தா முடி சிக்கி இருந்துது... அது மர்டரரோட முடியாதான் இருக்கணும்...''

''யூ மீன். அவர் கொலைகாரன எதிர்த்துப் போராடியிருக்கார், அப்ப அவனோட முடி அவர் கையில சிக்கியிருக்குனு சொல்றீங்களா?'' வீரபத்திரன் வினவினார்.

''எக்ஸாக்ட்லி...'' உண்மையில் இங்கே பொய் சொன்னார் கார்த்திகேயன். அந்த முடியைக் கூர்ந்து கவனிக்கும் போதே, அது எப்படி ரங்கதுரையின் கைக்கு வந்திருக்கும் என்று அவருக்குப் புரிந்துவிட்டது. ரங்கதுரை தன்னுடைய பலத்தால் கொலையாளியின் முடியைப் பிடித்து இழுக்கும் போது, அது அவரது கையோடு வரவில்லை என்பதும் கார்த்திகேயனுக்குத் தெரியும். மேற்கொண்டு ஆதாரங்கள் இல்லாமல் இதைப் பற்றி விலாவாரியாக கார்த்திகேயன் பேச விரும்பவில்லை.

''வேர் வீ ஆர் ஹெட்டிங்க் டு?'' சிறிது யோசனைக்குப் பின் கேட்டார் வீரபத்திரன்.

''ரங்கதுரைக்கு நல்லா தெரிஞ்ச, அந்தக் காலேஜ் சம்மந்தப்பட்ட, ஒருத்தன் தான் அவர கொன்னுருக்கணும்''

''இதத்தான முதல் கொலைலயும் சொன்னீங்க? நீ என்னையா சொல்ற ஏசிட?'' என்று தேவைப் பார்த்து கேட்டார். ஏ.சி விழித்தார். இந்த முறையும் பதில் கார்த்திகேயனிடம் இருந்து தான் வந்தது.

“சார். ரங்கதுரை எந்தச் சலனமும் இல்லாம தான் கார்ல ஏறிப் போயிருக்கார். சோ அவன் தெரிஞ்சவனாதான் இருக்கணும். அது மட்டும் இல்ல, அவன் 2007–2009 இந்த இரண்டு வருசத்துல அந்தக் காலேஜுக்கு, குறிப்பா ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட்டுக்கு ஏதோ ஒரு வகையில சம்மந்தப்பட்டவனா இருக்கணும்…”

வீரபத்திரன் என்ன சம்மந்தம் என்பது போல் ஆச்சர்யமாகப் பார்த்தார். அவரை அதிக நேரம் ஆச்சர்யத்தில் ஆழ்த்தாமல் பேச்சைத் தொடர்ந்தார் கார்த்திகேயன்.

“ரங்கதுரை காரைக்குடி இஞ்சீனியரிங் காலேஜ்ல மெக்கானிக்கல் டிபார்ட்மெண்ட் H.O.D–யா வர்க் பண்ணிட்டு இருந்திருக்காரு. நான் அந்த டீன் கிட்ட பேசினேன். 2006–ல அவரு மனைவி இறந்திருக்காங்க… விஆர்எஸ் வாங்கிட்டு, சென்னைல தன் பையன் வீட்ல தங்கலாம்னு முடிவு பண்ணி விஆர்எஸ் அப்ளை பண்ணியிருக்காரு. அந்த நேரம் இங்க K.I.T–ல ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட்ல வேகன்ஸி இருந்திருக்கு. ரொம்ப இன்சிஸ்ட் பண்ணி அவர இங்க அனுப்பியிருக்காங்க. 2007 மேமாசம் K.I.T ப்ரொடக்சன்ல H.O.D–யா ஜாயின் பண்ணியிருக்காரு. 2009 ஏப்ரல்–ல ரிடயர் ஆகியிருக்காரு. பிரகாஷ பொறுத்தவரைக்கும் அவரு படிச்சது, Phd முடிச்சது எல்லாமே K.I.T–ல தான். 2007–2009 இந்த இரண்டு வருஷம் தான் பிரகாஷையும் ரங்கதுரையையும் இணைக்குது. சோ, கொலைகாரனும் அந்தப் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்ட் சம்மந்தப்பட்டவன் தான். அதுவும் அந்த ரெண்டு வருஷத்துல அவனும் அவங்க லைஃப்ல எங்கேயோ கிராஸ் பண்ணியிருக்கான்“

“வாட் அபௌட் திஸ் கோயம்புத்தூர் பார்ட்டி? அவர் எந்த வகைலயும் அந்தக் காலேஜோட சம்மந்தப் படலனு நீதான சொன்ன?”

“சம்மந்தப் படலனு சொல்றதவிட, அவங்களுக்குள்ள என்ன சம்மந்தம்னு தெரியலனு சொல்றது தான் சார் கரெக்டா இருக்கும். பிரகாஷ் ஒரு புள்ளி, ரங்கதுரை ஒரு புள்ளி, இந்த ரெண்டு புள்ளியையும், நேர்கோட்டுல இணைக்க முடியுதுனா, கணேசும் இந்தப் புள்ளிகளுக்கு நடுவுல தான் வருவார். ப்ராபபிலிட்டி நிறைய இருக்கு சார். எந்த வகையில அவரு சம்மந்தபட்டிருக்காருனுதான் நாம இப்ப கண்டுபுடிக்கணும்…”

“ஓகே. உன் லாஜிக்க நான் அக்சப்ட் பண்ணிக்கிறேன். இவங்க எல்லாம் ஏதோ வகையில சம்மந்தப்பட்டிருக்காங்க. எப்டி கொலைகாரன் அந்தக் காலேஜ் சம்மந்தபட்டவன், அதுவும் அந்த டிபார்ட்மெண்ட் சம்மந்தபட்டவனு சொல்ற? அவன் வெளியாளாவும் இருக்கலாமே…?”

“இது எல்லாமே திட்டமிட்டு செய்யப்பட்டக் கொலைகள். பிளான் பண்ணி கொலை பண்ற ஒவ்வொருத்தனும் ஹெல்ப்லெஸ் விக்டிம தான ஃபர்ஸ்ட் தேர்ந்தெடுப்பான்?“

வீரபத்திரன் ஆம் என்பது போல் தலையசைத்தார்.

“செத்த மூணு பேர்ல கம்பாரிட்டிவ்லி ரங்கதுரைய கொல்றதுதான் ஈஸி. அவரோட பையன் மருமகள் எல்லாம் அமெரிக்கால இருக்காங்க. இங்க இவரு மட்டும்தான் தனியா இருக்காரு… ஏன் அவர முதல்ல கொல்லல?”

வீரபத்திரனுக்குப் புரியத் தொடங்கியது.

“சரி.. பிரகாஷ கொல்றதுனு முடிவு பண்ணுனதுக்கு அப்பறம், அவர காலேஜுக்குப் பின்னாடி இருக்குற ஸ்டேஷன் பார்டர் ரோட்ல வச்சு ஈஸியா போட்ருக்கலாம். எப்பவுமே அந்த ரோட் வெறிச்சோடிதான் கிடக்கும். ஏன் கஷ்டப்பட்டு பன்னிரண்டு அடி சுவர ஏறிக் குதிக்கணும்? காலேஜ் ஹாங்கருக்கு பின்னாடி இருக்குற ஷெட்ல தான் பிரகாஷ் தன் டூ வீலர பார்க் பண்ணுவார். ஹாங்கர் காலஜுக்கு நடுவுல இருக்கு. அங்க இருந்து ஃப்ரண்ட் கேட்டுக்கு போகணும்னாலும், பேக் கேட்டுக்குப் போகணும்னாலும் ஹாங்கர் பின்னாடி இருக்குற ஒத்தையடிப் பாதையில போகுறதுதான் ஈஸி. அந்தப் பாதையோட ஒரு சைட் காலேஜோட சுவர் இருக்கு. இன்னொரு சைட், மரம் செடிலாம் வளர்ந்திருக்கு. அந்த ரோட சில பேர் மட்டும்தான் பயன்படுத்துறதுனால, அங்க லைட்டும் போடல. ஃப்ரண்ட் கேட்லயும், பேக் கேட்லயும் மட்டும்தான் செக்யூரிடீஸ் இருப்பாங்க. பிரகாஷ் எப்பவும் பேக் கேட் வழியாதான் போவார். அப்ப அந்த ஒத்தையடிப் பாதையில வச்சுக் கூட போட்டுருக்கலாம். அங்க நிறைய மரம் செடிலாம் இருக்குறதுனால, அங்க என்ன நடந்தாலும் அவ்ளோ சீக்கிரம் வெளிய தெரியாது. ஆனா டிபார்ட்மென்ட் வரைக்கும் ரிஸ்க் எடுத்துப் போயிருக்கான். அதனால தான் சொல்றேன். அந்த டிபார்ட்மென்டுக்கும் கொலைக்கும் சம்மந்தம் இருக்குனு. அதுவும் யாருக்கிட்டையும் மாட்டாம

அங்க போயிருக்கான். சோ அவன் அந்த டிபார்ட்மென்டுக்கு நல்லா பரிச்சயமானவன்… ஹி இஸ் நாட் ஆன் அவுட்சைடர்‘‘

“சோ, ப்ரொடக்சன் டிபார்ட்மென்டுக்கும் கொலைக்கும் சம்மந்தம் இருக்குனு சொல்றதுக்காகதான் முதல் கொலைய அங்க வச்சுப் பண்ணிருக்கான்? ஒருவகையில இது அவன் நமக்குக் கொடுத்த க்ளூ. அந்தக் க்ளூலதான் இந்த கொலைகளுக்கான காரணம் அடங்கியிருக்கு?

“ஆமா. அவன் ஒவ்வொரு கொலைலயும் ஒவ்வொரு க்ளூவ விட்டுட்டுதான் போயிருக்கான்…”

வீரபத்திரன் ஆச்சர்யத்தின் உச்சிக்கே சென்றார். கார்த்திகேயன் தொடர்ந்தார்.

“ரெண்டாவது மர்டர் அப்போ, அவன் மூணுனு எழுதி கொடுத்துட்டுப் போனானே… அதுதான் க்ளூ”

“ஆமாம் மூணாந்தேதி கொலை செய்ய போறதா…”

“இல்ல. இங்க மூணு மூணாந்தேதிய குறிக்கல. அவன் நம்மக்கிட்ட சொல்லாமலேயே கொலை பண்ணியிருக்கலாம். நான் கூட அவன் நமக்கு சவால் விடுறான்னு நினச்சேன். ஆனா உண்மையில அவன் நம்மள விட புத்திசாலினு நமக்குத் தெரியும். அது அவனுக்கும் தெரியும். அப்பறம் ஏன் சவால் விடணும்?”

“இப்ப என்னதான் சொல்லவற?”

“மூணுனு அவன் சொன்னது தேதிய இல்ல… வேற எதையோ… அதையும் கண்டுபுடிக்கணும்…”

“ஓகே மூணாவது மர்டர்ல என்ன க்ளூ கொடுத்துருக்கான்?”

அவனுடைய தலை முடிதான் மூன்றாவது கொலையில் கிடைத்த க்ளூ. ஆனால் அதைப் பற்றி கார்த்திகேயன் பேச விரும்பவில்லை. அதற்குக் காரணம் இருந்தது.

“பப்ளிக்கா வந்து ரங்கதுரைய பிக்கப் பண்ணிட்டுப் போயிருக்கான். அந்த வாட்ச்மேன் தான் இங்க க்ளூ. அவங்க பேசுனத அந்த வாட்ச்மேன் கேட்டுருக்கான். நல்லாத் தெரிஞ்சவுங்ககிட்டப் பேசுற மாதிரி ரங்கதுரை கார்ல

இருந்தவன்கிட்ட பேசியிருக்கார். இதுல இருந்துதான் அவன் ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட் சம்மந்தப்பட்டவன்றத நான் கன்ஃபார்ம் பண்ணினேன்...''

‘‘எல்லாம் சரி. ஏன் அவன் அந்த கணேஷ ரெண்டாவதா டார்கெட் பண்ணினான்? ரங்கதுரைய கொன்னுட்டுப் போயிருக்கலாமே?''

‘‘அது நம்மள சுத்த விடுறதுக்காக... ரங்கதுரை பிரகாஷ் ரெண்டுபேருமே காலேஜோட நேரடியா சம்மந்தப்பட்டவங்க. தொடர்ந்து அவங்க ரெண்டு பேர டார்கெட் பண்ணினா, அவன் காலேஜ் சம்மந்தப்பட்டவன்னு நாம ஈசியா கண்டுபுடிச்சுருவோம்னு அவனுக்குத் தெரிஞ்சிருக்கு''

‘‘சோ. நாம கொலைகாரன நெருங்கிக்கிட்டு இருக்கோம்!''

‘‘அஃப்கோர்ஸ்...''

வீரபத்திரன் இருக்கையில் இருந்து எழுந்தார். கார்த்திகேயனின் தோளில் தட்டியவாறே,

‘‘வெல் டன். அடுத்தது என்ன பிளான்?'' என்று வினவினார். கார்த்திகேயனுக்கு சந்தோஷமாக இருந்தது. தேவைப் பார்த்து ஏளனப் புன்னகை புரிந்துவிட்டு, பேச்சைத் தொடர்ந்தார்.

‘‘டிபார்ட்மென்ட்ல எல்லாரையும் விசாரிக்கணும்...''

‘‘எல்லாரையும்னா?''

‘‘2007—2009 அந்த ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட்ல வேலை செஞ்ச டீச்சிங், நான்— டீச்சிங் ஸ்டாஃப், ஸ்டூடண்ட்ஸ், எல்லாரையும் விசாரிக்கணும்...‘‘

‘‘பிராக்டிகலா பேசுயா... நம்ம டிபார்ட்மென்ட் பேர் நாறணுமா!''

‘‘வேற வழி இல்ல சார்...''

‘‘நோ. எந்த சாலிட் எவிடென்ஸ்சும் இல்லாம, போற வரவங்க எல்லாரையும் கூப்ட்டு வச்சு விசாரிக்க முடியாது... நான் K.I.T டீன் கிட்ட பேசுறேன். அண்ட் ஐ வில் கிவ் யு ஃபுல் ஃப்ரீடம். காலேஜ்ல எங்க வேணா போலாம். யாருகூட வேணா கேசுவலா இன்டராக்ட் பண்ணு. பட் நோ ஒன் டு ஒன் இன்வெஸ்டிகேஷன். போலீஸ் விசாரணை மாதிரி இருக்கக் கூடாது. ஃப்ரெண்ட்லியா பேசு. நவ் ஐ அம் மூவிங்க்''

வீரபத்திரன் அங்கிருந்து நகர்ந்தார். கார்த்திகேயன் சல்யூட் அடித்து அனுப்பிவைத்தார்.

***

இரண்டு நாட்கள் உருண்டோடின. கல்லூரிக்குச் சென்று பலரிடம் உரையாடினார். ஆனால் விசாரணை அடுத்த கட்டத்திற்கு நகரவில்லை. 2007 முதல் 2009 வரை உற்பத்தி பொறியியல் துறையில் பணிபுரிந்த விரிவுரையாளர்கள் பலரும் அங்கிருந்து மாற்றலாகிச் சென்றிருந்தனர். புதியவர்களே பெரும்பாலும் அங்கிருந்தனர். இளங்கோ, அழகேசன், ராமகிருஷ்ணன் ஆகிய மூவர் மட்டுமே வெகுநாட்களாக அங்கே பணிபுரிந்து வந்தனர். அவர்களுக்கும் ஒன்றும் தெரியவில்லை. மேலும் நான்—டீச்சிங்க் ஊழியர்களுக்கும் எந்த உண்மையும் தெரியவில்லை. வெளியூரில் பணிபுரிந்த பலரையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் கார்த்திகேயன். ‘‘உங்க உயிருக்கு ஆபத்திருக்கலாம்’’ என்றுகூட சொல்லிப் பார்த்தார். ஒரு பிரயோஜனமும் இல்லை. வெள்ளிக்கிழமை கொலை நடக்குமா என்று காத்திருந்தார். ஒன்றும் நடக்கவில்லை.

*‘ஏன் இரண்டு வெள்ளிக்கிழமைகள் கொலை செய்தவன், திடீரென்று புதன் கிழமை கொலை செய்ய வேண்டும்? ஆம். அவன் நம்மைக் கண்டு பயந்துவிட்டான். நமக்கு அவகாசம் தர பயப்படுகிறான். அதனால் தான் அவசர அவசரமாக பட்டப்பகலில் புதன் கிழமை கொலை செய்திருக்கிறான்.’* கார்த்திகேயன் ஏதேதோ கோணத்தில் யோசித்துப் பார்த்தார். கொலைகாரன் வெளியே வரவில்லை. ஆனால் ஞாயிற்றுக்கிழமை காலை, அவர் தேவாலயத்தில் பாதிரியார் இம்மானுவேலுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவருக்கு ஒரு கால் வந்தது.

இந்த முறை வந்தது கொலை செய்தியல்ல, தற்கொலை செய்தி...

# 11

விக்னேஷன் இயல்பு நிலைக்குத் திரும்ப இருபத்தியைந்து மணி நேரம் ஆனது. அவனை ஐசீயு—விலிருந்து ஜெனரல் வார்டிற்கு மாற்றியிருந்தார்கள். நேற்று காலை கிரிக்கெட் விளையாடிவிட்டு ஹாஸ்டல் ரூமிற்கு வந்த ராஜசேகர், விக்னேஷனின் நிலையைப் பார்த்துப் பதறிப் போனான். தரையில் பேச்சுமூச்சற்று கிடந்தான் விக்னேஷன். வாயிலிருந்து நுரை பொங்கியிருந்தது. ராஜசேகரின் குரல் கேட்டு நண்பர்கள் பலரும் ஓடிவந்தனர். ஹாஸ்டல் வார்டனும் வந்திருந்தார். தூக்க மாத்திரைகளை விழுங்கியிருக்கிறான் என்பதை அருகில் கிடந்த மாத்திரை கவர்களைக் கண்டதும் புரிந்து கொண்டார் வார்டன். விக்னேஷனை அனைவரும் சேர்ந்து தூக்கி ஆட்டோவில் கிடத்தினர். ஆட்டோ குரோம்பேட்டை அரசு மருத்துவமனை நோக்கிச் சீறிப் பாய்ந்தது.

அதற்குள் விக்னேஷன் இறந்துவிட்டான் என்று அனைவரும் பேசத் தொடங்கிவிட்டனர். இந்தச் செய்தி மஃப்டியில் அந்தக் காலேஜை கண்காணித்துக் கொண்டிருந்த கான்ஸ்டபிள் ஒருவரை எட்டியது. அவர்தான் கார்த்திகேயனுக்கு போன் செய்தார்.

*‘விக்னேஷன். எந்த விக்னேஷன். பிரகாசின் சடலத்தை முதலில் பார்த்தவன். அவன் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். ஒருவேளை, கொலைகாரன் அவனை மிரட்டியிருக்கக் கூடுமோ? ஒருவேளை, அவன் தான் கொலைகாரனோ, காரியம் முடிந்து விட்டது என்று தற்கொலை செய்து கொண்டானோ? ஆனால், அவன் இப்போதைய மாணவன் ஆயிற்றே? 2007—இல் அவன் பள்ளிக்கூடத்தில் அல்லவா படித்துக் கொண்டிருந்திருப்பான்’* ஃபோனைக் கட் செய்த அந்த ஒரு நொடியில், கார்த்திகேயனின் மனதில் இதுபோல ஏகப்பட்ட கேள்விகள் எழுந்தன. பாதிரியாரிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்குப் புறப்பட்டார்.

“பல்ஸ் இருக்கு. ஐ.சி.யுக்கு கொண்டு போங்க” டாக்டர் நர்சிடம் சொல்லிவிட்டு, வார்டனை நோக்கித் திரும்பி,

“இங்கலாம் இவ்ளோ கிரவுட் சேரக்கூடாது... யாராவது ரெண்டு பேர் மட்டும் இருங்க…” என்றார். வார்டன் ராஜசேகரை மட்டும் தன்னுடன் வைத்துக்கொண்டு, மற்றவர்களை வெளியே காத்திருக்கச் சொன்னார்.

“பேசண்ட்டோட அப்பா அம்மாக்கு ஃபோன் பண்ணி வர சொல்லுங்க” என்று வார்டனிடம் சொல்லிவிட்டு டாக்டர் அங்கிருந்து நகர்ந்தார்.

“அவனுக்கு ஒண்ணும் ஆகாதில்ல டாக்டர்?” என்று ராஜசேகர் கேட்ட கேள்வியை டாக்டர் சட்டை செய்யவில்லை.

கார்த்திகேயன் டாக்டரைச் சந்தித்து, விக்னேஷின் நிலையைக் கேட்டுத் தெரிந்து கொண்டபின் பல மாணவர்களிடம் பேச்சு கொடுத்தார். யாருக்கும் விக்னேஷன் ஏன் தற்கொலைக்கு முயன்றான் என்று தெரியவில்லை. ராஜசேகருக்கும் எதுவும் தெரியவில்லை.

“டாக்டர்கிட்ட பேசினேன். ஒண்ணும் ப்ராப்ளம் இல்லனு சொன்னாரு… அவன ஜெனரல் வார்டுக்கு ஷிஃப்ட் பண்ணுனதும் எனக்கு கால் பண்ணுங்க” என்று வார்டனிடம் தன் நம்பரைக் கொடுத்துவிட்டு நகர்ந்தார் கார்த்திகேயன்.

காலை வார்டனிடம் இருந்து கால் வந்ததும், ஏழுமலையை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றார் கார்த்திகேயன். முதலில் விக்னேஷன் எந்தப் பதிலையும் சொல்லவில்லை.

விக்னேஷின் தந்தை, “சார் அவன் இன்னும் அதிர்ச்சில இருந்தே வெளிய வரல சார், அப்பறம் விசாரிச்சுக்கோங்க... பிளீஸ்” என்று கார்த்திகேயனிடம் சொல்ல, கார்த்திகேயனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஒரே ஒரு முறை பேசிப் பார்க்கிறேன் என்று விக்னேஷின் தந்தையிடம் சொல்லிவிட்டு, கார்த்திகேயன் மீண்டும் விக்னேஷிடம் பேசினார்.

“உனக்கு எந்தப் பிரச்சனையும் வராம நான் பாத்துக்குறேன்… ஏன் இப்டி பண்ணின… சொல்லு...” வினவினார் கார்த்திகேயன்.

விக்னேஷனுக்குத் தைரியம் பிறந்திருந்தது. பேசினான்.

“அபாலஜி லெட்டர்...”

“வாட்?”

“அபாலஜி லெட்டர்“ மீண்டும் அதையே சொன்னான் விக்னேஷன்.

***

‘அபாலஜி லெட்டர். மன்னிப்புக் கடிதம்’ இதற்கும் அவன் தற்கொலை முயற்சிக்கும் ஏதோ சம்மந்தம் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டுதான் விசாரணையைத் தொடங்கினார் கார்த்திகேயன். ஆனால் அபாலஜி லெட்டர் பற்றிய அந்த விசாரணையில் கொலைகாரனைப் பற்றிய தகவல்கள் வெளிவரும் என்பதை அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

முதற்கட்ட விசாரணையில் சில விஷயங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. விக்னேஷன், CNC லேபிற்கு, லேப் யூனிஃபார்ம் போடாமல் சென்றிருக்கிறான். இனிமேல் இந்தத் தவறை செய்ய மாட்டேன் என்று மன்னிப்பு கடிதம் எழுதித் தர சொல்லிக் கேட்டிருக்கிறார் லேப் இன்சார்ஜ். வேறு வழியில்லாமல் எழுதிக் கொடுத்திருக்கிறான். இது நடந்து ஒரு வருடமாகிறது. பின் பல தருணங்களில் பல காரணங்களுக்காக அவனிடம் மன்னிப்புக் கடிதம் வாங்கியிருக்கிறார்கள். இரண்டுமுறை அவனை செமஸ்டர் தேர்வில் ஃபெயில் செய்திருக்கிறார்கள். ஒருகட்டத்தில், உன் தந்தையைக் கூட்டிக்கொண்டு வா, உன் சார்பாக அவர் மன்னிப்புக் கடிதம் எழுதட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் அவன் பயந்து கொண்டு இந்த முடிவை எடுத்திருக்கிறான்.

“ஸ்கூல் படிக்கும் போது ரொம்ப சுதாரிப்பான பையனா இருந்தான், காலேஜ் வந்ததுல இருந்து ரொம்ப இண்ட்ரோவெர்ட் ஆயிட்டான்... யோசிச்சு யோசிச்சுதான் பேசுறான்...” என்று விக்னேஷனின் தந்தை கார்த்திகேயனிடம் கூறியது கார்த்திகேயனுக்கு நினைவுக்கு வந்தது.

*‘ஒரு மன்னிப்புக் கடிதம் ஒரு மனிதனின் கேரக்டரையே மாற்றி விடுமா? இது சாத்தியமா?’* கார்த்திகேயன் பாதிரியாரின் உதவியை நாடினார். பாதிரியார், அது சாத்தியமே என்றார். இன்னும் நிறைய விஷயங்களை கார்த்திகேயனுக்கு எடுத்துச் சொல்லி, நீ இப்போது விசாரித்துக் கொண்டிருக்கும் கோணத்திலேயே விசாரி என்று அறிவுரை வேறு சொல்லி அனுப்பினார் அந்த மனோதத்துவ நிபுணர்.

கார்த்திகேயன், அந்த லேப் இன்சார்ஜை விசாரித்தார். டிபார்ட்மென்டை கை காண்பித்தார் லேப் இன்சார்ஜ். மெட்டல் கட்டிங் விரிவுரையாளர்

அழகேசனை காலேஜ் கேண்டீனில் சந்தித்தார் கார்த்திகேயன். அழகேசன் மொட்டை அடித்து குறுந்தாடி வைத்திருந்தார். கார்த்திகேயனிடம் தயங்கித் தயங்கி ஓரிரு வரிகள் பேசினார். பேசும்போது தன் வலது விரலில் அணிந்திருந்த நவரத்தின மோதிரத்தை இடது உள்ளங்கையில் வைத்துத் தேய்ப்பதை கார்த்திகேயன் கவனித்தார்.

“இதெல்லாம் பார்ட் ஆஃப் தி சிஸ்டம் சார். இவ்ளோ பசங்களக் கட்டி மேய்க்குறதுனா சும்மாவா? ஸ்டூடண்ட்ஸ் நல்லதுக்குத்தான் சார் நாங்க எல்லாம் பண்றோம்” என்று சொல்லிவிட்டு நழுவிக் கொண்டார் அழகேசன். மேற்கொண்டு யாரை விசாரிப்பது என்று யோசித்துக்கொண்டிருக்கையில், டி.ஜி.பி–யிடமிருந்து ஃபோன் வந்தது. டிபார்ட்மென்டிலிருந்து டீனிற்கு செய்தி போயிருக்கிறது, டீன் டி.ஜி.பியிடம் வத்தி வைத்திருக்கிறார் என்பதை கார்த்திகேயன் புரிந்துகொண்டார்.

“யோவ்... கேசுக்கு சம்மந்தம் இல்லாத விசயத்துலலாம் ஏன் மூக்க நுழைக்குற? கொலையப் பத்தி விசாரிக்கப் போனியா, இல்ல தற்கொலையப் பத்தி விசாரிக்கப் போனியா?” வீரபத்திரன் சீறினார்.

“இல்ல சார். இந்த அபாலஜி லெட்டருக்கும் கேசுக்கும் ஏதோ சம்மந்தம் இருக்கு...” கார்த்திகேயன் பதிலளித்தார்.

“யார் சொன்னா?”

“உள்ளுணர்வு”

“கமலஹாசன் படம் பாத்தியா... ஏதேதோ பேசுற! தேவை இல்லாம காலேஜ் பிரச்சனைல மூக்க நுழைக்காத... இஞ்சினீரிங்க் காலேஜ்னா அப்டிஇப்டி தான் இருக்கும்...” என்று சொல்லிவிட்டு போனைத் துண்டித்தார் டி.ஜி.பி.

கார்த்திகேயனுக்கு விசாரணையை எப்படி அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது என்று புரியவில்லை. திடீரென்று அவருக்கு ஒரு யோசனை உதித்தது.

# 12

"...எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்

எத்தனை யடியேன் எத்தனை செயினும்

பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்..."

அன்று கிருத்திகை என்பதால், குமரகுன்றம் விழாக்கோலம் பூண்டிருந்தது. கோவிலில் சப்தமாக ஓடிக்கொண்டிருந்த கந்தர்சஷ்டி கவசம், குமரகுன்றம் அருகே உள்ள டீக்கடையில் காத்திருந்த கார்த்திகேயனின் காதில் விழுந்தது.

சிறிது நேரத்திற்குப் பின்பு, ஒரு ஆட்டோ வந்து நின்றது. ஆட்டோவில் இருந்து இறங்கினார் பஷீர். பிறவியிலேயே ஒரு காலை போலியோ தாக்கியிருந்ததால், தாங்கித் தாங்கி நடந்து வந்தார்.

"டீ சாப்புடுறீங்களா...?" வினவினார் கார்த்திகேயன்.

பஷீர் சரி என்பது போல் தலையசைத்தார். டீ வந்தது. பஷீர் டீ குடிக்கத் தொடங்கினார். கார்த்திகேயன் பேச்சைத் தொடங்கினார்.

"நீங்க ஹெல்ப் பண்ணுவீங்களோ மாட்டீங்களோங்கிற டவுட்ல தான் உங்கள அப்ரோச் பண்ணினேன்..."

"எல்லாருமே கெட்டவங்க இல்ல சார்..."

பஷீர் ப்ரொடக்சன் டிபார்ட்மெண்டில் ப்யூனாக வேலை செய்துகொண்டிருந்தார். டீச்சிங் ஊழியர்களை விசாரித்து ஒரு பிரயோஜனமும் இல்லை என்பதை கார்த்திகேயன் புரிந்து கொண்டார். ஏனெனில் மன்னிப்புக் கடிதம் முறையை பின்பற்றி வளர்ப்பது அவர்கள் தான். மேலும் அவர்கள் அரசு ஊழியர்கள். எந்த ஆதாரங்களுமின்றி அவர்களை அதிகம் விசாரிப்பது நல்லதல்ல. அது கார்த்திகேயனுக்கே பிரச்சனையாக முடியலாம். நான் டீச்சிங் ஸ்டாஃப் யாராவது உதவக்கூடும் என்று கார்த்திகேயன் எண்ணினார். அவர்களில் பெரும்பாலானோர் தற்காலிக ஊழியர்களாக இருந்தனர். கார்த்திகேயன் நினைத்தது போல், பஷீர் உதவ முன்வந்தார்.

“உங்களுக்கு என்ன சார் தெரியணும்?” பஷீர் வினவினார். கார்த்திகேயன் சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.

“அபாலஜி லெட்டர்...”

“அதுவா… அது அந்த டிபார்ட்மெண்ட்லயே ஊறுன வழக்கம் சார். பல வருஷமா அந்த வழக்கம் இருக்காம்... நான் வேலைக்கு சேர்றதுக்கு முன்னாடி இருந்தே...”

“நீங்க எப்ப வேலைக்கு சேந்தீங்க...”

“2010...”

*‘2007 முதல் 2009 வரை என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் அபாலஜி லெட்டர் பற்றி அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்’* கார்த்திகேயன் யோசித்தார்.

“என்ன தப்பு பண்ணுனா அபாலஜி லெட்டர் எழுத சொல்லுவாங்க?“

“அப்டிலாம் கிடையாது சார்... எதுக்கு வேணா எழுத சொல்லுவாங்க. கிளாசுக்கு வரலனா, டிபார்ட்மெண்ட் ஃபங்சனுக்கு காசு கொடுக்கலனா... எதுக்கு வேணா... நல்லது கெட்டதுனு கிடையாது... அது அவங்களுக்கு ஒரு போதை மாதிரி... அந்த போதை ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட்ல எல்லாத்துக்குமே இருந்துச்சு... காஸ்டிங்க் புரொஃபசர் வேணுகோபால், ரொம்ப நல்ல மனுஷன். அவரு கூட அபாலஜி லெட்டர் கேப்பாருனா பாத்துக்கோங்களேன்...”

‘போதை’ இந்த வார்த்தை கார்த்திகேயனுக்கு பாதிரியார் இம்மானுவேலின் வார்த்தைகளை நினைவு படுத்தியது.

“உலகத்துலயே கொடூரமான செயல் எது கார்த்திக்?”

“அடுத்தவங்களுக்கு துன்பம் விளைவிக்கிறது...?”

“இல்ல கார்த்திக். அத விட கொடூரமான செயல் ஒண்ணு இருக்கு. சக மனுஷன அடிமைபடுத்திப் பார்க்குறது... அவன நம்மளவிட தாழ்ந்தவனா நடத்துறது... அடுத்தவன திட்டுறது, அடிக்கறது எல்லாம் கோபத்துல செய்யுற செயல்கள். ஆனா இன்னொருத்தன அடிமை படுத்திப் பாக்கணும்னு நினைக்குறது ஒருவகையான பெர்வேஷன். அந்த பெர்வேஷன் தான் இந்த டிபார்ட்மெண்ட் ஆளுங்ககிட்டையும் இருக்கு... அபாலஜி லெட்டர் ஏன் எழுத

சொல்லணும்? ஒருத்தன் தப்பே செஞ்சிருந்தாலும், அவனுக்கு நல்லத எடுத்துச் சொல்லி மன்னிச்சு விட்டுரலாமே! அதான ஒரு வாத்தியாரோட கடமை? ஆனா மன்னிப்பு கேள், அதையும் எழுத்துல கேள்னு சொல்றது எதுக்கு? நீ என்னவிட தாழ்ந்தவன், நீ எப்பவும் எனக்கு கட்டுப்பட்டுதான் இருக்கணும்னு சொல்லாம சொல்றதுக்காகதான். நான் உன்கிட்ட முன்ன சொன்ன மாதிரி, ஒருத்தன இன்ஃபீரியரா ஃபீல் பண்ண வச்சுட்டா, அவனால நிமிரவே முடியாது. இப்படி பண்றதுல அவங்களுக்கெல்லாம் உள்ளுக்குள்ள ஒரு சந்தோஷம். பெர்வேர்ட்ஸ்''

*'பாதிரியார் பெர்வேஷன் என்று சொன்னதைத் தான் இவர் போதை என்று சொல்கிறார்'* கார்த்திகேயன் அப்படியே சிலையாக நின்று யோசித்தார்.

''என்ன சார் உங்கபாட்டுக்கும் ஏதோ யோசிச்சுக்கிட்டே இருக்கீங்க...?'' பஷீரின் குரல் கார்த்திகேயனை மீண்டும் நிகழ்காலத்திற்கு கொண்டுவந்தது.

''இல்ல என்னென்ன தப்பு பண்ணுனா அபாலஜி லெட்டர் எழுதணும்னு சொன்னீங்க?''

''அதான் சொன்னனே சார். இதுதான் தப்புனு இல்ல.. ஒரு பையன் கேண்டீன்ல அழகேசன் சாரப் பாக்கும் போது வணக்கம் வைக்கலனு அவன அவரு அபாலஜி லெட்டர் எழுத வச்சாரு. ஆனா கரை வச்சுட்டாங்கனா ஒருத்தன் லைஃபையே ஸ்பாயில் பண்ணிருவாங்க. டிபார்ட்மென்ட் சேர்மென் எலக்சன்ல ஸ்டாஃப் நிறுத்துற ஆளுங்கதான் நிக்கணும். போன வருஷம் ஒரு பையன் நான்தான் நிப்பேனு சண்டை போட்டான்.. அவன மிரட்டி அடக்கிட்டாங்க.. அபாலஜி லெட்டர் வேற எழுதிக் கொடுத்தான். ஆனா இவங்க அதோட விடல. அவன் செமஸ்டர்ல B கிரேடு வாங்கியிருந்தான். நான் தான் ரிசல்ட் பேப்பர் ஒட்டினேன்.. ஆனா கடைசி நேரத்துல பழைய கிரேட மாத்தி, எல்லா சப்ஜட்லயும் அவனுக்கு E கிரேடு போட சொல்லி HOD சொன்னாரு.. அதான் கடைசி கிரேடு.. அவசரஅவசரமா ஒட்டுன ரிசல்ட் பேப்பர பிச்சி, அவன் கிரேட மாத்தி புது ரிசல்ட் ஒட்டுனாங்க.. அவனால எதுவும் பண்ண முடியல... பாவம் அந்தப் பையனுக்கு கேம்பஸ்ல வேலையும் கிடைக்கல...''

கார்த்திகேயனுக்கு கேட்கக் கேட்க ஆச்சர்யமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அவர் பொறியியல் கல்லூரிகளில் நடக்கும் அடக்குமுறைகள் பற்றி

கேள்விப்பட்டிருக்கிறார். இருட்டறையில் மாணவர்களை அடைத்து வைத்து அடிக்கும் கல்லூரியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். ஒரு மாணவனும் மாணவியும் உரையாடினால், அவர்களை கல்லூரியை விட்டே அனுப்பும் பொறியியல் கல்லூரியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் அவை தனியார் கல்லூரிகள். ஒரு அரசு பொறியியல் கல்லூரியில் இவ்வளவு அடக்குமுறைகள் இருக்கும் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

‘‘காலேஜ் நிர்வாகத்துக்கு இதெல்லாம் தெரியாதா?‘‘

‘‘எல்லாம் தெரியும் சார்... ஸ்டூடண்ட்ஸ் நல்லதுக்குதான் இதெல்லாம் பண்றோம்னு சொன்னா யாரால என்ன பண்ண முடியும் சொல்லுங்க? ஒருத்தன் உடம்புல அடிச்சாதான் தப்பு... இவங்க மனசுல இல்ல அடிக்குறாங்க...! அதான் வெளிய தெரியாமலே போயிருது.. அதுமட்டுமில்லாம அட்டானமஸ் காலேஜ் சார். இவங்க வைக்குறதுதான் சட்டம்...’’

எல்லா புள்ளிகளும் ஒரே கோட்டில் இணையத் தொடங்கிவிட்டதை எண்ணி கார்த்திகேயன் சந்தோஷப்பட்டார். பஷீருக்கு நன்றி தெரிவித்தார். ஒரு ஆட்டோ பிடித்து அவரை ஏற்றிவிட்டார். ஆட்டோவில் ஏறச் சென்ற பஷீர்,

‘‘அது சரி சார், நான் ஹெல்ப் பண்ணமாட்டேனு சொல்லியிருந்தா என்ன பண்ணியிருப்பீங்க?‘‘ என்று கிண்டலாக வினவினார்.

‘‘உங்க கூட ஒரு லேடி வர்க் பண்றாங்களே, டைப்பிஸ்ட், அவங்கள அப்ரோச் பண்ணியிருப்பேன்...’’

‘‘ஐயையோ… நல்லவேள நானே ஒத்துக்கிட்டேன்… அந்த அம்மாவ ஏதாவது கேட்டீங்கனா மேட்டர் டைரக்டா H.O.D கிட்ட போயிடும்’’ சொல்லிவிட்டு கண் சிமிட்டினார் பஷீர். கார்த்திகேயன் சிரித்தார். குமரகுன்றத்திற்கு எதிரே இருக்கும் பெருமாள் கோவிலுள்ளிருந்து ஒரு உருவம் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது.

# 13

கூட்டுப் பிரார்த்தனையை முடித்துவிட்டு பாதிரியார் தன் அறைக்குத் திரும்பும் போது, வரவேற்பறையில் கார்த்திக் அமர்ந்திருப்பதைக் கண்டார். அந்த அறையில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியில் ஒன்பது மணி செய்தி ஓடிக்கொண்டிருந்தது.

*‘காலையில் தன்னைச் சந்தித்துவிட்டு சென்றவன், மீண்டும் இப்போது வந்திருக்கிறான் என்றால் முக்கியமான விஷயமாகத் தான் இருக்க முடியும்’* என்று எண்ணியவாறே அவன் அருகில் வந்தார்.

“ஹவ் கேன் ஐ ஹெல்ப் யு” கார்த்திகேயனை வினவினார். இந்த முறை கார்த்திகேயன் நேரடியாக பேச்சைத் தொடங்க விரும்பவில்லை. இந்தக் கேஸ் முடியப்போகிறது என்று அவர் உள்ளுணர்வு சொல்லிற்று. அதனால், அவருடைய டென்ஷனும் குறைந்திருந்தது.

“ஏன் ஃபாதர் ஏதாவது காரியம்னாதான் உங்கள தேடிவருவேனு நினைச்சீங்களா..?”

பாதிரியார் கிண்டலான தொனியில் பதிலளித்தார். “நேத்து பேசிக்கிட்டு இருக்கும் போது ஃபோன் வந்தது. பதட்டமா கிளம்பிப் போன. நேத்து நைட் டின்னர் வர சொல்லியிருந்தேன், நீ வரல. வரமுடியாதுனு ஃபோன் பண்ணியும் சொல்லல. மறுபடியும் இன்னைக்கு மத்தியானம் வந்த, கேசப் பத்திப் பேசுன. போய்ட்டுவரேனு கூட சொல்லாம போய்ட்ட. இப்ப மறுபடியும் வந்திருக்கனா...”

“போதும் ஃபாதர்... வார்த்தையால குத்தாதீங்க... என் சூழ்நிலை அப்படி... சாரி”

“ஓ! மை சன். ஐ வாஸ் ஜஸ்ட் ஜோக்கிங். சரி சொல்லு என்ன பிரச்சனை...?”

“சாயங்காலம் ப்ரொடக்சன் டிபார்ட்மென்ட் ப்யூன்கிட்ட பேசுனேன்... அவரு சொல்ற விசயத்தலாம் வச்சுப் பாக்கும் போது...”

கார்த்திகேயன் பஷீர் சொன்ன அனைத்தையும் பாதிரியாரிடம் சொன்னார். பாதிரியார் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டார்.

‘‘அபாலஜி லெட்டருக்கும் தற்கொலைக்கும் சம்மந்தம் இருக்குற மாதிரி, அபாலஜி லெட்டருக்கும் இந்தக் கொலைகளுக்கும் ஏதோ சம்மந்தம் இருக்கும்னு நீ நினைக்கிற... சரிதான?’’

‘‘யெஸ் ஃபாதர்...’’

‘‘அப்பறம் ஏன் இந்தக் கிழட்டு பாதிரியாரத் தேடி வந்த... ஃபர்தரா இன்வெஸ்டிகேட் பண்ண வேண்டியதுதான?’’

‘‘நீங்க ஒரு பாதிரியார்ங்குறதுனால உங்களத் தேடி வரல... நீங்க ஒரு சைக்கியாட்டிரிஸ்ட்... ஞாபகம் இருக்குல்ல?’’

இதைக் கேட்டதும் இம்மானுவேல் சிரித்தார்.

‘‘வெஸ்டர்ன் கண்ட்ரிஸ்ல தான் சீரியல் கில்லிங்க்ஸ்ல சைக்கியாட்டிரிஸ்ட்டோட பேச்சு எடுபடும்... நம்மூர் கோர்ட்லலாம் எங்க பேச்சு எடுப்படாது...‘‘ நிதானமாகப் பேசினார் பாதிரியார்.

‘‘ஆனா என் கோர்ட்ல உங்க பேச்சு எடுபடும் ஃபாதர்...’’

பாதிரியார் சிறிது நேரம் மௌனம் காத்தார். அவர் இப்படிச் சுற்றி வளைப்பதற்குக் காரணம் இருக்கிறது. அவர் என்னதான் சைக்கியாட்டிரிஸ்ட்டாக இருந்தாலும், உள்ளத்தால் அவர் தன்னை பாதிரியாராக மட்டுமே கருதுகிறார். ஒருவன் தப்பே செய்திருந்தாலும் அவனை தண்டிக்கும் உரிமை பிதாசுதனுக்கே இருக்கிறது என்று நம்புபவர் அவர். மேலும் அனலிசிஸ் சில நேரங்களில் தவறாகவும் போகலாம். அப்படி தவறாகிவிட்டால் நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடுவான். எக்காரணத்தினாலும், அப்படி நடந்துவிடக்கூடாது என்பதில் அவர் தெளிவாக இருந்தார். அதனால்தான் கார்த்திகேயனிடம் பேச்சு கொடுத்துக் கொண்டே, மனதில் இந்த வழக்கைப் பற்றி அனாலிசிஸ் செய்து வந்தார். இறுதியில், தன் வளர்ப்பு மகனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தார்.

‘‘தற்கொலை செஞ்சுக்குறவன் ஒரு கோழைனு சொல்லுவாங்க. பட் தி ட்ருத் ஈஸ், தற்கொலை செஞ்சுக்கதான் அதிக தைரியம் வேண்டும். கொலை செய்ய அதவிட அதிக தைரியம் வேணும்... எல்லாத்துக்குமே ஹார்மோன்ஸ்தான் காரணம். நம்மளோட ஸ்ட்ரெஸ்ஸ கம்மி பண்றதுக்கு, நம்ம உடம்புலயே கார்டிசால்னு ஒரு ஹார்மோன் சுரக்குது. இந்த

ஹார்மோனோட லெவல் டிஸ்டர்ப் ஆகும்போது தற்கொலை எண்ணம் அதிகமாகும். சில நேரங்கள்ல கொலை செய்யணும்னு கூட தோணும்...''

''எப்பலாம் டிஸ்டர்ப் ஆகும்?''

''கன்ட்ரோல் பண்ண முடியாத அளவுக்கு ஸ்ட்ரெஸ் அதிகமாச்சுனா, கவலை அதிகமாச்சுனா...''

''அப்ப நம்ம எல்லாருக்குமே அப்படி நடக்கணுமே! எல்லாருக்கும்தான் கவலை, ஸ்ட்ரெஸ், ஆங்ஸைடிலாம் இருக்கு?''

''இல்லை. நம்ம உடம்பு, மனசு இது ரெண்டும் கண்ணாடி மாதிரி. நம்மள சுத்தி நடக்குற விசயங்களோட பிரதிபலிப்பாதான் உடம்பும் மனசும் இயங்கும். தனிமைல இருக்குறவங்களுக்கு, அடுத்தவங்களோட சப்போர்ட் எதுவும் இல்லாம தவிக்கிறவங்களுக்கு, இன்ஃபீரியரிட்டி காம்ப்லெக்ஸ் இருக்குறவங்களுக்கு கார்டிசால் லெவல் ஈஸியா டிஸ்டர்ப் ஆகிடும். ஒரு மனுஷனோட சோசியல் லைஃப் தான் இதையெல்லாம் டிசைட் பண்ணுது...''

கார்த்திகேயனுக்கு புரிந்தது. விக்னேஷனுக்கு அதிக நண்பர்கள் இல்லை, அவன் தயங்கித் தயங்கிதான் பிறருடன் பழகுவான் என்பது விசாரணையில் தெரியவந்திருந்தது. ஆனாலும் சில கேள்விகள் அவர் மனதில் தொக்கி நின்றன.

''மத்தவங்களோட பழகுறதுக்கே கூச்சப் படுற ஒருத்தனால, எப்படி கொலை பண்ண முடியும்?''

''ஏன் முடியாது... ஸ்ட்ரெஸ் அதிகமாகும் போது அவங்க அவங்களா இருக்க மாட்டாங்க...''

''ஸ்ப்லிட் பர்சனாலிட்டி மாதிரியா?''

''ஒரு வகையில நாம எல்லாருமே ஸ்ப்லிட் பர்சனாலிட்டிஸ் தான்... ஆனா இந்த கேஸ் அப்படி இல்ல... சைகாலஜில இத ஸ்ப்லிட் பர்சனாலிட்டினு சொல்ல மாட்டோம்... மூட் ஸ்விங்க்ஸ்னு வேணா சொல்லலாம்...''

''சோ... ஒரு மனுசனுக்கு ஸ்ட்ரெஸ் அதிகமாகும் போது, அவன் என்ன வேணும்னாலும் பண்ணுவான்?''

''எக்ஸாக்ட்லி''

கார்த்திகேயனுக்கு ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை. அதை பாதிரியாரிடம் வெளிப்படையாகக் கேட்க முடிவு செய்தார்.

“அந்தப் பையன் அபாலஜி லெட்டரால ரொம்ப பாதிக்கப்பட்டுருக்கான்… அவன் இண்ட்ரோவெர்ட் வேற… அதனால் தற்கொலைக்கு முயற்சி பண்ணியிருக்கான்… இதெல்லாம் என்னால புரிஞ்சிக்க முடியுது… பட்… ஆஃப்டரால் மன்னிப்புக் கடிதம் எழுத வச்சிட்டாங்கனா ஒருத்தன் கொலை பண்ணுவான்?”

“உனக்கு அது ஆஃப்டரால் மன்னிப்பு கடிதமா இருக்கலாம். பட் அவனுக்கு அது பெரிய விசயமா இருக்கலாம் இல்லையா? 1982—ல போஸ்டன்ல ஒரு வயசான பெண்மணி ரொம்ப ப்ரூட்டலா கொல்லப் பட்டாங்க. கொலைக்காரனையும் புடிச்சுட்டாங்க… இருபது வயசு பையன்… கொலைக்கு அவன் சொன்ன காரணம் எல்லாரையும் ஆச்சர்யப்படுத்துச்சு, அந்த லேடி டிரைன்ல அவனப் பாத்து ஏளனமா சிரிச்சாங்களாம்… அதத் தாங்கிக்க முடியாம கொன்னுட்டேன்னு சொல்லியிருக்கான். விசாரிச்சதுல அந்தப் பையனுக்கு அப்பா அம்மா இல்ல, அன்பு காட்டுறதுக்கும் யாரும் இல்லங்குறது தெரிய வந்துச்சு… எல்லாருமே தன்ன உதாசீனப்படுத்துறாங்கனு அவன் நினச்சிருக்கான், அவன் இறக்குற வரைக்கும் அந்த எண்ணம் அவன விட்டுப் போகல… நான் முன்னாடியே சொன்ன மாதிரி, ஒரு மனுஷனோட சோசியல் லைஃப் தான் இதையெல்லாம் டிசைட் பண்ணுது…”

கார்த்திகேயன் விடைபெற்றுக்கொண்டார். அவர் எங்கே போகிறார் என்பது பாதிரியாருக்கு புரிந்துவிட்டது. பத்து மணி செய்திகள் ஒளிபரப்பானது. ஒன்பது மணி செய்தி பார்க்க முடியவில்லை என்பதால் பாதிரியார் பத்து மணி செய்தியைப் பார்க்கத் தொடங்கினார்.

# 14

வேகமாக வந்த பேட்ரால் கார், K.I.T முன் கேட்டிலிருந்து பத்தடி தள்ளி நின்றது. முன் இருக்கையிலிருந்து கார்த்திகேயன் இறங்கினார். பின் இருக்கையிலிருந்து ஏழுமலையும், இன்னொருவரும் இறங்கினர். அந்த இன்னொரு உருவம் கையில் ஒரு பேக் வைத்திருந்தது. கார் வேகமாக அங்கிருந்து நகர்ந்தது. மணி இரவு பன்னிரண்டு.

விசாரணையில் இன்னும் ஒரே ஒரு புள்ளியை மற்ற புள்ளிகளோடு இணைக்க வேண்டும். அதற்கு அந்த ப்ரொடக்சன் டிபார்ட்மெண்டை அலசி ஆராய வேண்டும். எப்படியும் டி.ஜி.பி அதற்கு அனுமதி தரப்போவதில்லை. விசாரணையை முடித்துவிட்டு டி.ஜி.பியிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தார் கார்த்திகேயன்.

‘கல்லூரிக்குள் எப்படி நுழைவது?’ இதுவே கார்த்திகேயனின் பிரதான கேள்வியாக இருந்தது. ஆனால் அதிகம் மெனக்கெடாமல் கல்லூரிக்குள் நுழைய உதவி செய்வதாக அந்த இன்னொரு நபர் ஒப்புக்கொண்டார்.

மெயின் கேட் பூட்டப்பட்டிருந்தது. மெயின் கேட் பக்கத்தில், ஒரு சிறு கேட் இருந்தது. அந்தக் கேட்டினுள் புகுந்தால் செக்யூரிட்டி கேபின் வரும். கேபினுள் புகுந்து, இன்னொரு புறம் வெளியே வந்தால், காலேஜ் மண்ணில் கால் பதித்திட முடியும். காவலாளிகள் போய் வருவதற்காக அந்த கேட் அமைக்கப்பட்டிருந்தது.

பேக் வைத்திருக்கும் அந்த நபர் முன்னே போக, கார்த்திகேயனும் ஏழுமலையும் பின் தொடர்ந்தார்கள்.

“நான் பாடும் மௌன ராகம் கேட்கவில்லையா...” ரேடியோ யாருக்காகவோ ஓடிக்கொண்டிருந்தது. செக்யூரிட்டி, இருக்கையில் அமர்ந்தவாறே உறங்கிக்கொண்டிருந்தார். அந்த நபர் கேட்டை இரண்டு முறை தட்டினார். திடுக்கிட்டு விழித்த செக்யூரிட்டி, சுதாரித்துக் கொண்டு கேட் அருகில் வந்தார்.

“வந்துட்டீயாய்யா... பாட்டு கேட்டுக்கிட்டே இருந்தேன்… அப்படியே தூங்கிட்டேன் போல...” என்றவாறே செக்யூரிட்டி அந்த பேக் வைத்திருந்த நபருக்குப் பின் நின்று கொண்டிருந்த இருவரையும் பார்த்தார்.

“நான் சொன்னேன்ல...” பேக் வைத்திருந்த நபர் கூறினார்.

பின் செக்யூரிட்டி எதுவும் பேசாமல் கேட்டைத் திறந்தார்.

மேல்மட்டத்தில் இருக்கும் மனிதர்களுக்குள்தான் ஈகோ மேலோங்கியிருக்கும். அடிமட்டத்தில் இருப்பவர்களிடம் அதெல்லாம் இருக்காது. எல்லா இடங்களிலும் கடைநிலை ஊழியர்களுக்கிடையே ஒரு புரிதலும், பந்தமும் இருக்கும். இங்கே பஷீருக்கும் அந்தச் செக்யூரிட்டிக்குமிடையே இருந்த புரிதல் கார்த்திகேயனுக்குச் சாதகமாக அமைந்தது.

கேபினுக்குள் நுழைந்து அனைவரும் கல்லூரி மண்ணில் இறங்கியதும், செக்யூரிட்டி, “பஷீரு” என்று அழைத்தார். அனைவரும் திரும்பினர்.

“பிரச்சனை ஆவாம பாத்துக்கோ பஷீரு… வேலை போயிடும்...” செக்யூரிட்டியின் குரலில் பயம் இருந்தது.

“அதெல்லாம் ஒண்ணும் ஆகாது” என்று சொல்லிவிட்டு பஷீர் அங்கிருந்து நகர்ந்தார். அவர்கள் ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட் வாசலை அடையும் போது மணி 12.25. மெயின் கேட்டிலிருந்து பதினைந்து நிமிடங்களில் டிபார்ட்மெண்ட்டை அடைந்துவிடலாம். பஷீரால் வேகமாக நடக்க முடியாததால், நேரம் அதிகமாகிவிட்டது.

டிபார்ட்மெண்ட் கேட்டைத் திறக்கவேண்டும். பஷீரிடம் ஒரு சாவி இருந்தது. அந்தப் பூட்டிற்கு மூன்று சாவிகள் இருந்தன. ஒன்று டீன் ஆஃபிஸில் டீனுடைய கண்ட்ரோலில் இருந்தது. இன்னொரு சாவியை டீச்சிங் ஸ்டாஃப் யாராவது வைத்திருப்பார்கள். பிரகாஷ் இருந்தவரை சாவி அவரிடமிருந்தது. இப்போது சாவி அழகேசனிடம் இருக்கிறது.

பஷீர் பூட்டைத் திறந்தார். டிபார்ட்மெண்ட் லைப்ரரிக்குச் செல்ல வேண்டும். மூன்றாவது மாடியில் கடைசி அறையில் லைப்ரரி இயங்கிக் கொண்டிருந்தது. லைப்ரரிக்குள் ஒரு சிறு அறை இருந்தது. அந்த அறையை ஸ்டோர் ரூமாகப் பயன்படுத்தி வந்தார்கள். அந்த அறை எப்போதும் பூட்டியே இருக்கும். அந்த

அறையின் சாவி HOD ரூமில் இருந்தது. பஷீர் அதை எடுத்து வரும் வரை கார்த்திகேயனும் ஏழுமலையும் காத்திருந்தனர். பஷீர் வந்தார். ஸ்டோர் ரூம் திறக்கப்பட்டது.

“இங்கதான் சார் ஸ்டூடண்ட்ஸ்கிட்ட வாங்குற அபாலஜி லெட்டர்ஸ எல்லாம் ஸ்டோர் பண்ணி வைப்பாங்க...” பஷீர் சொன்னதைக் காதில் வாங்கியவாறே, கார்த்திகேயன் அறையை நோட்டம் விட்டார். ஏராளமான ஃபைல்கள் இருந்தன. தரையிலேயே அடுக்கி வைத்திருந்தார்கள். சில பழைய லேப் கருவிகளும் கிடந்தன.

கார்த்திகேயன் ஒரு அடுக்கிலிருந்து ஃபைல் ஒன்றை உருவினார்.

“ஜெனரேஷன் ஆஃப் பவர் யூசிங் ஸ்டிர்லிங்க் இஞ்ஜின்” என்று எழுதியிருந்து.

*‘ஏதோ ப்ராஜக்ட் ரிப்போர்ட்!’* ஃபைலை எடுத்த இடத்திலேயே வைத்தார்.

“குப்பை மாதிரி கிடக்கு… இதுல அபாலாஜி லெட்டர்ஸ எப்டித் தேடுறது?” என்று புலம்பினார் ஏழுமலை.

கார்த்திகேயன் இன்னொரு அடுக்கிலிருந்து ஃபைலை எடுத்தார். திறந்து பார்த்தார்.

செமினாருக்கு வராததால் யாரோ ஒரு ஸ்டூடண்ட் எழுதிய அபாலஜி லெட்டர் முதலில் இருந்தது. தேதி 12.12.2005 என்று இருந்தது, அந்த ஃபைலுக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்கள் இருந்தன.

“பேட்ச் பேட்சா வச்சிருப்பாங்க சார்” பஷீர் கார்த்திகேயனிடம் சொன்னார்.

கார்த்திகேயன் அமைதியாக பஷீரைப் பார்த்தார். கார்த்திகேயனுக்குப் புரியவில்லை என்பதைப் புரிந்துகொண்ட பஷீர் அந்த ஃபைலை கார்த்திகேயனிடமிருந்து வாங்கினார்.

“இங்க பாருங்க இது 2005—ல எழுதுனது… எல்லா லெட்டர்லயும் ஸ்டூடண்ட் பேர், ரோல் நம்பர், டேட் இருக்கும்…“

கார்த்திகேயன் அந்தக் கடிதத்தைப் பார்த்தார். ரோல் நம்பர் 20033528 என்று இருந்தது.

“இது 2003 பேட்ச் ஸ்டூடண்ட் எழுதுனது சார். அதாவது 2003—ல காலேஜ் ஜாயின் பண்ணுன ஸ்டூடண்ட்… ‘35’—டிபார்ட்மெண்ட் கோட். 28—

ஸ்டுடண்ட் நம்பர்''

கார்த்திகேயன் பெயரைப் பார்த்தார். ரத்னா என்று இருந்தது.

*'மாணவன், மாணவி என எந்தப் பாகுபாடுமின்றி மன்னிப்புக்கடிதம் எழுதி வாங்கியிருக்கிறார்கள்'*

அவருக்கு 2007—2009 வரை எழுதப்பட்ட மன்னிப்புக்கடிதங்கள் தான் தேவை. ஆனால் இங்கே கடிதங்கள், வருடவாரியாகத் தொகுக்கப்படவில்லை. பேட்ச்வாரியாக ஃபைல் செய்து வைக்கப்பட்டிருந்தது. 2007—ஆம் ஆண்டு ஜனவரியில் எழுதப்பட்ட கடிதம் வேண்டுமெனில், அந்தக் குறிப்பிட்டக் காலகட்டத்தில் அந்த டிபார்ட்மெண்டில் படித்த அத்தனை பேட்ச் மாணவர்கள் எழுதிய கடிதங்களையும் ஆராய வேண்டும். அதாவது, 2003—யில் கல்லூரியில் இணைந்தவர்களும் 2007 மே வரை படித்திருப்பார்கள். 2004—ல் இணைந்தவர்கள் 2008 வரை படித்திருப்பார்கள்...

2007 மே மாசம் முதல் 2009 ஏப்ரல் வரை எழுதப்பட்ட கடிதங்கள் வேண்டுமெனில், 2004, 2005, 2006, 2007, 2008 பேட்ச் மாணவர்கள் எழுதிய கடிதங்கள் அனைத்தையும் ஆராய வேண்டும். 2009 பேட்ச் மாணவர்கள் ஜூலை மாதத்தில்தான் கல்லூரியில் இணைந்திருப்பார்கள் என்பதால் அந்த பேட்சை விட்டுவிடலாம்.

வேகமாக அடுத்த அடுக்கின் அடியிலிருந்து ஒரு ஃபைலை எடுத்தார். 1998—ஆம் ஆண்டு எழுதப்பட்ட கடிதங்கள் இருந்தன.

*'இதை ஒரு சம்ப்ரதாயமாகவே பின்பற்றி வருகிறார்கள். எப்போதோ யாரோ ஒருவன் தொடங்கி வைத்த சம்ப்ரதாயம், இன்று உடலளவில் சிலரை, மனதளவில் பலரை கொன்று கொண்டிருக்கிறது'*

மீண்டும் நிமிர்ந்து அறையை நோட்டம் விட்டார். அறை முழுக்க அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களைப் பார்க்கையில் கார்த்திகேயனுக்குத் தலை சுற்றியது. எனினும் தான் தேடும் மாணவன் இந்த ஐந்து பேட்ச்களுக்குள் தான் இருக்கிறான் என்று எண்ணும்போது அவருக்கு சந்தோஷம் பிறந்தது. *'கொலைகாரனை நெருங்கிக் கொண்டிருக்கோம்'* அவர் உள்ளுணர்வு சொல்லியது. கார்த்திகேயன் சுறுசுறுப்பானார். அவரது போலீஸ் மூளை வேலை செய்யத் தொடங்கியது.

“ஏழுமலை பஷீர். நமக்கு மே 2007—லயிருந்து ஏப்ரல் 2009—வரை எழுதுன லெட்டர்ஸ்தான் தேவை. அத மட்டும் எடுத்துத் தனியா வைங்க... அடில தேடாதீங்க... பழைய லெட்டர்ஸ்தான் இருக்கும்...” என்று சொல்லிவிட்டு, தானும் ஒரு பக்கம் தேட ஆரம்பித்தார்.

# 15

அவர்கள் தங்களுக்குத் தேவையான ஃபைல்களைப் பிரித்தெடுத்திருந்தனர். தேவையில்லாத ஃபைல்களை ஒரு மூலையில் போட்டுவிட்டனர். 2007 முதல் 2009 வரை தொகுக்கப்பட்ட ஃபைல்கள் மட்டும் எண்ணிக்கையில் எட்டு இருந்தன.

அந்த ஃபைல்களை தோராயமாகப் புரட்டிப் பார்த்து கார்த்திகேயன் சிலவற்றைக் கண்டுபிடித்திருந்தார்.

*‘ஒரு வருடம்— ஒரு பேட்ச்— ஒரு ஃபைல் என்ற முறையில் ஃபைல்கள் தொகுக்கப்பட்டிருந்தன.*

*ஃபைல்களின் எண்ணிக்கை:*

*2004 பேட்ச்— 1*

*2005 பேட்ச்— 2*

*2006 பேட்ச்— 2*

*2007 பேட்ச்— 2*

*2008 பேட்ச்— 1*

*ஒவ்வொரு ஃபைலிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மன்னிப்புக் கடிதங்கள் இருந்தன. நூற்றுக்கணக்கான காரணங்களுக்காக கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. எத்தனை மாணவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதை எண்ண வேண்டும். ஒவ்வொரு ஃபைலினுள்ளும், கடிதங்கள் தேதி வாரியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்ததால், யார் யார் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்ள சற்று மெனக்கெட வேண்டும்'*

மணி விடியற்காலை 2.30.

ஏழுமலை அமைதியாக நின்று கொண்டிருந்தார். பஷீர் வெளியே தம் அடிக்கச் சென்றிருந்தார். கார்த்திகேயன் சோர்வடைந்திருந்தார். ஆனால் ஃபைல்களை மீண்டும் மீண்டும் புரட்டிப் பார்ப்பதை மட்டும் நிறுத்தவில்லை.

*'எப்படியும் நூறிலிருந்து நூற்றைம்பது மாணவர்களாவது அந்த இரண்டு வருடங்களில் மன்னிப்புக் கடிதம் எழுதியிருக்கவேண்டும். ஆனால் அதில் நாம் தேடும் அந்த நபர் யார்? அவனை எப்படிக் கண்டுபிடிப்பது?'* கார்த்திகேயனுக்கு இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை.

பஷீர் உள்ளே வந்தார். தரையில், சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த தன் பேகினுள்ளிருந்து பிளாஸ்க் ஒன்றை எடுத்தார். மூன்று சில்வர் டம்ப்ளர்களையும் பேகினுள்ளிருந்து எடுத்து, பிளாஸ்கிலிருந்த டீயை அவற்றில் ஊற்றினார்.

"லேட் ஆவும்னு தெரியும், அதான் எடுத்தாந்தேன்" என்றவாறே டீயை மற்றவர்களிடம் கொடுத்தார். அனைவரும் டீ பருகத் தொடங்கினர். அது பழைய பிளாஸ்க் என்பதால் டீ ஆறியிருந்தது. அதைப் பொருட்படுத்தாமல் அனைவரும் டீயைக் குடித்தனர்.

கார்த்திகேயனுக்கு டீ புத்துணர்ச்சியைத் தந்திருந்தது.

பொழுது விடிவதற்குள் கல்லூரியை விட்டு வெளியேறிட வேண்டும் என்பதால் இன்னும் துரிதமாக வேலை செய்திட வேண்டும்.

"வேலைய ஆரம்பிப்போம்..." கார்த்திகேயன் சொன்னதும் மற்ற இருவரும் விழித்தனர். அடுத்து என்ன செய்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

“இப்ப என்ன சார் பண்ணப் போறோம்…?” ஏழுமலை வினவினார்.

“கலர் சீட்டாடப் போறோம் ஏழுமலை. என்ன பஷீர் உங்களுக்கு சீட்டாடத் தெரியும்ல…” கார்த்திகேயன் புன்னகை புரிந்தார். பஷீர் ஆச்சர்யமாகப் பார்த்தார்.

“இங்க சில ஸ்டூடண்ட்ஸ் ஒரே ஒரு அபாலஜி லெட்டர் எழுதியிருக்காங்க, சில பேரு நிறைய எழுதியிருக்காங்க. முதல்ல எத்தனை ஸ்டூடண்ட்ஸ் லெட்டர் எழுதியிருக்காங்கனு கண்டு புடிக்கணும்… சோ…” கார்த்திகேயன் பேசி முடிப்பதற்குள் பஷீர் இடைமறித்தார்.

“அதாவது ஒவ்வொரு ஸ்டூடண்ட்டா பிரிக்கப் போறோம். அப்பதான் எத்தனை ஸ்டூடண்ட்ஸ் இருக்கங்காங்கணு கண்டு புடிக்கமுடியும்…”

“கரெக்ட். நமக்குள்ள ஃபைல்ஸ பிரிச்சிப்போம்… ஒவ்வொரு ஸ்டூடண்ட் எழுதுன லெட்டர்ஸையும் தனித்தனியா அடுக்குவோம்… எத்தனை பேர் அபாலஜி லெட்டர் எழுதியிருக்காங்கனு தெரிஞ்சிரும்…”

“தலையச் சுத்தி மூக்கத் தொடுற மாதிரி இருக்கே சார்…” ஏழுமலை தன் கருத்தை முன்வைத்தார்.

“வேற வழி இல்ல ஏழுமலை. உங்கக்கிட்ட வேற மெதட் இருந்தா சொல்லுங்க…”

ஏழுமலை அமைதியாக நின்றார்.

“ஓகே.. லெட்ஸ் ஸ்டார்ட்…” நேரத்தை வீணடிக்க விரும்பாத கார்த்திகேயன் மற்ற இருவரையும் துரிதப்படுத்தினார்.

2004, 2005 ஆம் ஆண்டு ஃபைல்களை கார்த்திகேயன் எடுத்துக்கொண்டார். 2006 ஆம் ஆண்டு ஃபைல்கள் பஷீரிடம் சென்றன. மீதமிருந்த ஃபைல்களை ஏழுமலை எடுத்துக்கொண்டார்.

***

மணி 4.

வரிசையாக காகிதங்களை அடுக்கி முடித்திருந்தனர். மொத்தம் நூற்றி ஐம்பத்து மூணு மாணவர்கள் மன்னிப்புக் கடிதங்கள் எழுதியிருந்தனர். அந்த இரண்டு வருடங்களில் சிலர் ஒரு மன்னிப்புக் கடிதம் மட்டும் எழுதியிருந்தனர். சிலர் இருபதிற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதியிருந்தனர்.

“சார், நாம தேடுற ஆள் இதுக்குள்ளையே இருக்குறான்னு வச்சுப்போம்... ஆனா இவ்ளோ பேரையும் எப்டி சார் விசாரிக்கிறது...?” ஏழுமலையின் கேள்வி கார்த்திகேயனை நோக்கிப் பாய்ந்தது.

“எல்லாரையும் விசாரிக்கணும்னு அவசியமில்லை ஏழுமலை...”

ஏழுமலைக்குப் புரியவில்லை என்பது அவர் முகத்தில் தெரிந்தது. அதைப் புரிந்து கொண்ட பஷீர், ஏழுமலைக்கு விளக்கத் தொடங்கினார்.

“சார்... கார்த்திக் சார் தான் சொன்னாரே! இந்த அபாலாஜி லெட்டர் பல பேர மனதளவுல பாதிச்சிருக்குனு… அப்ப நிறைய லெட்டர் எழுதுனவங்கதானே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பாங்க? அவங்கள மட்டும் விசாரிச்சா போதும்னு சார் சொல்றாரு” என்று பஷீர் சொல்ல, கார்த்திக் அதை ஆமோதிக்கும் வகையில் புன்னகை புரிந்தார். ஆனால் ஏழுமலைக்கு இந்தப் பதில் திருப்தி அளிக்கவில்லை.

“சரி... அதிக லெட்டர்ஸ் எழுதின பத்து பேர விசாரிக்குறோம்னு வச்சுக்கோங்க... அதுல நாம தேடுற ஆள் இல்லனா…?” ஏழுமலை வினவினார்.

“அடுத்த பத்து பேர விசாரிங்க...” பஷீர் சொன்னார்.

“நீங்களே சொன்னீங்க, இந்தக் காலேஜ்ல படிச்ச நிறைய பேர் வெளிஊர்ல, வெளிநாட்ல இருக்காங்கனு... எப்படி சார் ஒவ்வொருத்தனையும் விசாரிக்க முடியும்?” என்று கார்த்திகேயனிடம் கேட்டார் ஏழுமலை.

‘*ஏழுமலை சொல்வது சரிதான். முதல் பத்து பேரில் அந்த நபர் இல்லாமல் போனால் என்ன செய்வது? எல்லோரையும் விசாரிப்பது சாத்தியமில்லை. அதிக கடிதங்கள் எழுதியவன்தான் கொலைகாரனாக இருக்கக்கூடும் என்பது ஒரு யூகம் தான். குறைந்த கடிதங்கள் எழுதியவனும் கொலைகாரனாக இருக்கலாமே? ஒரு மனிதன் வளர்ந்த சூழல் தான் அவனுடைய செய்கைகளை முடிவுசெய்கிறது என்று பாதிரியார் சொன்னாரே! அவ்வாறெனில், ஓரிரு கடிதங்கள் எழுதியவன் கூட மனம் பாதிக்கப் பட்டு இப்படி செய்திருக்கலாமே! ஆனால் அவன் இத்தனை வருடங்கள் காத்திருந்து ஏன் கொலை செய்ய வேண்டும்?*‘ கார்த்திகேயன் தீவிரமாக யோசிக்கத்

தொடங்கினார். இந்த வழக்கு மீண்டும் மீண்டும் முட்டுச்சந்திலே வந்து நிற்பது அவருக்கு வருத்தம் அளித்தது.

சில மாணவர்கள் எழுதிய கடிதங்களைப் படித்துப் பார்த்தார். ஒரே மாதிரியான காரணங்களுக்குத்தான் அந்தக் கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. வகுப்பிற்கு வராததற்காக எழுதப்பட்ட கடிதங்கள், விரிவுரையாளரை எதிர்த்துப் பேசியதற்காக எழுதப்பட்ட கடிதங்கள், அசைன்மெண்ட்களை சரியான நேரத்தில் முடிக்காததற்காக எழுதப்பட்ட கடிதங்கள் என ஏராளமான கடிதங்கள் இருந்தன. சக மாணவர்களுடன் பேச மாட்டேன் என சில மாணவிகளும், சக மாணவிகளுடன் பேச மாட்டேன் என சில மாணவர்களும் மன்னிப்பு கடிதம் எழுதியிருந்தனர்…

*‘காரணங்களில் பெரிய வித்தியாசங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. குற்றவாளியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணினால், குற்றவாளியை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறோம். யார் அவன்?’*

ஒவ்வொரு மாணவன் எழுதிய கடிதங்களையும் மீண்டும் மீண்டும் புரட்டிப் பார்த்தார் கார்த்திகேயன். நேரம் உருண்டோடியது. திடீரென்று, அவர் முகம் மலர்ந்தது.

*‘அவனை நாம் நெருங்க வேண்டும் என்பதற்காகவே அவன் துப்புக்களை விட்டுச் சென்றிருக்கிறான். அதிலும் இது முக்கியமானதொரு க்ளூ. ஆம். அவனை நெருங்கிவிட்டோம்’*

அந்தக் கடிதங்களை ஏழுமலையிடம் கொடுத்தார் கார்த்திகேயன். அதைப் புரட்டிப் பார்த்தார் ஏழுமலை. அந்தக் கடிதங்கள் ஆனந்த்ராஜ் என்ற மாணவனால் எழுதப்பட்டிருந்தது. அவன் 2006—ஆம் ஆண்டு பேட்சை சேர்ந்தவன்.

“ரோல் நம்பரப் பாருங்க ஏழுமலை” கார்த்திகேயன் சொன்னார்.

ரோல் நம்பரைக் கண்டதும், ஏழுமலை “சார்…” என்று கத்தினார். அவரது குரலில் ஆச்சர்யமும் அதிர்ச்சியும் கலந்திருந்தது.

அந்த மாணவனுடைய ரோல் நம்பர் ‘3’.

# 16

திருச்சி சமயபுரம் அருகே உள்ள பணமங்கலம் கிராமத்தில் ஆனந்த்ராஜின் வீடு இருந்தது. வீட்டின் முன்னர் நிறைய மாடுகள் கட்டப்பட்டிருந்தன. குழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அனைவரையும் தாண்டி அந்த வீட்டின் முன்வந்து நின்றார் இன்ஸ்பெக்டர் செண்பகராமன். இரண்டு கான்ஸ்டபிள்களையும் தன்னுடன் அழைத்து வந்திருந்தார். வாசலில் கட்டப்பட்டிருந்த ஆட்டுடன் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறுமி, இன்ஸ்பெக்டரை மிரட்சியுடன் பார்த்தாள்.

“வீட்ல பெரியவங்க இல்லயா?” சிறுமியிடம் வினவினார் இன்ஸ்பெக்டர்.

அந்தச் சிறுமி, “அம்மாச்சி...” என்றவாறே வீட்டினுள் ஓடினாள். செண்பகராமன் ஒரு கான்ஸ்டபிளை நோக்கி கண்ஜாடை செய்தார். அதைப் புரிந்து கொண்ட அவர், அங்கிருந்து நகர்ந்து, வீட்டின் கொல்லைப்புறம் நோக்கிச் சென்றார்.

வீட்டினுள்ளிருந்து எழுபது வயதுப் பெண்மணி ஒருத்தி வெளியே வந்தாள். போலீஸ்காரர்களைப் பார்த்ததும் அவள் முகத்தில் ஏதாவது மாறுதல் தெரிகிறதா என்று செண்பகராமன் கூர்ந்து நோக்கினார். ஆனால் அவள் முகத்தில் எந்தச் சலனமும் வெளிப்படவில்லை.

“யாரு...?” அந்தப் பெண்மணி நிதானமாக வினவினாள். அவள் பின்னே அந்தச் சிறுமியும் வந்து நின்றாள்.

“ஆனந்த்ராஜ் யாரு?”

“என் பேரன் தான்... அவன ஏன் நீங்க தேடுறீங்க…?”

“அத அவங்கிட்ட சொல்றோம்... அவனக் கூப்பிடுங்க...”

அவள் ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். “கோடாளிக் காம்பு... இப்ப என்ன செஞ்சானோ! கண்ட புஸ்தகத்தெல்லாம் படிக்கிறது, எங்கையாவது வம்பிழுத்துட்டு வந்து நிக்கிறது...”

அங்கே கூட்டம் கூடத் தொடங்கியது. செண்பகராமன் பொறுமை இழந்தார். “யோவ்... உள்ள போய் பார்த்திட்டு வாய்யா...” என்று

கான்ஸ்டபிளிடம் சொன்னார்.

அந்தப் பெண்மணி ஒருநொடி அழுகையை நிறுத்தி, உள்ளே செல்லும் கான்ஸ்டபிளைப் பார்த்தாள். பின் மீண்டும் அழுகையைத் தொடர்ந்தாள்.

கான்ஸ்டபிள் அந்த வீட்டினுள் சென்றார். வீடு மிகப் பெரியதாக இருந்தது. முதல் அறையில், கிழவியும் ஆனந்த்ராஜும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்று சுவற்றில் மாட்டப்பட்டிருந்தது. ஃபோட்டோவில், ஆனந்த்ராஜ் நிறைய முடி வைத்திருந்தான், தாடியும் நிறைய வளர்ந்திருந்தது. தன் சட்டைப்பைக்குள் கைவிட்டு, ஒரு ஃபோட்டோவை எடுத்துப் பார்த்தார் கான்ஸ்டபிள். ஆனந்த்ராஜின் புகைப்படம்தான் அதுவும். உற்பத்திப் பொறியியல் ஆண்டு மலரில் இடம்பெற்றிருந்த ஆனந்த்ராஜ் புகைப்படத்தை ப்லோ—அப் செய்து ஃபேக்ஸ் அனுப்பியிருந்தார் கார்த்திகேயன்.

*'ஆள் ஒரேடியா மாறியிருக்கான்...'*

சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஃபோட்டோவை எடுத்துக் கொண்டார். பின் ஒவ்வொரு அறையாகச் சென்று பார்த்தார். வீடே வெறிச்சோடி இருந்தது. ஒரு அறையில் மட்டும் ஏராளமான புத்தகங்கள் இருந்தன.

*'சங்க இலக்கியம், நவீன இலக்கியம், சித்தர் பாடல்கள், சீனப்புரட்சி, பாரதியார் கவிதைகள், ஃபிடல் கேஸ்ட்ரோ...'*

அதற்கு மேல் அந்தக் கான்ஸ்டபிள் அங்கே நிற்கவில்லை. வெளியே வந்து, "சார்... உள்ள யாரும் இல்ல..." என்றார்.

"ஏம்மா... உன் பேரன் எங்கனு சொல்றியா இல்லையா?"

"தெரியல சார்... சொல்லிட்டுப் போல சார்... திடீர் திடீர்னு எங்கயாவது கிளம்பிப் போய்டுவான்... கேட்டா இலக்கிய ஆராய்ச்சுனு சொல்லுவான்..."

"உன் பேரனுக்கு வேலைலாம் இல்லையா?"

"இல்ல சார். இங்கேயே தமிழ் படிக்கிறேனு சொன்னான்... நான்தான் மெட்ராஸ் அனுப்பி இஞ்சினீரிங்க் படிக்க வச்சேன்... ஆனா அதுக்கப்பறம் வேலைக்குப் போல... அவன் பாட்டன் சேத்து வச்ச சொத்தே அம்புட்டு கிடக்கு... அதனால நானும் கண்டுக்கல... இப்பையாவது சொல்லுங்க சார்... அவன ஏன் தேடுறீங்க?"

"ஹான்... மூணு கொலை பண்ணிட்டு வந்திருக்கான் உன் பேரன்..."

“ஐய்யயோ… சார், அவனுக்கு கோபம் வரும்தான். தப்பத் தட்டிக் கேக்குறேன் உலகத்த மாத்துறேன்னு பேசுவான், ஆனா கொலையெல்லாம் பண்ணியிருக்க மாட்டான் சார்…”

மீண்டும் ஒப்பாரி வைத்தாள் கிழவி. செண்பகராமன் சிறிது நேரம் யோசித்தார். அங்கு வருவதற்கு முன்பே ஆனந்த்ராஜைப் பற்றி ஊர் பெரியவர்களிடம் விசாரித்திருந்தார். ஆனந்த்ராஜ், சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தவன். அந்தக் கிழவி அவனுடைய அம்மாச்சி. பள்ளிக்காலத்திலிருந்தே ஆனந்த்ராஜ் சமுதாய சீர்த்திருத்த கருத்துக்களைப் பேசிவந்திருக்கிறான். ஆனால் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வந்ததிலிருந்து, யாருடனும் அதிகம் பேசுவதில்லை என்று சிலர் தெரிவித்தனர். கொள்கை முரண்பாடு காரணமாக அந்த ஊர் அரசியல்வாதி ஒருவனுடன் ஓரிரு முறை வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறான். மற்றபடி அவன் மீது எந்தக் குற்ற வழக்குகளோ, கரும்புள்ளிகளோ இல்லை.

சிறிது நேரம் கிழவியைக் கூர்ந்து நோக்கினார் செண்பகராமன்.

*‘அவள் பொய் சொல்கிறாளா?’* செண்பகராமனால் கண்டுகொள்ளமுடியவில்லை.

“சரி சரி… அழுகைய நிறுத்துமா… உன் பேரன் வந்தா ஸ்டேஷனுக்கு வரச் சொல்லு… ஏமாத்தலாம்னு நினைக்காத…”

“நான் ஏன் சார் ஏமாத்தணும்? அவன் எந்தத் தப்பும் செஞ்சிருக்க மாட்டான்… அவன் வந்ததும் நானே கூட்டிட்டு வரேன் சார்…” என்றாள் கிழவி.

செண்பகராமன் ஊர் மக்களை நோக்கித் திரும்பினார்.

“அந்த பையன யாரு பார்த்தாலும் உடனே எங்களுக்குத் தகவல் கொடுக்கணும்…“ என்று சொல்லிவிட்டு ஊர்மக்களின் பதிலுக்குக் காத்திராமல் செண்பகராமன் அங்கிருந்து நகர்ந்தார். கான்ஸ்டபிள் அவரைப் பின் தொடர்ந்தார். கூட்டம் கலைந்தது. போலீஸ்காரர்கள் தெரு எல்லைக்குச் செல்லும் வரை காத்திருந்த அந்தக் கிழவி, சிறுமியை அழைத்துக் கொண்டு, வேகமாக வீட்டிற்குள் சென்றாள். எல்லா கதவுகளையும் ஜன்னல்களையும் மூடினாள். கொல்லைப்புறத்தில் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தாள். யாரும் இல்லை. கொல்லைக்கதவையும் பூட்டினாள்.

பின் சமையல் அறைக்குள் சென்று, அரிசி ட்ரம்முக்குள் கைவிட்டு, செல் ஃபோனை எடுத்துச் சிறுமியிடம் கொடுத்தாள். சிறுமி யாருக்கோ டையல் செய்து, மீண்டும் கிழவியிடம் ஃபோனைக் கொடுத்தாள். கிழவி சன்னமான குரலில் பேசினாள்.

''உன்ன தேடி ரெண்டு போலீஸ்காரனுங்க வந்தாங்கயா… எதுவும் தெரியாதுனு சொல்லிட்டேன்... உனக்கு எத்தன மணிக்கு டிரைனு…?''

கிழவி ஆர்வமுடன் பேசினாள். பேரன் மீதான பாசம் அவளை முழுவதுமாக ஆட்கொண்டுவிட்டதால், சமையலறை வெளியே கதவுக்குப் பின் நின்று அவளது பேச்சை ஒட்டுக்கேட்டு வந்த கான்ஸ்டபிளை அவள் கவனிக்கவில்லை.

***

''யாத்ரீகன் க்ரிபயா தியான் தே. காடி நம்பர் ஏக் ஏக் சூன்ய ஏக் சார் தோ சென்னை சென்ட்ரல் சே மும்பை சிஎஸ்டி ஜானே வாலி மும்பை சிஎஸ்டி எக்ஸ்பிரஸ் பிளாட்ஃபார்ம் நம்பர் சார் பர் கடி ஹே...''

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து டிரைன் புறப்பட இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. செகண்ட் கிளாஸ் ஏ.சி பெட்டியில், ''பானி வாட்டர் பானி'' என்று கூவியவாறே விற்பனையாளன் ஒருவன், அங்கே இருந்த பயணிகளை உற்று நோக்கிக் கொண்டே நகர்ந்தான். ஓரிடத்தில் அமர்ந்திருந்த இளைஞனைக் கண்டதும் தண்ணீர் பெட்டியைக் கீழே வைத்தான். தண்ணீர் பெட்டிக்குள் கைவிட்டு, தண்ணீர் பாட்டில்களை எண்ணுவது போல் பாசாங்கு செய்தவாறே, இருக்கையில் அமர்ந்திருந்த அந்த இளைஞனைக் கூர்ந்து கவனித்தான். அந்த இளைஞன், தன் தலை முடியைக் கோதியவாறே புத்தகம் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே ஒரு வயோதிகர் அமர்ந்திருந்தார். அவர் தண்ணீர் விற்பவனைப் பார்த்து,

''ஏ.சி கூலிங்க் ரொம்ப அதிகமா இருக்கு. கொஞ்சம் குறைக்கச் சொல்லுங்கோ...'' என்றார். விற்பனையாளன் அதைச் சட்டை செய்யாமல், தண்ணீர் பெட்டியை எடுத்துக்கொண்டு அங்கிருந்து வேகமாக நகர்ந்தான். ''என்ன நான் பேசிண்டே இருக்கேன்... மேனர்ஸ் இல்லாம போறேளே'' என்றவாறே அவன் பின்னே வந்தார் வயோதிகர். தண்ணீர் பெட்டியை அப்படியே

ஒரு இருக்கையில் வைத்துவிட்டு, தன் செல்ஃபோனை எடுத்து, யாருக்கோ கால் செய்து ‘‘பாசிடிவ்’’ என்று சொன்னான்.

‘‘தம்பி உங்கக்கிட்ட தான் பேசுறேன்... பேசஞ்சருக்கு மரியாதையே இல்லையா? ரயில்வே ஆள்தானே நீங்க?’’

அந்தப் பெட்டியின் கதவருகே சென்றதும், அந்த விற்பனையாளன் வயதானவரை நோக்கித் திரும்பி, ‘‘நீங்க மட்டும் தான் வந்துருக்கீங்களா?’’ என்று வினவினான்.

‘‘என் பொண்ணும், மருமானும் வந்திருக்கா... எதுக்கு கேக்குறேள்...?’’

‘‘அவங்கலாம் எங்க?’’

‘‘ஸ்நாக்ஸ் வாங்கப் போயிருக்கா...‘‘

‘‘சரி கொஞ்ச நேரம் இப்படி உக்காருங்க... அப்பறம் உங்க சீட்க்கு போகலாம்’’ என்று கதவருகே இருந்த இருக்கையைக் காண்பித்தான் வியாபாரி.

‘‘நான் ஏன் இங்க உக்காரணும்! நான் என் சீட்டுக்கே போறேன்... நீங்க ஏ.சி—ய குறைக்கச் சொல்லுங்க...’’ என்று அங்கிருந்து எழ எத்தனித்தார் அந்த வயதானவர்.

‘‘எங்க போறீங்க...? உங்க எதிர் சீட்ல உக்காந்திருக்கவன் யாருனு தெரிஞ்சா இப்படி பறக்க மாட்டீங்க’’

‘‘ஏன் அவனுக்கு என்ன...? இந்தச் சின்ன வயசுல சுந்தர காண்டம் படிக்கிறான். ஏதோ ஸ்பிரிட்ச்சுவல் டூர் போறானாம்...! இந்தக் காலத்துல இவ்ளோ நல்ல பையனப் பாக்குறது கஷ்டமாச்சே...!’’

‘‘ஆமா ஆமா நல்லவன் தான். மூணு கொலை பண்ணியிருக்கான்... நீங்க அங்க போனீங்கனா நீங்கதான் நாலாவது...’’ அந்தப் பெரியவரின் வாயிலிருந்து அடுத்த வார்த்தை வரவில்லை. அவர் அதிர்ச்சியில் அப்படியே உட்கார, ஏ.சி கம்பார்ட்மெண்ட் கதவை வேகமாகத் திறந்து கொண்டு மஃப்டியில் இருந்த இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் உள்ளே நுழைந்தார். எதிர்புறத்திலிருந்த இன்னொரு கதவின் வழியே இன்னும் இரண்டு காவலர்கள் உள்ளே நுழைந்தனர். அனைவரின் கையிலும் துப்பாக்கி இருந்தது.

# 17

மணி காலை 11.30. ஆனந்த்ராஜை கைது செய்து கிட்டத்தட்ட இருபத்தி நான்கு மணி நேரம் ஆகியிருந்தது. ஆனால் அவன் வாயிலிருந்து எந்த உண்மையையும் வரவழைக்க முடியவில்லை. அவன் மீண்டும் மீண்டும் சித்தர் பாடல்களையே பாடிக் கொண்டிருந்தான்.

அவன் தலை முடி சாம்பிளை அனாலிசிஸ் லேபிற்கு அனுப்பி வைத்திருந்தார் கார்த்திகேயன். ரிப்போர்ட் வரும்வரை ஆனந்த்ராஜின் மீது கை வைக்க அவர் விரும்பவில்லை. அமைதியாக, அந்தப் பாழடைந்த வீட்டின் வாசலில் நின்று புகை பிடித்துக் கொண்டிருந்தார். வீட்டைச் சுற்றி நிறைய மரங்கள் இருந்தன. அதைச் சுற்றி இரண்டு கிலோமீட்டர் அளவிற்குக் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன. சுற்றுவட்டாரத்திலிருந்து சேர்க்கப்படும் குப்பைகள் அனைத்தையும் அங்குதான் கொட்டுவார்கள் என்பதால் அந்த இடமே குப்பைக் கோட்டையாக இருந்தது. பல்லாவரம் துரைப்பாக்கம் சாலையில் பயணிக்கும் யாரும் அந்தக் குப்பைக்கோட்டைக்குப் பின் இப்படி ஒரு இடம் இருப்பதை அறிந்திருக்க மாட்டார்கள்.

குப்பைகளுக்கு மத்தியில் இருசக்கர வாகனம் செல்லும் அளவிற்கு ஒற்றையடிப் பாதை ஒன்று இருக்கிறது. அதனுள் புகுந்து சென்றால் எருக்கன் புதரை அடைந்திடலாம். அதற்கு மேல் வாகனம் செல்ல முடியாது. எருக்கன் செடிகளை விலக்கிக் கொண்டு, உள்ளே புகுந்து சென்றால், ஒரு சிறு குட்டை வரும். குட்டையில் தண்ணீர் இருக்கிறதோ இல்லையோ, சேறும் சகதியும் இருக்கும். அதைக் கடந்து சென்றால்தான் வீட்டை அடையமுடியும்.

பொதுவாக, எருக்கன் புதர்வரை கூட யாரும் வர மாட்டார்கள். அப்படியே எருக்கன் புதரைத் தாண்டி வந்தாலும், வீட்டைச் சுற்றியிருக்கும் மரங்கள் வீட்டை மறைத்துவிடுவதால், அங்கு வீடு ஒன்று இருக்கிறது என்பதை யாராலும் கண்டுகொள்ளமுடியாது. இது போலீசிற்கு சாதகமாகப் போய்விட்டது. ஆபத்தான கைதிகள் என்று கருதப்படுபவர்கள் அனைவரையும், கோர்ட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு முன், அங்கு வைத்துதான் விசாரிப்பார்கள். ஆனால்

கார்த்திகேயன், ஆனந்த்ராஜ் ஆபத்தானவன் என்று கருதியதால், அவனை அங்கு அழைத்து வரவில்லை. அதற்கு வேறு காரணங்கள் இருந்தன. அதைப்பற்றி சிந்தித்தவாறே புகைப்பிடித்துக் கொண்டிருந்த அவர், ஏதோ சலசலப்பு கேட்டுத் திரும்பினார். பிரியாணி பொட்டலங்களுடன் வந்தார் ஏழுமலை.

“லேப் ரிப்போர்ட் என்ன சார் ஆச்சு...?” என்று கேட்டுவிட்டு, கார்த்திகேயனின் பதிலுக்குக் காத்திராமல், வீட்டின் பூட்டைத் திறந்தார் ஏழுமலை. கார்த்திகேயனும் ஏழுமலையின் கேள்வியை காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அது ஒரேயொரு அறை கொண்ட ஆஸ்பெஸ்டோஸ் கூரை வீடு. யாரோ எப்போதோ விட்டுச் சென்ற வீடு. அறையின் நடுவே ஆனந்த்ராஜை ஒரு நாற்காலியில் சங்கிலியால் கட்டிவைத்திருந்தார்கள். அவன் கைகளும் கட்டப்பட்டிருந்தன. அறையில் ஒரு ஜன்னல் மட்டுமிருந்தது. ஜன்னலுக்குக் கீழே ஒரு டேபிளில் தண்ணீர் கேன் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்த டேபிளின் மீது பிரியாணி பொட்டலங்களை வைத்தார் ஏழுமலை. ஒரே ஒரு பொட்டலத்தைப் பிரித்து, அதிலிருந்த முட்டையையும் கறியையும் எடுத்துத் தனியாக வைத்துவிட்டு பிரியாணியை மட்டும் எடுத்துக்கொண்டு ஆனந்த்ராஜை நோக்கித் திரும்பினார்.

“இதான் நீ சாப்புடப் போற கடைசி பிரியாணி... ரிப்போர்ட் வரட்டும்... அப்பறம் இருக்கு...” என்றவாறே பொட்டலத்தை அவன் மடியில் வைத்தார். அவன் எந்தச் சலனமுமின்றி அமைதியாக அமர்ந்திருந்தான். அவன் கைகளின் கட்டை அவிழ்த்துவிட அவர் எத்தனித்தபோது, அவன் முதுகின் வழியே எட்டிப்பார்த்தது ஒரு நாகப் பாம்பு.

ஏழுமலை ஸ்தம்பித்து நின்றார். ஆனந்த்ராஜ் புன்னகை புரிந்தான். சிறிது நேரம் ஏழுமலையைப் பார்த்துப் படமெடுத்து நின்ற பாம்பு, வேகமாகக் கீழே இறங்கி ஓடியது.

“சார்... சார்...”

ஏழுமலையின் குரல் கேட்டு கார்த்திகேயன் ஓடிவர, அவர் காலை உரசிக்கொண்டு பாம்பு வெளியே ஓடியது. கார்த்திகேயனும் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

“விசப்பாம்பு சார்... சிரிக்கிறான்...” ஏழுமலைக்கு பயம் மீதம் இருந்தது.

“மனுஷனுக்குத்தான் சார் விஷம் அதிகம்.... ஆசை.... பேராசை... விஷம்” சொல்லிவிட்டுச் சிரித்தான் ஆனந்த்ராஜ்.

கார்த்திகேயன் ஆனந்த்ராஜை ஆச்சர்யமாகப் பார்த்தார். கடந்த இருபத்தினான்கு மணி நேரத்தில் அவன் இப்போது தான் அவர்களிடம் பேசியிருக்கிறான். அந்த நிமிடம் வரை அவன் தனக்குத் தானே சித்தர் பாடல்களைப் பாடி வந்தான்.

“ஏய்! இப்ப என்ன சொன்ன...?” ஏழுமலை ஆனந்த்ராஜிடம் கோபமாகக் கேட்டார். அவன் அமைதியாக அமர்ந்திருந்தான்.

அவனிடமிருந்து பதில் வராது என்பதை அறிந்திருந்த கார்த்திகேயன்,

“கைக்கட்ட அவுத்துவிட்டுட்டு வாங்க, நாம சாப்புடுவோம்...” என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

***

இருவரும் வாசலில் அமர்ந்து பிரியாணியைச் சுவைத்துக் கொண்டிருந்தனர். கார்த்திகேயன் சாப்பிட்டுக்கொண்டே, கதவின் பூட்டைக் கூர்ந்து நோக்கினார். அதைக் கவனித்த ஏழுமலை,

“சார் அதெல்லாம் பூட்டியாச்சு சார்... அவன சேரோட வச்சிக் கட்டியும் வச்சாச்சு... நீங்க கவலப்படாம சாப்புடுங்க...”

கார்த்திகேயன் ஒரு சிறு புன்னகை மட்டும் புரிந்து விட்டு, தொடர்ந்து சாப்பிட்டார். ஏழுமலை பேச்சைத் தொடர்ந்தார்,

“அவன் மேல அவ்ளோ டவுட் இருந்தா ரிமாண்ட் பண்ணியிருக்கலாமே சார்... எதுக்கு இப்டி அத்துவானக் காட்டுல அவன வச்சுக்கிட்டு நாமும் பயந்துக்கிட்டு இருக்கணும்...!”

“பயம் இல்ல ஏழுமலை... அக்கறை...”

ஏழுமலைக்கு சாப்பாடு அடைத்தது. தண்ணீரை எடுத்துக் குடித்து விட்டு, கார்த்திகேயனைப் பார்த்தார்.

“அவன் கொலை செஞ்சிருந்தாதானே நாம அவனப் பார்த்து பயப்படணும்!”

“சார்… இது என்ன புது கதை?” ஆச்சர்யம் தாங்காமல் கேட்டார் ஏழுமலை.

“கதை இல்ல தலைவரே… இவன்தான் கொலைகாரன்னு வச்சுப்போம். ஏன் அவன் ஒவ்வொரு முறையும் ஒரு தடயத்த விட்டுட்டுப் போகணும்?”

“ஹான்… தான் புத்திசாலினு காட்றதுக்கு…”

"நானும் அப்படிதான் நினச்சுக்கிட்டு இருந்தேன், ரங்கதுரை க்ரைம்ஸீன்ல முடி கிடைக்கிற வரைக்கும்… ஏன் முடிய வேணும்னே விட்டுட்டுப் போனான்னு யோசிக்கும் போதுதான்..."

கார்த்திகேயன் பேசி முடிப்பதற்குள் ஏழுமலை இடைமறித்தார்.

"வேணும்னே விட்டுட்டுப் போனானா...? ரங்கதுரை முரண்டு புடிச்சிருப்பாரு… அவன் முடி அவன் கைல சிக்கியிருக்கும்னு தான சொன்னீங்க…?"

கார்த்திகேயன் சிரித்தார்.

"என்ன சார். எது சொன்னாலும் சிரிக்கிறீங்க...?" அதற்கு மேல் அவரைக் காக்க வைக்க கார்த்திகேயன் விரும்பவில்லை.

"அவர் கைல அவன் முடி சிக்கியிருந்தா, அது வேரோட தான வந்திருக்கணும்? ஆனா அந்த மொத்த கொத்துல, எல்லா முடியோட நுனியும் ஈவனா கட் ஆகியிருந்துச்சு… அதுல ரெண்டு பக்கமும் வேர் இல்ல. கத்திரிக்கோல்லயோ கத்திலயோ கட் பண்ணியிருந்தாதான் இது சாத்தியம்... அந்த முடியப் பாத்ததுமே எனக்கு இந்த டவுட் வந்துச்சு… ஹேர் அனாலிசிஸ் லேபுக்கு அனுப்பி வச்சிருந்தேன்... நான் எதிர்ப்பார்த்த மாதிரியே அது முழு முடியில்ல கட் பண்ணப்பட்ட முடினு ரிப்போர்ட் வந்துச்சு.

"இவனே ஏன் இவ்ளோ டெலிபரேட்டா ஒரு தடயத்த விடணும்? மத்த தடயம்லாம் இன்டைரக்ட்டா தான் இருந்துச்சு... ஆனா இது டைரக்ட் க்ளூ. அப்பதான் தோணுச்சு. ஏன் வேற யாரோ கொலை செஞ்சிட்டு இவன மாட்டிவிடணும்னு ஒவ்வொரு க்ளூவா விட்டுட்டுப் போயிருக்க கூடாதுனு?"

"என்ன சார் இந்த கேஸ் முடியவே மாட்டேங்குது? இவன மாட்டிவிடுறான்னா, அவனுக்கும் இவனுக்கும் என்ன பகை?"

"அதைத் தான் நாம கண்டுபுடிக்கணும். அவனுக்கு இவன நல்லாத் தெரிஞ்சிருக்கு… இவனோட குணமும் தெரிஞ்சிருக்கு. இவன் ஒரு

இண்ட்ரோவெர்ட். ஊர்லயே யாருக்கிட்டையும் பேசமாட்டானாம்''

''இங்கையும் அப்டிதானே இருக்கான். எது கேட்டாலும் மூஞ்சு கொடுத்துப் பேசுறதில்ல''

''ஹ்ம்ம்... அந்த குணத்ததான் கொலைகாரன் தனக்குச் சாதகமா பயன்படுத்திக்கப் பாக்குறான். எப்படியும் கம்பாரிசன் ரிப்போர்ட் இவனுக்கு எதிராதான் வரும். நாமளும் கேசக் கிளோஸ் பண்ணுறதுக்காக இவன உள்ள வச்சுருவோம்னு அவன் பிளான் பண்ணியிருக்கணும். ஆனா பாவம், முடியக் கட்பண்ணியிருந்தா அதுவும் ரிப்போர்ட்ல தெரிஞ்சிரும்ங்கறது அந்தப் புத்திசாலிக்குத் தெரியாம போச்சு...''

''எந்தப் புத்திசாலியும் ஒரு நேரத்துல முட்டாள் ஆவாங்கறது சரியாதான் இருக்கு... அதுசரி... அவன எப்படி இப்பக் கண்டுபுடிக்கிறது...?''

கார்த்திகேயனிடம் இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை. அவர் எதுவும் பேசாமல், தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கையைக் கழுவினார். ஏழுமலையும் மேற்கொண்டு கேள்விகள் கேட்டு கார்த்திகேயனைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. பொட்டலங்களைத் தூக்கி எறிவதற்காக, வீட்டிற்கு நேரெதிரே குப்பைக் கூளமாக இருந்த இடத்தை நோக்கி நடந்தார். குப்பைகளை எறிந்துவிட்டுத் திரும்புகையில், யாரோ இருவர் இவர்களை நோக்கி வருவதைக் கண்டார். அப்படியே அமைதியாக நின்று வருபவர்களைக் கவனித்தார் ஏழுமலை. அவர்களின் முகம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் இருவரின் கையிலும் இருந்த பிஸ்டல் தெளிவாகத் தெரிந்தது.

# 18

கா ர்த்திகேயன் வருபவர்களைக் கூர்ந்து கவனித்தார். ஏழுமலை மரத்திற்குப் பின் சென்று ஒளிந்துகொண்டார். அவர் உடம்பு நடுங்கியது. ஆனால் கார்த்திகேயனின் கையிலிருந்த துப்பாக்கி அசையாமல் வருபவர்களைக் குறி பார்த்துக் கொண்டிருந்தது. அவர்கள் அருகில் வரவர துப்பாக்கி தெளிவாக அவர் கண்ணிற்குத் தெரிந்தது.

‘செமி ஆட்டோமேடிக் 9mm பிஸ்டல்’

பரிச்சயமான ரகம். நிமிர்ந்து, வருபவர்களின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். ஏழுமலையும் வருபவர்களைக் கவனித்தார். அவரது பயம் காற்றில் பறந்தது. அவரிடமிருந்து பெருமூச்சு வந்தது. அவர் மரத்திற்குப் பின்னிருந்து வெளியே வந்தார். ஆனால், கார்த்திகேயனுக்குக் கவலை பிறந்தது.

‘இவனுங்க ஏன் இங்க வராங்க...?’ கார்த்திகேயன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் அருகில் வந்தனர். ஏழுமலை சல்யூட் அடித்தார்.

“என்ன இன்ஸ்பெக்டர் சார் அதிர்ச்சியாயிட்டாரு போல...!” டி.ஜி.பி வீரபத்திரன் கிண்டலாகக் கேட்டுவிட்டு சிரித்தார். உடனிருந்த அசிஸ்டண்ட் கமிஷ்னர் தேவும் சிரித்தார். இருவரும் மஃப்டியில் இருந்தனர்.

“சார்... அது... நீங்க என்ன இங்க...?” கார்த்திகேயன் தயங்கித் தயங்கிக் கேட்டார்.

“நான் உன்னக் கேட்க வேண்டிய கேள்வி... மிட் நைட்ல வாரண்ட் இல்லாம காலேஜ சேர்ச் பண்ணியிருக்க… பப்ளிக்கா டிரைன்ல வச்சு அக்யூஸ்ட அரெஸ்ட் பண்ணியிருக்க… எதையும் என்கிட்ட சொல்லல… பரவாயில்ல… ஆனா இதெல்லாம் எனக்குத் தெரியாம போய்டும்னு நினச்சதுனாலதான் இப்ப நீங்க எங்க இங்கனு கேக்குற… சோ… இங்க நீ முட்டாளா நான் முட்டாளா...?”

*‘இவருக்கு எப்படி இதெல்லாம் தெரிந்தது. காலேஜ் விஷயம் பஷீருக்கும் ஏழுமலைக்கும் மட்டுமே தெரியும். நிச்சயம் அவர்கள் வெளியே சொல்லியிருக்க மாட்டார்கள். ஆனந்த்ராஜைக் கைது செய்தது அந்தக் கம்பார்ட்மெண்டில் இருந்த பலருக்கும் தெரியாது. கவனித்த சிலரிடம் ‘போலீஸ் மாக் ட்ரில்’ என்று சொல்லி சமாளித்துவிட்டோமே! நம்முடன் வந்த அதிகாரிகளும் நம் நெருங்கிய நண்பர்கள் ஆயிற்றே! அவனைக் கைது செய்ததும் கண் இமைக்கும் நேரத்தில் அங்கிருந்து வெளியேறி விட்டோமே. அப்புறம் எப்படி இவர் எல்லாவற்றையும் சரியாகச் சொல்கிறார். ஒருவேளை... ஒருவேளை...’*

“என்னையா நான்பாட்டுக்கும் பேசுறேன்... நீ ஏதோ யோசிச்சிக்கிட்டு நிக்கிற...?”

கார்த்திகேயன் அமைதியாகத் தலைகுனிந்து நின்றார். ஆனால் தேவால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவர் வீரபத்திரனிடம் ஏதோ கிசுகிசுத்தார். வீரபத்திரன் சரி என்பது போல் தலையசைத்துவிட்டு, கதவை நோக்கி நடந்தார். தேவ் பின்தொடர்ந்தார். நடப்பவற்றைப் புரிந்து கொண்ட ஏழுமலை, வேகமாக ஓடிச்சென்று கதவைத் திறந்தார். ஆனால் கார்த்திகேயன் மட்டும் அதே இடத்தில் அசையாமல் நின்றார்.

கதவு திறக்கப்பட்டது. ஆனந்த்ராஜ் அசையாமல் அமர்ந்திருந்தான். பிரியாணி பொட்டலம் அவன் மடியில் வைத்தது போலவே இருந்தது. இரண்டு கைகளையும் இரண்டு தொடைகளுக்கு மேல் வைத்து கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்துகொண்டிருந்தான். அவனுடைய பச்சை ஜிப்பாவும், நீலநிற ஜீன்சும் மடிப்பு கலையாமல் இருந்தது. அவன் உடம்பில் எந்தக் காயமும் இல்லை. வீரபத்திரன் அவனைக் கூர்ந்து நோக்கினார். அவருக்குக் கோபம் வந்தது.

“இன்னும் ஏதும் விசாரிச்ச மாதிரியே தெரியலே... உக்கார வச்சு அழகு பாக்குறாங்க” தேவின் வார்த்தைகள் வீரபத்திரனின் கோபத்தில் எண்ணையை ஊற்றியது.

“புதுப் பொண்டாட்டிய கவனிக்கிற மாதிரி கவனிக்கிறீங்களா...?” ஏழுமலையை நோக்கிக் கத்தினார் வீரபத்திரன். அவரது கோபமான குரல் கேட்டு உள்ளே ஓடிவந்தார் கார்த்திகேயன்.

“என்னையா இது! கொலை கேஸ்ல அரெஸ்ட் ஆனாவன எப்படி விசாரிக்கணும்னு உனக்குத் தெரியாது? இப்படி இவன ஜம்முனு உக்கார வச்சுட்டு நீங்க வெளிய காவல் காத்துக்கிட்டு இருந்தா கேஸ எப்படி முடிக்கிறது?” வீரபத்திரன் தொடர்ந்து கேள்விகளைக் கேட்க எதையாவது சொல்லி சமாளிக்க முடிவு செய்தார் கார்த்திகேயன்.

“லேப் ரிபோர்ட் இன்னும் வரல சார்...”

“என்ன...?”

“DNA அனாலிசிஸ் ரிபோர்ட். ரங்கதுரை கொலைல கிடச்ச முடியையும், இவன் முடி சாம்பிளையும் கம்பாரிசனுக்கு அனுப்பி வச்சிருக்கேன்...”

"எப்ப வரும்?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் பேசுனேன். நாளைக்குள்ள ரிபோர்ட் கைல இருக்கும்...”

வீரபத்திரன் சிரித்தார். கார்த்திகேயனுக்கு அவர் ஏன் சிரிக்கிறார் என்று புரியவில்லை. ஆச்சர்யமாக அவரைப் பார்த்தார் கார்த்திகேயன். சிரிப்பை நிறுத்திய வீரபத்திரன், கார்த்திகேயனை ஒருமுறை பார்த்துவிட்டு, பின் தேவைப் பார்த்தார். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட தேவ், தன் சட்டையைத் தூக்கி பேண்டில் சொருகி வைத்திருந்த ஃபைலை எடுத்து கார்த்திகேயனிடம் கொடுத்தார். கார்த்திகேயன் அதை வாங்கிப் படித்தார். அவர் முகம் வாடத் தொடங்கியது.

*‘Preliminary Nuclear DNA Findings*

.....

*Significant Similarity Found’*

“உனக்கு மட்டும்தான் லேப்ல ஆள் இருக்காங்களா? உன் பேச்சக் கேட்டு ரிப்போர்டக் கொடுக்காம இழுத்தடிக்க ரெண்டு பேரு இருந்தா, என் பேச்சு கேட்குறவனுங்க இருக்க மாட்டாங்களா? ரிப்போர்ட் பாசிடிவ். இப்ப என்ன சொல்ற? இவன் தான் கொலைகாரன். ஏன் கொலை பண்ணுனான்னு தெரியணும்... உன்னால விசாரிக்க முடியலனா சொல்லு... ஐ ஹாவ் பீப்பிள் ஃபார் தட்...“

வீரபத்திரன் பொரிந்து தள்ளினார். கார்த்திகேயனால் எதுவும் பேசமுடியவில்லை. தலைகுனிந்து நிற்பதே அவருக்குத் தெரிந்த ஒரே தீர்வாக இருந்தது. வீரபத்திரனுக்குக் கோபம் அடங்கவில்லை. ஆனந்த்ராஜின் முன் சென்று நின்றார். அவன் தியானத்தில் இருந்தான்.

“இவனுக்கு பிரியாணி ஒரு கேடு” பிரியாணியைத் தட்டி விட்டார் வீரபத்திரன்.

அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அவனுடைய கூர்மையான பார்வையை அவரால் எதிர் கொள்ள முடியவில்லை. அங்கே நிலவிய அமைதியை ஆனந்த்ராஜின் குரல் கலைத்தது.

“மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிபவன், பெரியவன் உயர்ந்தவன்”

அவன் வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தத்தை யாரும் பொருட்படுத்தவில்லை. வீரபத்திரனுக்குக் கோபம் குறைந்த பாடில்லை. ஆனந்த்ராஜின் அடர்ந்த தலைமுடியைப் பிடித்து இழுத்தவாறே,

“மூணு கொலை பண்ணிட்டு என்னடா தத்துவம் பேசுற?” என்று கத்தினார்.

“அவன் கொலை பண்ணல சார்...” கார்த்திகேயன் குரல் கணீரென்று ஒலித்தது.

“வாட்..?”

***

கார்த்திகேயன் சொன்ன அனைத்தையும் பொறுமையாகக் கேட்டார் வீரபத்திரன். அனைவரும் மரத்தடியில் நின்றுகொண்டிருந்தார்கள்.

“என் கிட்ட சொல்லியிருக்கலாமே…?” வீரபத்திரனின் கோபம் தணிந்திருந்தது.

“எல்லாம் ஒரு சேஃப்டிக்காக தான் சார்… நமக்கு அவன் மேல சந்தேகம் இருக்குனு தெரிஞ்சா அந்தக் கொலைகாரன் உஷார் ஆகிடுவான்”

“டிபார்ட்மெண்ட் மேலேயே உனக்கு நம்பிக்கை இல்லயில்ல?”

கார்த்திகேயன் இதற்குப் பதில் சொல்லவில்லை. சிறுபுன்னகை மட்டுமே புரிந்தார். உண்மையில் அவருக்கு யார் மீதும் நம்பிக்கை இருக்கவில்லை. தான் கண்காணிக்கப் படுகிறோமோ என்ற எண்ணம் அவருக்கு ஏற்படத் தொடங்கியிருந்தது. எப்படி தன்னுடைய நடவடிக்கைகள் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது என்று அவர் எண்ணினார். அது அவருக்கு ஆழ்ந்த மனவருத்தத்தையும் மன குழப்பத்தையும் தந்தது. அதை மறைக்கவே அந்தப் புன்னகை.

“சரி… உண்மையான குற்றவாளிய எப்படி கண்டுபுடிக்கப் போற?”

“ஆனந்த்ராஜ விசாரிக்கணும்... அவனுக்குத் தெரிஞ்சவங்க அவனோட எதிரிங்க யாருனு… அவனோட பேட்ச் சம்மந்தப்பட்டவங்கள கான்ஃபிடென்சியலா விசாரிக்கணும்...”

“ஓ.கே. ஐ வில் கிவ் யூ ஃபுல் ப்ரீடம். ஃபாலோ எனி மெதட்... ஐ வான்ட் ரிசல்ட்”

“ஷ்யூர் சார்”

“பை தி வே, நீ இங்கிருந்து ரிலீவ் ஆகணும்னா ஆகிக்கலாம். நீ இன்வெஸ்டிகேஷன்ல கான்சென்ட்ரேட் பண்ணு. தேவையும், வேற யாராவதையும் இங்க டெபுட் பண்றேன்”

தேவிற்கு அங்கே இருக்க விருப்பமில்லை. அவரின் முகம் மாறியது. கார்த்திகேயன் அதைக் கவனித்தார். தேவைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள அவரும் விரும்பவில்லை.

“இல்ல சார்... நான் மேனேஜ் பண்ணிக்கிறேன்… ப்ளீஸ்...”

“யுவர் விஷ்... எனிவே நான் ஒரு எஸ்.ஐய அனுப்புறேன்… உனக்கு சப்போர்ட்டா இருக்கும்”

கார்த்திகேயன் சரி என தலையசைத்தார். வீரபத்திரனும் தேவும் அங்கிருந்து நகர எத்தனித்தனர். தேவ் திடீரென்று திரும்பி,

“அந்த முடிய யாரோ கட் பண்ணிருக்கணும்னு அவசியமில்லையே… இவனே ஏன் நம்மளக் கன்ப்யூஸ் பண்ணனும்ட்டு கட் பண்ணிப் போட்டுருக்கக் கூடாது? அவனப் பாத்தாலே சைக்கோ மாதிரிதான இருக்கான்...?”

தேவின் கேள்வியில் நியாயம் இருப்பதாகக் கார்த்திகேயன் உணர்ந்தாலும், அதை ஏற்றுக்கொள்ள அவர் மனசு இடம் கொடுக்கவில்லை. தேவால் பலஇடங்களில் அவமானப்படுத்தப்பட்ட அவர், தேவைத் தன் எதிரியாகக் கருதும் அவர், தேவிற்கு சற்று கோபமாகவே பதிலளித்தார்.

“அவன் பண்ணல சார்... அவன் அப்பாவி...”

அவன் அப்பாவியா இல்லையா என்பது உண்மையிலேயே அவருக்குத் தெரியாது. ஆனால் தேவின் வாயை அடைக்க வேண்டும் என்பதற்காகவே அவர் அப்படிச் சொன்னார்.

“அதெப்படி அவ்ளோ நம்பிக்கையா சொல்றீங்க...” தேவ் விடாமல் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

தான் தலையிடும் நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த வீரபத்திரன், அவர்களின் உரையாடலை இடைமறித்தார்.

“யோவ் ஏ.சி... போதும்... எப்பப் பாத்தாலும்...

“கார்த்திகேயன் ஐ பிலீவ் யூ வோன்ட் லெட் மீ டவுன்...” சொல்லிவிட்டு வீரபத்திரன் தேவை அழைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

அவர்களை கோபமாகப் பார்த்துக்கொண்டிருந்தார் கார்த்திகேயன். அவருக்கு துப்பாக்கியை எடுத்து தேவைச் சுட்டுவிட வேண்டும் என்று தோன்றியது. கோபத்தை அடக்கிக் கொண்டார். ஏழுமலை நமக்கேன் வம்பு என ஒதுங்கி நின்றார். உள்ளே அறையில் ஆனந்த்ராஜ் தியானம் செய்து கொண்டிருந்தான். திடீரென்று அவன் இதழில் புன்முறுவல் பூத்தது. அவன் தனக்குத் தானே பேசத் தொடங்கினான்.

“இன்னும் மூணு பேர் சாகணும்... சாவாங்க...”

கே கே நகர் சிவன் பார்க் அருகில் இருந்த அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் இரண்டாவது மாடியில் ராமகிருஷ்ணனின் வீடு இருந்தது. அவரை சந்திக்க விரும்பியவர்கள் இன்று காலைக்கு முன்னதாக சந்தித்திருக்க வேண்டும். இனிமேல் அவரை யாராலும் சந்திக்க முடியாது.

“நம்ம கிருஷ்ணன் சாரக் கொன்னுட்டாங்களாமே?”

“அவரே தற்கொலை பண்ணின்டாராமா... இவ்ளோ வருஷம் ஆகியும் புள்ள இல்லனா யாருக்குத் தான் கஷ்டமா இருக்காது...”

ஒவ்வொருவரும் தங்கள் யூகத்திற்கு வேலை கொடுத்துக் கொண்டிருந்தனர். அனைத்தும் கார்த்திகேயனின் காதில் விழுந்தது. ஆனால் அவர் எதையும் பொருட்படுத்தாது இரண்டாவது மாடி நோக்கிச் சென்றார்.

வீட்டின் வாசலில் ராமகிருஷ்ணனின் மனைவி நின்று அழுது கொண்டிருந்தார். கேகே நகர் R7 காவல் நிலைய உதவி ஆணையர் அவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

“வியாழக்கிழமை வியாழக்கிழமை பாபா கோவில் போவேன் சார்... இன்னைக்கும் அப்படிதான்... வந்து பாத்தா...” மீண்டும் கதறி அழுதார் அந்தப் பெண்மணி.

எல்லாவற்றையும் காதில் வாங்கியவாறே வீட்டினுள் நுழைந்தார் கார்த்திகேயன். முன் அறையில், ராமகிருஷ்ணன் தரையில் விழுந்து கிடந்தார். தான் வரும் வரை பிணத்தை அப்புறப்படுத்த வேண்டாம் என்று கார்த்திகேயன் சொல்லியிருந்ததால், பிணம் அப்படியே இருந்தது. ஒருபுறம் போலீஸ் போட்டோக்ரா ஃபர் ஒருவர் ராமகிருஷ்ணனை வளைத்து வளைத்து ஃபோட்டோ எடுத்துக் கொண்டிருந்தார். ராமகிருஷ்ணன் உயிரோடு இருந்த போது கூட அவரை யாரும் இவ்வளவு கோணங்களில் ஃபோட்டோ எடுத்திருக்கமாட்டார்கள். இன்னொரு புறம், ஃபாரான்சிக் ஆட்கள் தங்கள் வேலையை செய்து கொண்டிருந்தனர். எப்படியும் எந்தக் கைரேகையும் சிக்கப் போவதில்லை என்று கார்த்திகேயனுக்கு தெரியும்.

பொறுமையாக, அறையைக் கூர்ந்து நோக்கினார். அறையில் இருந்த கண்ணாடி மேஜை உடைந்து கிடந்தது. இரண்டு தட்டுகள் உடைந்த மேஜையின் அருகில் கிடந்தன. மிக்சரும், பிஸ்கட்களும் தரையில்

சிதறியிருந்தன. ராமகிருஷ்ணனின் முகத்தில் கண்ணாடித் துண்டுகள் குத்திக் கிடந்தன. அவர் வயிற்றில் ரத்தம் உறைந்திருந்தது. நெஞ்சில் நான்கு என்று கத்தியால் எழுதியிருந்தது. பின்மண்டையைச் சுற்றி தரையில் ரத்தம் படர்ந்திருந்தது. முன் அறையைத் தவிர, வீட்டின் மற்ற அறைகள் அமைதியாக அழகாக இருந்தன.

கார்த்திகேயன் கண்களை மூடி, அறிவைத் திறந்து தீவிரமாக யோசித்தார். வெளியே தேம்பித் தேம்பி அழுதவாறே பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண்மணியின் குரல் அவர் காதில் தெளிவாக விழுந்தது. அதில் தனக்குத் தேவையானவற்றை மட்டும் மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

“அவரு மதியானம் சாப்ட்டு காலேஜ் போறதா சொன்னாரு…”

“வந்து பாத்தா வீடு திறந்து கிடந்தது… டிவி சவுண்டா ஓடிக்கிட்டு இருந்துச்சு…”

“அவருக்கு காது கொஞ்சம் மந்தம். டி.விய சவுண்டா வச்சு தான் பாப்பாரு…”

கார்த்திகேயன் கண்களைத் திறந்தார்.

*‘அவன் வந்திருக்கிறான். அவர் தலையைப் பிடித்து கண்ணாடி மேஜையில் இடித்திருக்கிறான்… இல்லை.. அது எப்படி சாத்தியம்…? அவ்வளவு அவகாசம் அவனுக்கு எப்படிக் கிடைத்திருக்கும்…?*

*இல்லை. அவனை அவர் வரவேற்றிருக்கிறார். நாற்காலியில் அமரச் செய்துவிட்டு, ஸ்நாக்ஸ் எடுத்து வரச் சென்றிருக்கிறார். ஸ்நாக்ஸ் தட்டைக் குனிந்து கண்ணாடி மேஜையில் வைக்கும் போது, அவர் எதிர்பாராத நேரத்தில் அவன் அவர் தலை முடியைப் பிடித்து மேஜையில் இடித்திருக்கிறான். அவர் தலையை அவன் விட்டதும், அவர் அதே வேகத்தில் பின்னாடியே சென்று விழுந்திருக்கிறார். அவர் பின்தலை அடிபட்டிருக்கிறது. அவர் வயிற்றில் கத்தியால் குத்தி குடலைக் கிழித்திருக்கிறான். தொலைக்காட்சி சப்தத்தில் அவருடைய கதறல் சப்தம் மறைந்திருக்கிறது…’*

கார்த்திகேயன் வீட்டை விட்டு வெளியே வந்தார். ராமகிருஷ்ணனைப் பற்றி அவர் மனைவியிடமிருந்து தெரிந்து கொண்டார். நாற்பத்தைந்து வயதாகும் ராமகிருஷ்ணன் K.I.T கல்லூரியில் உற்பத்தி பொறியியல் துறையில்

மெட்ராலஜி பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். அந்தத் துறைத்தலைவரும் அவரே. அந்தத் துறையில் சீனியர் என்பதால் யாரும் அவரை எதிர்த்துப் பேசமாட்டார்கள். அதனால் நினைத்த நாட்களில் விடுப்பு எடுப்பார். அப்படியே கல்லூரி சென்றாலும், வகுப்பறைக்குச் செல்ல மாட்டார். பல நாட்கள் வீட்டில் அமர்ந்து எல்லா சீரியல்களையும் பார்த்துவிட்டு, மதியம் இரண்டு மணிக்கு மேல் கல்லூரிக்குச் செல்வார். இன்றும் அப்படித்தான். மதியத்திற்கு மேல் கல்லூரிக்குச் செல்லலாம் என்று நினைத்திருந்தார். ஆனால் பரலோகம் சென்றுவிட்டார்.

இதற்கு மேல் அந்தப் பெண்மணியிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை என்று கருதிய கார்த்திகேயன் அக்கம்பக்கம் இருப்பவர்களையே விசாரிக்க முடிவு செய்தார்.

“யார் வரா போறானா கூடத் தெரியாது?” கீழ்த்தளத்தில் குடியிருந்த பெண்ணிடம் வினவினார் கார்த்திகேயன்.

“மேல சினிமா கம்பெனி இருக்கு சார். அங்க நிறைய பேர் வருவாங்க...” அந்தப் பெண் அழுகும் தன் கைகுழந்தையை ஆசுவாசப்படுத்தியவாறே பதில் சொன்னாள். மொத்தம் மூன்று தளங்கள் கொண்ட அந்தக் கட்டிடத்தில் ஒவ்வொரு தளத்திலும் ஒரு பெரிய வீடு இருந்தது. மூன்றாவது தளத்தில் ஒரு சினிமா ப்ரொடக்சன் கம்பெனி இருந்தது.

“வித்தியாசமா யாராவது போனத பாத்தீங்களா?”

“சினிமா கம்பெனிக்கு வர எல்லாமே வித்தியாசமாதான் சார் இருப்பாங்க...”

அதற்கு மேல் அவளிடம் பேசுவது வீண் என்று கார்த்திகேயனுக்குப் பட்டது. அவர் அங்கிருந்து நகர்ந்தார். அந்தப் பெண் விளையாடிக் கொண்டிருந்த தன் ஏழு வயது மகனை அதட்டியவாறே உள்ளே சென்றாள்.

“உன்னோட ஒரே ரோதனையா இருக்கே... குப்ப பொறுக்கி... தெருவுல இருக்குறத எல்லாம் வீட்டுக்குள்ள எடுத்துட்டு வர்றியே...” என்றவாறே அவன் முதுகில் அடித்தாள். அவன் அழுது கொண்டே வெளியே வந்து கையிலிருந்து ஒரு உடைந்த பேட்டை வீட்டிற்கு வெளியே தூக்கி எறிந்துவிட்டு சென்றான். எல்லாவற்றையும் கவனித்தவாறே கார்த்திகேயன் மாடிப்படி ஏறினார்.

“இல்ல சார்... இங்க யாரும் வரல...” மூன்றாவது மாடியில் இருந்த ப்ரொடக்சன் மேனேஜர் கூறினார்.

“உங்க ஆஃபிஸ்ல வேல செய்யுற எல்லாரையும் கூப்புடுங்க...”

“நான்தான் யாரும் வரலனு சொல்றேன் இல்ல சார்?”

“யாரும் வரலயா? இல்ல நீங்க பாக்கலயா...?”

அந்த மேனேஜர் அமைதியாக நின்றார்.

“ஸ்டேஷன் வர ஆசப்பட்டீங்கனா போலாம்...” கார்த்திகேயன் சொன்னதும், மேனேஜர் பதறினார்.

“சாருக்குத் தெரிஞ்சா பிரச்சனை ஆகிடும் சார்... ஸ்டேஷன்லாம் வேணாம்... இங்கயே யார வேணாம் விசாரிச்சுக்கோங்க... எதுக்கு தேவையில்லாம இன்வால்வ் ஆகணும்னு பாத்தேன்...”

அந்த ஆஃபிஸில் ஐந்து பேர் வேலை பார்த்தனர். புதிதாக படம் இயக்கப் போகும் இயக்குனர் ஒருவரும், அவருடைய அசிஸ்டண்ட் இரண்டு பேரும் டிஸ்கஷனில் இருந்தனர். எட்டு பேரையும் தனித்தனியாக விசாரித்தார் ஏழுமலை. யாருக்கும் எதுவும் தெரியவில்லை. விரக்தியுடன் கார்த்திகேயன் அந்த இடத்தை விட்டு வெளியேறும் போது, வேகமாக கையில் உணவு பொட்டலங்களுடன் மேலே ஏறி வந்தான் அந்த அலுவலக உதவியாளன். போலீசைப் பார்த்ததும் அவன் முகத்தில் பய ரேகை படர்ந்தது.

“எனக்கு எதுவும் பிரச்சனை வருமோன்னுட்டுதான் சார் பயந்தேன்...” அவன் பயந்துகொண்டே பேசினான்.

“உனக்கு ஒரு பிரச்சனையும் வராது... சொல்லு...”

“பதினோன்னே கால் இருக்கும் சார்... வெளிய வந்து நின்னேன்... கீழ ஒருத்தன் அவசர அவசரமா கார்ல ஏறி போனான்...”

கார்த்திகேயன் மணியைப் பார்த்தார். மணி ஒன்றரை.

“டைம் எல்லாம் எப்படி கரெக்டா சொல்ற...?”

“டீ டைம் சார். அப்பதான் டீ போட்டுக் குடுத்திட்டு வந்தேன்...”

“அவன் எப்படி இருந்தான்...?”

“முகம் தெரியல சார்… ஆனா நிறைய முடி வச்சிருந்தான்… வேகமா கார்ல ஏறிப் போனான்…”

“என்ன கார்…”

“மாருதி ஸ்விஃப்ட்…”

கார்த்திகேயன் காரிடாரில் நின்றவாறே கீழே எட்டிப் பார்த்தார். குறுகிய தெரு. வாசலில் மூன்று கார்கள் நின்று கொண்டிருந்தன.

“எவ்ளோவோ பேர் இங்க கார்ல வர்றாங்க… போறாங்க… அவன மட்டும் ஏன் நோட் பண்ணுன…?”

“சார்… இல்ல சார்… அவன் மத்தவங்க மாதிரி இல்ல. அவன் கார ரிவர்ஸ் எடுத்த வேகத்தப் பாக்கணுமே… நான் கூட பின்னாடி நின்ன கார்ல இடுச்சிருவான்னு பாத்தேன்.. ஆனா நேக்கா கட் அடுச்சி கார ஓட்டிட்டுப் போனான்… ஏரியாக்குள்ள அவ்ளோ வேகமா யாரும் கார் ஓட்டமாட்டாங்க… இது மாதிரி இங்க ஒருத்தனப் பாக்குறது இதான் ஃபர்ஸ்ட் டைம்…”

கார்த்திகேயனுக்கு புதிதாக எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. அவருக்குத் தெரிந்ததைத்தான் அவனும் சொன்னான். ஆனால் அவன் அவசர அவசரமாக அங்கிருந்து சென்றிருக்கிறான். அதுவே கார்த்திகேயனுக்கு உறுத்தியது.

*‘அவன் பதட்டமாகச் சென்றிருக்கிறான். பதட்டம் ஆபத்தானது. அவன் நிச்சயம் அவனை அறியாமலேயே ஏதாவது தடயத்தை விட்டுவிட்டுச் சென்றிருப்பான். என்ன தடயம்?’*

கார்த்திகேயன் யோசித்தார். ஆனால் ஒரு பயனும் இல்லை. யோசித்தவாறே கீழே இறங்கி வந்தார். கீழ் வீட்டில், அந்தப் பெண் மீண்டும் தன் பையனைப் போட்டு அடித்துக் கொண்டிருந்தாள். அவள் அவனைத் திட்டியது அவர் காதில் விழுந்தது.

“எங்கடா எடுத்த சொல்லு? பொறுக்கிட்டு இருந்த… இப்ப திருடவும் ஆரமிச்சிட்டியா…?”

“இல்லமா… படிக்கட்ல கிடந்துச்சு…” அவன் அழுது கொண்டே கூறினான். அவள் மீண்டும் அவனை அடிக்கும் சப்தம் கேட்டது.

“இது நமக்கு வேண்டாம்… கொடு…”

“இல்ல கொடுக்க மாட்டேன்… எனக்கு வேணும்…”

“கொடுடானா...”

கார்த்திகேயன் கீழே வந்தார். அவள் எதையோ அந்தப் பையனின் கையிலிருந்து பிடுங்கினாள். அது பறந்து வந்து அவர் காலடியில் விழுந்தது. அதை அவர் முன்பே பார்த்திருக்கிறார். குனிந்து அந்தப் பொருளை எடுத்தார். யோசித்தார். அவர் முகம் மலர்ந்தது.

“பதட்டம் ரொம்ப ஆபத்தானது...” தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

அவர் கையிலிருந்த அந்த நவரத்தின மோதிரத்தை விட கார்த்திகேயனின் முகம் அதிகமாகப் பிரகாசித்தது.

# 20

கு ப்பைக் கோட்டைக்குப் பின்னிருந்த காடும், அதனுள் இருந்த வீடும் அப்படியே இருந்தன. ஆனால் வீட்டினுள் ஆனந்த்ராஜ் இல்லை. அவன் இருந்த இடத்தில் அழகேசன் இருந்தார். அவரை நாற்காலியோடு சேர்த்து வைத்துக் கட்டியிருந்தனர். ஆனந்த்ராஜ் குற்றவாளி இல்லை என்று தெரிந்த கணமே அவனை வேறிடத்திற்கு அப்புறப்படுத்தச் சொல்லிவிட்டார் கார்த்திகேயன்.

அழகேசனை கைதுசெய்வது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. அந்த மோதிரம் யாருடையது என்று நினைவுப்படுத்திப் பார்க்கவும் கார்த்திகேயன் அதிகம் மெனக்கெடவில்லை. அழகேசனை காலேஜ் கேண்டீனில் வைத்து விசாரிக்கையில் அவர் கையில் அந்த மோதிரத்தைக் கவனித்தது கார்த்திகேயனுக்கு ஞாபகம் வந்தது. கல்லூரியில் வைத்து அழகேசனை

கைது செய்வது எளிதல்ல என்பதை அறிந்திருந்த கார்த்திகேயன், பஷீரிடம் நம்பர் வாங்கி, ஏழுமலையின் செல்லிருந்து அழகேசனுக்கு போன் செய்தார்.

“சார்... வணக்கம்”

“யாரு?”

“சினிமா கம்பெனில இருந்து பேசுறேன் சார்”

“சாரி… ராங் நம்பர்”

“ரைட் நம்பர் தான் சார்... கேகே நகர்ல ராமகிருஷ்ணன் சார் வீட்டுக்கு மேல இருக்கு எங்க கம்பெனி… நீங்க வந்துட்டுப் போனத நான் பாத்தேன் சார்… அவசரத்துல உங்க மோதிரத்தை விட்டுட்டுப் போய்ட்டீங்க”

“சாரி ராங்க் நம்பர்” பதற்றமாக இணைப்பைத் துண்டித்தார் அழகேசன்.

ஆனால் கார்த்திகேயன் எதிர்பார்த்தது போல் மீண்டும் கால் வந்தது. அழகேசன் பேசினார்.

“எங்க வரணும் சொல்லு”

“இங்க கிரோம்பேட்டை டிப்போ கிட்ட வந்துடுங்க... அம்மாக்கு உடம்பு சரில… ஒரு இருபதாயிரம் எடுத்துட்டு வந்துடுங்க”

“பிளாக் மெயில் பண்ணுறியா… அந்த மோதிரம் ஐம்பதாயிரம் போகும்... கடைல வச்சுரு...”

“வேணாம் சார்... இங்க போலீஸ் யாராவது இருந்தா நான் குடுத்துர்றேன்...”

இருபது நிமிடத்தில் அழகேசன் டிப்போவில் இருந்தார். பலரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆட்டோக்கள் உயிரற்ற நிலையில் அங்கே உறங்கிக்கொண்டிருந்தன. அங்கே நின்று அழகேசன் போன் செய்தார்.

“ஏய்… எங்க இருக்க? நான் வந்துட்டேன்... இங்க ஆட்டோலாம் இருக்கே... அங்க…”

“இதோ வந்துட்டேன் சார்...” ஆட்டோவின் பின்னாலிருந்து வந்தார் கார்த்திகேயன்.

***

“இதுக்கெல்லாம் நீங்க பதில் சொல்லணும்...” அழகேசன் தைரியமாகவே பேசினார்.

“சொல்றோம்… அதுக்கு முன்னாடி நாங்க கேக்குற கேள்விக்கு பதில் சொல்லுங்க...” கார்த்திகேயன் கேலியாகப் பேசினார்.

“அந்த மோதிரம் எப்படி அங்க போச்சுனு எனக்குத் தெரியாது... அதான் சொன்னேனே நான் அத மிஸ் பண்ணிட்டேன்னு...”

“அதான் இருபதாயிரம் பணத்தோட வந்தீங்களா? மிஸ் பண்ணியிருந்தா நான் கேட்ட பணத்த ஏன் கொண்டுவந்தீங்க...?”

அழகேசன் பதில் சொல்ல முடியாமல் திணறினார். அழகேசனிடம் அந்த மோதிரத்தைக் காண்பித்த போது, அவர் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை மிகத் தெளிவாக கவனித்தார் கார்த்திகேயன். அதிலிருந்து அழகேசனை உண்மை பேச வைக்க வெகுநேரம் ஆகாது என்பதை கண்டுகொண்டார்.

“சொல்லுங்க... இனிமேலும் உண்மைய மறைக்க முடியாது...”

“எனக்கு எதுவும் தெரியாது சார்...”

கார்த்திகேயன் தன் துப்பாக்கியை உருவி அழகேசனின் நெற்றிப் பொட்டில் வைத்தார்.

“இப்ப சொல்லுங்க... உங்கள இங்க கூட்டிட்டு வந்தது யாருக்கும் தெரியாது. இங்க இப்படி ஒரு இடம் இருக்குறதும் யாருக்கும் தெரியாது... உங்கள இங்கேயே கொன்னுப்புதச்சாலும் யாருக்கும் தெரியாது” கோபப்படுவது போல் பாவனை செய்தார் கார்த்திகேயன். உண்மையில் அவர் சட்டத்திட்டங்களின்படி வேலை செய்பவர். என்கவுன்ட்டர் செய்வது சட்டப்படி தவறு என்று கருதுபவர். இதுவரை யாரையும் சட்டத்திற்குப் புறம்பாகத் தண்டித்ததில்லை. இருந்தும் அழகேசனை பயமுறுத்த அவர் அப்படி சொன்னார்.

ஆனால் அழகேசன் பயப்படவில்லை. சப்தமாகச் சிரித்தார். சிரிக்கும் போது அவர் உடம்பில் பெண்தன்மை வெளிப்பட்டதை இன்ஸ்பெக்டர் கவனித்தார்.

“கொல்லணும்னா கொன்னுக்கோங்க சார்... நான் கொலை பண்ணல...”

அதைக் கேட்ட கார்த்திகேயன் சப்தமாகச் சிரித்தார்.

“நீங்க கொன்னீங்கனு நான் சொல்லவே இல்லையே சார்... உங்களப் பாருங்க... உங்களால கொலைலாம் செய்ய முடியுமா?”

தன்னிடமிருக்கும் பெண்தன்மையைக் கேலி செய்ததும் அழகேசனுக்குக் கோபம் வந்தது. முகம் சிவந்தது. அதைக் கவனித்த கார்த்திகேயன், இதுதான் உண்மையை வரவழைக்கக் கூடிய வழி என முடிவுசெய்து தொடர்ந்து அதே வழியில் பயணித்தார்.

“Mr.அழகேசன்... உங்கள அரெஸ்ட் பண்றதுக்கு முன்னாடி உங்களப்பத்தி பேக்கிரவுண்ட் செக் பண்ணுனோம். 2009–ல உங்க வைஃப் தாரணி தூக்கு மாட்டி இறந்துருக்காங்க. உங்களுக்குள்ள எந்தப் ப்ராப்ளமும் இல்லனு உங்க அத்தையே வாக்கு மூலம் கொடுத்திருக்காங்க. கியூர் பண்ணமுடியாத ஸ்கின் ப்ராப்ளம். தாங்கிக்க முடியாம தற்கொலை பண்ணிக்கிட்டானு நீங்களும் சொல்லியிருக்கீங்க. எனக்கு என்னவோ உங்களோட இந்தப் பிரச்சனை தெரிஞ்சுதான் அவங்க சூசைட் பண்ணிக்கிட்டாங்களோனு தோணுது. அதனால நீங்க கொலை பண்ணியிருப்பீங்கனு எனக்கு நம்பிக்கை இல்லை”

“நான்தான்டா கொலை பண்ணுனேன்... இப்ப என்ன?”

அங்கே சில நொடிகள் பெருத்த அமைதி நிலவியது. அழகேசன் மனமுடைந்து அழத் தொடங்கினார். கார்த்திகேயன் மேற்கொண்டு எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. அழகேசனே எல்லாவற்றையும் சொன்னார்.

“எனக்கு அப்பா அம்மா இல்ல... மாமா தான் வளத்தார். அவர் பேங்க் எம்ப்ளாயீ. டிராமா ட்ரூப் வச்சிருந்தாரு. ஃப்ரீ டைம்ல நிறைய டிராமா போடுவாரு. மாமா எங்க போனாலும் நானும் போவேன். அப்படியே என்னையும் நடிக்க வச்சாங்க. சின்ன வயசுல பொண்ணு வேஷம் போட்டுவிட்டாங்க. அந்த வேசமே நிலச்சிருச்சு. அதனாலேயே என்கிட்ட ஒரு பெண்தன்மை வந்திருச்சு” மீண்டும் அழுதார்.

“ஆனா நான் யாருக்கும் எந்த வகையிலயும் குறஞ்சவன் இல்ல. நான் தான் கொன்னேன்... நாலு பேரையும்... இந்தக் கையாலதான் குத்திக் கொன்னேன்...” கோரமாகச் சிரித்தார் அழகேசன்.

“என்ன சார் சைக்கோ மாதிரி பேசுறான்?” கார்த்திகேயனின் காதில் முணுமுணுத்தார் ஏழுமலை. தண்ணீர் எடுத்து வரும்படி ஏழுமலையிடம் செய்கை செய்தார் கார்த்திகேயன். ஜன்னல் ஓரம் இருந்த தண்ணீர் கேனிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து அழகேசனிடம் கொடுத்தார் ஏழுமலை. தண்ணீரைக் குடித்ததும் அவர் கோபம் அடங்கியது. முகம் சாந்தமானது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்.

“2007 எண்ட்ல தான் நான் KIT–ல ஜாய்ன் பண்ணினேன்... பிரகாஷ் சார், ரங்கதுரை சார், ராமகிருஷ்ணன் சார் எல்லாம் எனக்கு முன்னாடி இருந்தே அங்க வேலை பாத்தாங்க. சின்ன வயசுல இருந்தே என்கிட்ட இருந்த பெண்மையை எல்லாரும் கிண்டல் பண்ணுவாங்க... நான் முன்ன வேலை பாத்த காலேஜ்ல எல்லாரும் என்ன ரொம்ப அசிங்கப்படுத்துனதுனாலதான் நான் KIT–க்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்கிட்டுப் போனேன். பட் KIT–ல எல்லாருமே என்ன மதிச்சாங்க... பிரகாஷ் சார், ரங்கதுரை சார், ராமகிருஷ்ணன் சார்லாம் என்ன அவங்க குரூப்ல ஒரு ஆளா சேத்துக்கிட்டாங்க... அதனாலேயே அவங்க பண்ண தப்பெல்லாம் நான் கண்டுக்கல. கிளாஸ்க்கு ஒழுங்கா போமாட்டாங்க. என்னையும் “போகாத நோட்ஸ் கொடுத்துட்டு விட்ருனு” சொல்லுவாங்க... டிபார்ட்மென்ட் பணத்த கையாடல் பண்ணுவாங்க... அங்க படிக்கிற கேர்ள்ஸப் பத்தித் தப்பா கமெண்ட் அடிப்பாங்க. ஸ்டாஃப் ரூம்ல உக்காந்து போர்ன் மூவீஸ் பாப்பாங்க. நான் கண்டும் காணாதது மாதிரியே இருப்பேன். எல்லாம் சரியா போயிட்டு இருந்துச்சு. AIPEM நடக்குற வரைக்கும்...” அழகேசன் பெருமூச்சு வாங்கினார்.

“AIPEM–னா?”

“All India industrial and Production Engineers Meet... நாலு வருசத்துக்கு ஒருவாட்டி நடக்கும்... இந்தியா ஃபுல்லும் காலேஜ் இண்டஸ்ட்ரீஸ்க்லாம் இன்வைட் போகும்... KIT ப்ரொடக்சன் டிபார்ட்மெண்ட் தான் ஆர்கனைஸ் பண்ணும்... UGC ஃபண்ட்ஸ கையாடல் பண்றதுக்காகவே நடத்தப்படுற ஒரு மீட்... 2009–ல எலக்சன் நடந்ததால KIT–ல அந்த மீட்ட நடத்த முடியல. பாலெட் பாக்ஸ ஓட்டு எண்ணிக்கை நடக்குறவரைக்கும் KIT–ல தான் ஸ்டோர் பண்ணி வைப்பாங்க. அதனால அந்த வருஷம் வேளச்சேரில இருக்குற ARKS இன்ஜினியரிங் காலேஜ்ல அந்த மீட்ட

நடத்துனாங்க. நான், பிரகாஷ் சார், ராமகிருஷ்ணன் சார் எல்லாருமே அந்த காலேஜ் கெஸ்ட்ஹவுஸ்லயே ஒரு வாரம் தங்கியிருந்தோம்... மீட் நடக்கறதுக்கு ஃப்யூ டேஸ் பேக்தான் ரங்கதுரை சார் ரிடையர் ஆகியிருந்தாரு... ஆனாலும் அவரும் அப்பப்ப மீட்க்கு வருவாரு.. குஜராத்லயிருந்து கணேஷும் அந்த மீட்ல அவரோட கம்பெனி சார்புல பார்ட்டிசிபேட் பண்ண வந்துருந்தாரு... பிரகாஷ் சாருக்கு கணேஷ் ரொம்பப் பழக்கம்... எனக்கும் இன்ட்ரொடியூஸ் பண்ணி வச்சாரு. அவரும் நல்லவராதான் தெரிஞ்சாரு. அவங்க எல்லாரும் நல்லவங்கனு நினச்சு ஏமாந்ததுதான் என் தப்பு. அதுக்கு நான் ரொம்பப் பெரிய விலை கொடுத்துட்டேன்''

அழகேசன் மீண்டும் அழத்தொடங்கினார். கார்த்திகேயன் அவர் அழுது முடிக்கும் வரை காத்திருந்தார். அழகேசன் தொடர்ந்து பேசினார்.

''தினைக்கும் நைட் சேர்ந்து தண்ணி அடிப்பாங்க... மத்தபடி நார்மலாதான் இருந்தாங்க. அந்த மீட் முடிஞ்சது. நான் அமைதியா இருந்திருக்கணும். ஆனா அவங்க எல்லாரும் என்கிட்ட ரொம்ப நல்லா பழகுனதுல நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுட்டேன். அவங்கள என் குடும்பத்து மனுஷங்களா நினச்சு என் வீட்டுக்கு விருந்துக்கு வரச் சொன்னேன். கணேஷையும் இன்வைட் பண்ணியிருந்தேன். அன்னைக்கு சன்டே. மதியானம் சாப்பாட்டுக்கு வருவாங்கணு காத்துருந்தோம். ஆனா அவங்க வரல. ஃபோன் பண்ணாலும் எடுக்கல. திடீர்னு என் அத்தைக்கு உடம்பு சரியில்லாம போச்சு. நான் அவங்கள ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போனேன்''

''அத்தைனா... உங்க மாமாவோட வைஃப்பா...?''

''ஹ்ம்ம்... நான் என் மாமா பொண்ணதான் சார் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... என் மாமா இறந்ததுக்கு அப்பறம் அத்தை எங்க கூடவே தங்கிட்டாங்க. என் அத்தைக்கு கேன்சர் இருந்துச்சு. ஆனா அது தாரணிக்குத் தெரியாது. அவ ரொம்ப சென்சிடிவ். சின்ன சின்ன விசயங்களையும் அவளால தாங்கிக்க முடியாது. ஹாஸ்பிடல் வந்தா அவளுக்கு உண்மை தெரிஞ்சிரும்னு அவள வீட்லயே விட்டுட்டு நான் மட்டும் அத்த கூட போனேன். நாங்க திரும்பி வந்து பாத்தப்ப என் தாரணி பிணமா தொங்கிக்கிட்டு இருந்தா...''

அழகேசனால் மேற்கொண்டு பேச முடியவில்லை. அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. கார்த்திகேயனின் மனமும் இளகியிருந்தது.

"அவருக்கு ஏதாவது சாப்புட கொடுங்க..." என்று ஏழுமலையிடம் கார்த்திகேயன் சொன்னார். ஏழுமலை மேஜை மேல் இருந்து பிரட் பாக்கெட்டை எடுக்கச் சென்றார். அதுவரை அவர்களை ஜன்னல் வழியே கண்காணித்த அந்த உருவம் விருட்டென்று அங்கிருந்து மறைந்தது.

# 21

டி.ஜி.பி அலுவலகத்தில் அமைந்திருந்த ஒரு சிறு கான்ஃபரன்ஸ் அறையில் தேவும் கார்த்திகேயனும் அமர்ந்திருந்தனர். இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. கார்த்திகேயன் ரிப்போர்ட்டை புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். தேவ் செல்போனில் டெம்பிள் ரன் விளையாடிக்கொண்டிருந்தார். வீரபத்திரன், வழக்கம் போல் தாமதமாக அறைக்குள் நுழைந்தார்.

"சாரி கொஞ்சம் லேட் ஆகிடுச்சு… வெள்ளிக்கிழமையா… கோவிலுக்கு போனும்னு வீட்டம்மா ஒரே தொந்தரவு... அதான்..." வீரபத்திரன் சொல்ல மற்ற இருவரும் சம்பிரதாயமாகப் புன்னகை புரிந்தனர். இருக்கையில் அமர்ந்த வீரபத்திரன் கார்த்திகேயனிடம் உரையாடத் தொடங்கினார்.

"என்ன சொல்றார் அழகுசுந்தரம்?"

"அழகேசன் சார்…" என்றவாறே ஃபைலை நீட்டினார் கார்த்திகேயன்.

"ஏதோ ஒண்ணு…" என்றவாறே ஃபைலை வாங்கிப் புரட்டினார் வீரபத்திரன். "ஒருவழியா இந்த கேஸ் முடிஞ்சிது. சந்தோஷம். ஆடியோ?"

வீரபத்திரன் கேட்க, தான் வைத்திருந்த டிஜிட்டல் ப்ளேயரில் இருந்த ப்ளே பட்டனை அழுத்தினார் கார்த்திகேயன்.

“எனக்கு அப்பா அம்மா இல்ல… மாமா தான் வளத்தார்…

………

நாங்க திரும்பி வந்து பாத்தப்ப என் தாரணி பிணமா தொங்கிக்கிட்டு இருந்தா…

அவ ஏன் அந்த முடிவ எடுத்தானு எங்களுக்குத் தெரியல… அவளுக்கு ஸ்கின் ப்ராப்ளம் இருந்துச்சு… ஸ்கின் எப்பவும் டிரையாவே இருக்கும்… க்யூர் பண்ணவே முடியாதுனு டாக்டர் சொல்லிட்டாரு… அதனால அவ அப்டி பண்ணியிருக்கலாம்னு நினச்சோம்… எங்களுக்குள்ள எந்தப் பிரச்சனையும் இல்லனு எல்லாருக்கும் தெரியும்… அதனால போலீசும் என் மேல சந்தேகப்படல…

“தாரணி போனதுக்கப்பறம் என்னால வீட்ல இருக்க முடியல… அத்தையும் ஒரு ஆஷ்ரமத்துல போய் தங்கிட்டாங்க… நான் KIT–லயே தங்கிட்டேன்… ரெஸிடென்ஷியல் கவுன்சிலரானா தான் காலேஜுக்குள்ள தங்கமுடியும். பிரகாஷ் சார் தான் வார்டனா இருந்தாரு. அவரு என்ன ரெஸிடென்ஷியல் கவுன்சிலர் ஆக்குனாரு. காலேஜ்லயே வாழ்க்கை ஓடிக்கிட்டு இருந்துச்சு. ஒரு நாள் நைட் எதார்த்தமா வார்டன் ரூம் பக்கம் போனேன். பிரகாஷ் சாரும் ராமகிருஷ்ணன் சாரும் உக்காந்து குடிச்சிக்கிட்டு இருந்தாங்க. மறுநாள் NBA அக்ரெடிடேசன் இருந்ததால அவங்க காலேஜ்லயே தங்கிட்டாங்க. போதைல அவங்க என்னப் பத்தி பேசுற மாதிரி இருந்துச்சு. அங்கேயே நின்னு கேட்டேன். எல்லாத்தையும் கேட்டேன்…

……

“நானும் அத்தையும் ஹாஸ்பிடல்ல இருந்தப்ப அவங்க எல்லாரும் வீட்டுக்கு வந்திருக்காங்க. ஃபுல் போதையில இருந்திருக்காங்க. அது தெரியாம தாரணி அவங்கள வீட்டுக்குள்ள உக்கார வச்சுருக்கா. நான் வீட்ல இல்லனு தெரிஞ்சதுமே அவங்க அவகிட்ட தப்பா நடந்துக்க முயற்சி பண்ணியிருக்காங்க. அவ ரூமுக்குள்ள போய் கதவ சாத்தியிருக்கா. ரொம்ப நேரம் வெளில வரலனு தெரிஞ்சதும் அவங்க பயந்து அங்க இருந்து ஓடியிருக்காங்க. மறுநாள்

தான் அவ தற்கொலை பண்ணிக்கிட்டது அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு. இதப்பத்தி அவங்க பேசுனத நான் கேட்டேன். அவ எனக்கு போன் பண்ணியிருக்கலாம். அவளால எதையுமே தாங்கிக்க முடியாது...''

அழகேசன் தேம்பித் தேம்பி அழுவதும் பதிவாகியிருந்தது.

''ஃபார்வார்டு பண்ணுயா...'' வீரபத்திரன் சொல்ல கார்த்திகேயன் ஃபார்வார்டு செய்தார்.

''அப்பவே அவங்கள கொன்னுறணும்னு தோணுச்சு. ஆனா அவங்களக் கொன்னுட்டு அங்க இருந்து தப்பிக்க முடியாதுனு தெரியும். கணேஷ், ரங்கதுரை எல்லாரையும் தண்டிக்கணும். நான் பிஸிக்கலி ஸ்ட்ராங்க் இல்ல. என்னோட பலம் என்னோட அறிவு தான். அத யூஸ் பண்ண முடிவு பண்ணுனேன். அவங்களுக்கு தண்டனை கொடுக்கணும். ஆனா நான் சிக்கக் கூடாது. தப்பு பண்ணுனது அவங்க. நான் ஏன் ஜெயிலுக்குப் போணும்?

''காலேஜ்குள்ள இருந்துக்கிட்டு திட்டம் போட்டா என் மேல சந்தேகம் வந்திருங்க்றதால, ஹாஸ்டல காலி பண்ணிட்டு வெளிய வீடு பாத்துட்டுப் போனேன். அதே சமயத்துல அவங்க எல்லார் கூடவும் எப்பவும் போல ஃப்ரெண்டாவே பழகுனேன். அவங்களுக்கு என் மேல சந்தேகம் வராம பாத்துக்கிட்டேன். என் திட்டத்த எக்சிகியூட் பண்ண எனக்கு நிறைய வருஷம் தேவைப்பட்டுச்சு. அவங்க எல்லாரையும் கொன்னுறலாம். ஆனா கேஸ் ஓபனா இருந்தா நிச்சயம் போலீஸ் இன்வெஸ்டிகேட் பண்ணிக்கிட்டே இருக்கும். என்ன பண்றதுனு யோசிச்சேன். அப்பதான் ஒரு நாள் மாடம்பாக்கம் சிவன் கோவில்ல ஆனந்த்ராஜ பாத்தேன். அவன் என் ஸ்டூடண்ட் தான். ஆளே மாறியிருந்தான், நிறைய முடி தாடினு ஒரு சித்தன் மாதிரி இருந்தான். நான் பேசுனேன். பதில் பேசல. ஏதோ தன்னோட உலகத்துல மிதந்துக்கிட்டு இருந்தான். அப்பதான் எனக்கு ஒரு யோசனை தோணுச்சு. எனக்கு பதில் இவன குற்றவாளியாக்கிட்டா? கேஸ் முடிஞ்சா போதும்னுதான் போலீஸ்காரங்க நினைப்பாங்க.

''அவன் காலேஜ் படிக்கும் போதே புரட்சி, போராட்டம்னு சுத்துவான். நிறைய அபாலஜி லெட்டர்ஸ் எழுதியிருக்கான். காலேஜ்ல அவன் மேல பிளாக் மார்க் இருந்துச்சு. அதனால அவன் தான் செஞ்சுருப்பான்னு ஈஸியா மத்தவங்கள நம்ப வச்சுறலாம்னு நினச்சேன். அவனத் தொடர்ந்து ஃபாலோ

பண்ணினேன். எனக்கு சாதகமாவே அவன் கேரக்டர் இருந்துச்சு. எதப்பத்தியும் அலட்டிக்காம கோவில், ஆராய்ச்சினு சுத்திக்கிட்டு இருந்தான்...

........

"பெர்ஃபெக்டா பிளான் பண்ணினேன். அவன் மேல சந்தேகப்படுற மாதிரி ஒவ்வொரு கொலைலயும் ஒரு க்ளுவ விட்டுட்டுப் போனேன். அவன அரெஸ்ட் பண்ணினாலும் அவன் பதில் பேசமாட்டான். சைக்கோ கில்லிங்க்ஸ்னு போலீஸ் கேச முடிச்சிடும்னு நினச்சேன்...

....

"நேரம் கை கூடி வந்துச்சு. முதல்ல காலேஜ்ல வச்சு பிரகாசக் கொல்ல முடிவு செஞ்சேன். நான் டிபார்ட்மெண்ட்டுக்குள்ள போகும்போது யாரும் என்ன ஐடென்டிஃபை பண்ணிறகூடாதுங்குறதுக்காக மாறு வேஷம் போட்டேன். நிறைய முடியையும் தாடியையும் வச்சிக்கிட்டு போனேன்...

*"என்னய்யா இப்படி மாறீட்ட?"*

*"மாத்தீட்டீங்க சார்"*

அவரக் கொல்லுறது எனக்கு கஷ்டமா இல்ல... உண்மையுல யாரக் கொல்றதும் எனக்கு கஷ்டமா இல்ல"

அழகேசனின் சிரிப்பு சத்தம் அந்த கான்பரன்ஸ் ஹாலில் கரைந்தது.

"கொலைகாரன் காலேஜுக்குள்ள எப்படி வந்தான். எப்படி வெளிய போனானுதான் நீங்கலாம் விசாரிச்சீங்க... ஆனா நான் காலேஜுக்குள்ளயே தான் இருந்தேன், கூட்டத்தோட கூட்டமா..."

.....

"அடுத்தமுறையும் காலேஜ் ஸ்டாஃப கொன்னா போலீஸ் உஷார் ஆகிடும்... அதனால கணேஷ டார்கெட் பண்ணினேன். அவரு எப்பவும் ஈவினிங் கணபதில இருக்குற ஒரு ஹோட்டல்ல டிஃபன் சாப்பிடுவாரு. அன்னைக்கு நானும் அந்த ஹோட்டலுக்குப் போனேன்...

*"ஹேய்... கணேஷ்.. ஞாபகம் இருக்கா? நான் அழகேசன், KIT."*

ரெண்டு பெரும் நிறைய பேசுனோம்.

...........

............

*“இல்ல கணேஷ்... சாண்ட்விச் கோர்ஸ் பத்தி செமினார் எடுக்க வந்திருக்கேன்...”*

....

*“நாளைக்கு தான செமினார். இப்ப ப்ரீ தான...என் ஆஃபீஸ் வாங்க ஃப்ரீயா பேசலாம்...”*

நான் அவர் கூட அவர் ஆஃபிஸ்க்கு போனேன். அவர் கார்லயே போனதால யாருக்கும் சந்தேகம் வரல.

*“என்ன மன்னிச்சிடுங்க அழகேசன்...”*

*“மன்னிக்கிறதுக்கு நான் கடவுள் இல்ல கணேஷ்... மன்னிப்பு கேக்குறதுக்கு நீங்க மனுஷனும் இல்ல...”*

..............

“மாறு வேசத்துல ரங்கதுரைய பாக்க போனேன்... அவர்கிட்ட பேசி கார்ல பச்சமலைக்கு கூட்டிட்டுப் போனேன்...”

*“என்ன... ஆளே மாறிட்ட...?”*

....

*“நாங்க எதுமே வேணும்னே பண்ணல... என்ன விட்டுடு... ப்ளீஸ்...”*

........

*“என் தாரணிய உங்களால குடுக்க முடியுமா?”*

அவரக் கொன்னுட்டு ஆனந்த்ராஜ் முடியை அவர் கையில சொருகுனேன்.

“அவன் முடி உங்களுக்கு எப்படி கிடச்சுது…?”

“அவன் சதுரகிரி போயிருந்தான்.. நானும் அவன ஃபாலோ பண்ணி போயிருந்தேன்... மலை உச்சில பவர் கிடையாது. அவன் தூங்கும் போது அவனுக்கே தெரியாம அவன் முடிய கட்பண்ணி எடுத்தேன்...”

…………..

“எல்லாம் கரெக்டா நடந்துச்சு… அபாலஜி லெட்டர நோக்கி உங்களத் திருப்பணும்னு முடிவு பண்ணினேன். விக்னேஷன யூஸ் பண்ணினேன். நான் எதிர்பார்த்த மாதிரியே நீங்க வந்து என்ன விசாரிச்சீங்க‘‘

“விக்னேஷன் எப்படி சூசைட் அட்டெம்ப்ட் பண்ணுனான்...?”

“ஹா ஹா… அடானமஸ் காலேஜ் சார் எங்களுது... நாங்க நினச்சா யார வேணாலும் பாஸ் பண்ணலாம், யார வேணாலும் ஃபெயில் பண்ணலாம்... நான் தான் விக்னேஷனோட ஃபேகல்டி அட்வைசர். அவன் ரொம்ப பயந்த சுபாவம் கொண்டவன். அவன் ஆல்ரெடி ஒரு முறை டிபார்ட்மெண்ட் பில்டிங்ல இருந்து குதிக்க ட்ரை பண்ணுனான்… நான் தான் பாத்து காப்பாத்துனேன். இன்ஜினியரிங் கிராபிக்ஸ்ல பெயில் ஆனதால ராமகிருஷ்ணன் அபாலஜி லெட்டர் எழுத சொன்னாருனு எழுதிக் கொடுத்திருக்கான். அவரு உன் அப்பாகிட்டையும் ஒரு அபாலாஜி லெட்டர் எழுதி வாங்கிட்டுவானு சொல்லியிருக்காரு. அவன் தாங்கிக்க முடியாம தற்கொலை பண்ணப் பாத்திருக்கான். அவன் தற்கொலைக்கு முயற்சி பண்ணினத நான் யாருக்கிட்டையும் சொல்லல. அவனும் சொல்ல மாட்டான்னு தெரியும். அவன் எமோஷனல் டைப்னு புரிஞ்சிக்கிட்டேன். அத எனக்கு சாதகமா பயன்படுத்த ஆரமிச்சேன்... ஒரு அபாலஜி லெட்டர வச்சு ஒரு மனுஷன எப்படிவேணும்னாலும் மாத்திட முடியும்னு எனக்குத் தெரியும். மத்த ஸ்டாஃப் கிட்ட பேசுனேன். விக்னேஷன்கிட்ட ஸ்ட்ரிக்ட்டா நடந்துக்க சொன்னேன். ஆனா நான் மட்டும் அவன் கிட்ட அன்பா இருக்குற மாதிரி நடிச்சேன். எல்லாரும் என் பேச்சக் கேட்டு அவன்கிட்ட அபாலாஜி லெட்டர் வாங்குனாங்க. அவன் இன்டெர்னல் மார்க்ஸ்ல கைவச்சாங்க. ஒவ்வொருமுறையும் அவன் என் கிட்ட வந்து ஃபீல் பண்ணுவான். நான் அவன் பிரச்சனையை சால்வ் பண்ணுவேன். ஒருநாள் உன் ஸ்டாண்டிங் அரியர்ஸ் எல்லாத்தையும் கிளியர் பண்ணியிடுறேனு சொன்னேன். நான் சொல்றதெல்லாம் செய்ய ஒத்துக்கிட்டான். தூக்க மாத்திரை சாப்பிட்டான். நான் சொல்லிக்கொடுத்த மாதிரியே உங்கக்கிட்ட பேசுனான்...”

“ஸ்கௌண்ட்ரெல். மார்க் தான் முக்கியம்னு நாம சொல்லிச் சொல்லி வளக்குறதுனால தான் இந்தப் பிரச்சனை… அந்தப் பையன் செத்திருந்தான்னா என்ன ஆகுறது?” வீரபத்திரன் கோபத்தை அடக்க முடியாமல் கேட்டார். கார்த்திகேயன் ப்ளேயரை பாஸ் செய்துவிட்டுப் பேசினார்.

“எவ்ளோ டோசேஜ் கொடுக்கணும்னு அழகேசனுக்குத் தெரிஞ்சிருக்கு சார். அவன் அன்கான்ஷியஸ் ஆகுற மாதிரி அதே சமயத்துல அவன்

உயிருக்கு ஆபத்து வராத மாதிரி மாத்திரை கொடுத்திருக்காரு''

''சினிமா கதை மாதிரியில்ல இருக்கு....''

''அந்த ஆளு கதை எழுதி டிராமா போடுறவருதான் சார்... அதான் பெர்ஃபெக்டா ப்ளே பண்ணியிருக்காரு...''

''சோ... அவன் பண்ண ஒரே தப்பு ஆனந்த்ராஜோட முடிய கட் பண்ணுனது...!''

''யா.. இன்னொரு தப்பு, அவசரத்துல தன் மோதிரத்தை விட்டுட்டுப் போனது. வியாழக்கிழமை ராமகிருஷ்ணனோட வைஃப் இருக்க மாட்டாங்கனு தெரிஞ்சு போயிருக்காரு. கொன்னுருக்காரு..அவசர அவசரமா திரும்பி வரும்போது க்ளவுஸக் கழட்டியிருக்காரு. அப்ப அவர் மோதிரம் படிக்கட்டுல விழுந்திருக்கு...''

''ஹ்ம்ம்... கொலைபண்ணிட்டு காலேஜுள்ளயேதான் இருந்திருக்கான்... ஸ்னிஃப் டாக்ஸ்கிட்ட மாட்டாம எப்படி தப்பிச்சான்?''

''கொடைமிளகாய் விதைய அரைச்சு க்ரைம் ஸீன்ல ஸ்ப்ரே பண்ணியிருக்காரு சார். அதனாலதான் எல்லா மோப்ப நாய்களுமே கன்ஃப்யூஸ் ஆகிடுச்சு...''

''படிச்சவன் தப்புபன்னுனா நாடு தாங்காதுணு சொல்றது சரியதான் இருக்கு... வாட் அபௌட் திஸ் கை ஆனந்த்ராஜ்...''

''என் கஸ்டடிலதான் சார் இருக்கான்...'

''அவன் பாட்டி அவன் அரெஸ்ட்ட ரெஸிஸ்ட் பண்ணுனானு கேள்விப்பட்டேன்...?''

''ஜஸ்ட் பேரன் மேல இருக்குற பாசம் தான்... சந்தேகப்படுறதுக்கு ஒண்ணுமில்ல...''

''தென் ஓகே. நமக்கு இனிமே அவன் தேவையில்லை. ரிலீஸ் ஹிம். இந்தாள இன்னைக்குள்ள கோர்ட்ல ப்ரொடியூஸ் பண்ணு''

''யெஸ் சார்...'' கார்த்திகேயன் இருக்கையிலிருந்து எழுந்தார்.

''பை தே வே... அழகேசன் யூஸ் பண்ணுன வெப்பன்ஸ், காரெல்லாம் என்னாச்சு...?''

“ஒரே ஒரு கத்தி மட்டும் தான் சார் யூஸ் பண்ணியிருக்காரு… க்ரைம்ல யூஸ் பண்றதுக்காகவே செகண்ட் ஹாண்ட் ஸ்விஃப்ட் கார் புதுப்பேட்டைல வாங்கியிருக்காரு… அன்—பில்ட்… எல்லாத்தையும் டிஸ்போஸ் பண்ணிட்டாரு… ட்ரேஸ் பண்ண முடியல”

“ஒகே.. யூ கேன் கோ…”

கார்த்திகேயன் சல்யூட் அடித்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

# 22

பா ழடைந்த வீட்டின் வாசலில் காவலுக்காக உதவி ஆய்வாளர் ஆண்டனியும், கான்ஸ்டபிள் ஒருவரும் நின்று கொண்டிருந்தனர். வீட்டின் கதவு மூடியிருந்தது. தாழிடப்படவில்லை. திடீரென்று கதவை திறந்து கொண்டு ஏழுமலையும், கார்த்திகேயனும் வெளியே வந்தனர். பாக்கெட்டில் இருந்த சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார் கார்த்திகேயன். புகையின் போதையில்

லயித்திருக்கையில், தேவ் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார். அவரைப் பார்த்ததும் கார்த்திகேயன் சிகரெட்டைக் கீழே போட எத்தனித்தார்.

“ஹான்... ஹான்… யூ கேரி ஆன்… நோ ஃபார்மாலிட்டீஸ். நீங்க தான் எப்பவும் என்ன எதிரியாப் பாக்குறீங்க...” தேவ் சிரித்துக் கொண்டே சொன்னார். கார்த்திகேயன் எதுவும் பேசாமல் சிகரெட்டைக் கீழே போட்டு காலில் மிதித்துவிட்டு, ஓரமாகப் போய் நின்றுகொண்டார். தேவ் கார்த்திகேயனை ஆச்சர்யமாகப் பார்த்தார். *‘இவன் நம்ம வழிக்கே வர மாட்டான் போல இருக்கே’* என்று யோசித்தவாறே நின்றுகொண்டிருந்தார். ஆண்டனியின் குரல் அவர் யோசனையைக் கலைத்தது.

“என்ன சார் இன்னைக்கு அக்யூஸ்ட கோர்ட்ல ப்ரொடியூஸ் பண்ணப் போறோமா?”

“ஆமா... பொல்லாத கோர்ட்...” என்று சொல்லிவிட்டு தேவ் ஓரக்கண்ணில் கார்த்திகேயனைப் பார்த்தார். கார்த்திகேயனின் முகம் மாறியதைக் கவனித்தார். அவர் காதுபடவே சப்தமாகப் பேசத் தொடங்கினார்.

“கோர்ட்டுக்கு கூட்டிட்டு போனா அவன தூக்குலையா போடப் போறாங்க! நோ டிஃபென்ஸ் கேஸ். மிஞ்சிப் போனா ஆயுள் தண்டனை. அவன் புத்திசாலி. ஜெயில்ல வாலச் சுருட்டிக்கிட்டு இருப்பான். ஏதாவது தலைவர் பர்த்டே அன்னைக்கு, நன்னடத்தை கைதுனு ரிலீஸ் பண்ணியிருவாங்க. செத்தவங்க குடும்பத்துக்கெல்லாம் நாம செய்யுற மரியாத அவ்ளோதானா? ரிவெஞ்சோ வேறு என்னமோ. ஆனா தான் பெரிய புத்திசாலினு நினச்சுதான இவன் இவ்ளோ பண்ணியிருக்கான். இவன் நல்லவனா இருந்திருந்தா போலீஸத் தேடி வந்திருக்கணும். இவன்லாம் என்னைக்குமே சொசைட்டிக்கு ஆபத்துதான். இவனை எல்லாம் ஸ்பாட்லயே சுட்டுக் கொல்லணும்...”

கார்த்திகேயனுக்கு கோபம் வந்தது.

“ஏழுமலை... அழகேசன கோர்ட்ல ப்ரொடியூஸ் பண்ணனும்... வாங்க” என்றவாறே அழகேசன் கட்டி வைக்கப்பட்டிருந்த அந்த வீட்டினுள் நுழைந்தார்.

***

அழகேசனை அழைத்துக் கொண்டு அனைவரும் காட்டின் வழியே நடந்து சென்றனர். குப்பைக் கோட்டையைக் கடந்து, ரோட்டின் மேலே

அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்த போலீஸ் வேனை அடையவேண்டும். அழகேசன் கையில் மட்டும் விலங்கு பூட்டியிருந்தனர். அவர் கதையைக் கேட்ட பின் அவர் மீது கார்த்திகேயனுக்கு கரிசனம் பிறந்திருந்தது. அதனால் கைவிலங்கோடு நிறுத்திக்கொண்டார். அவரை சங்கிலியால் பிணைக்க வேண்டும் என தேவ் சொன்னதைக் கார்த்திகேயன் கேட்கவில்லை. எனினும் அழகேசன் அங்கிருந்து தப்பிக்காத வண்ணம் அவரை சூழ்ந்தவாறே அனைவரும் நடந்தனர்.

குப்பைக் கோட்டைக்குள் நுழைந்ததும் அழகேசன் சுற்றும்முற்றும் கூர்ந்து நோக்கத் தொடங்கினார். ஒரு இடத்தில் நின்று, சிறுநீர் கழிக்க வேண்டும் என்றார். அவரை ஒரு ஓரமாக அனுப்பி வைத்தார் கார்த்திகேயன். ஏழுமலை அவரை பின்தொடர்ந்து அவர் பின்னால் சென்றார். குப்பைகள் குவிந்திருந்த அந்த இடத்தில், குப்பைக்கு நடுவே ஒரு கிரிக்கெட் ஸ்டம்ப் நீட்டிக் கொண்டிருந்தது. யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அதை வேகமாக உருவினார் அழகேசன். அதன் இன்னொரு முனை மிகவும் கூர்மையாக இருந்தது. வேகமாகத் திரும்பி அப்படியே ஏழுமலையின் கழுத்தில் இறக்கினார். ஏழுமலை ‘‘சார்’’ என்றவாறே கீழே சரிந்தார்.

அனைவரும் ஏழுமலையை நோக்கி ஓடிய அந்த நேரத்தில், அழகேசன் குப்பைகளுக்கு நடுவே இருந்த பாதையில் ஓடினார். ஏழுமலையின் கழுத்தில் கையை வைத்து அழுத்தி ரத்தத்தை நிறுத்தினார் தேவ். அவர் கை ரத்தமானதேயொழிய ஏழுமலையைக் காப்பாற்ற முடியவில்லை.

‘‘அவன கேட்ச் பண்ணுங்க...’’ என்று தேவ் கத்தினார். கார்த்திகேயன் அழகேசன் ஓடிய திசையில் ஓடினார். ஆண்டனியும் பின்னாடியே ஓடினார். அழகேசனால் வேகமாக ஓடமுடியவில்லை. எனினும் முயன்று ஓடிக்கொண்டிருந்தார். கார்த்திகேயன் அப்படியே நின்றார். ஆண்டனியும் அவர் அருகில் வந்து நின்றார். துப்பாக்கியை எடுத்த கார்த்திகேயன் ஆழகேசனின் காலுக்குக் குறி வைத்தார்.

*"அப்டிலாம் உங்களுக்கு எதுவும் ஆக நான் விட்றமாட்டேன் ஏழுமலை. ஒரு இன்ஸ்பெக்டர் மாதிரியா உங்ககிட்ட பழகுறேன்"*

அவர் ஏழுமலையிடம் என்றோ கொடுத்த வாக்கு அவர் நினைவுக்கு வந்தது. சாகும் அந்த தருணத்தில், அவர் ‘சார்’ என்று அழைத்தது, ‘வாக்க

காப்பாத்தாம விட்டுட்டீங்களே சார்' என்று சொன்னது போல் இருந்தது. கார்த்திகேயனின் கண்கள் கலங்கின.

கணநேரத்தில் அவர் மனதில் ஏராளமான எண்ணங்கள் தோன்றி மறைய, அவர் துப்பாக்கியை அப்படியே மேலே தூக்கி, அழகேசனின் தலை நோக்கிக் குறி வைத்தார்.

"*அவன் புத்திசாலி. ஜெயில்ல வால சுருட்டிக்கிட்டு இருப்பான். நன்னடத்தை கைதுனு ரிலீஸ் பண்ணியிருவாங்க... செத்தவங்க குடும்பத்துக்கெல்லாம் நாம செய்யுற மரியாத அவ்ளோதானா?*"

தேவின் வார்த்தைகள் அவர் ஆழ்மனதில் ஒலித்தன.

"*இவனை எல்லாம் ஸ்பாட்லயே சுட்டுக் கொல்லணும்...*"

ட்ரிகரை அழுத்தினார். குண்டு சீறிப் பாய்ந்தது. அது அழகேசனின் பின்மண்டையைப் பதம் பார்த்தது. அழகேசன் கீழே விழுந்தார்.

அந்த அமைதியான காட்டினுள், அழகேசன் உதிர்த்த கடைசி இரண்டு வார்த்தைகள் யார் காதில் விழுந்தனவோ இல்லையோ கார்த்திகேயனின் காதில் தெளிவாக விழுந்தன.

'நான் கொல்லல..."

# 23

நான்கைந்து நாட்கள் உருண்டோடியிருந்தன. ஒரு ஹெட் கான்ஸ்டபிள் கொடூரமாகக் கொல்லப்பட்டதால், அழகேசனை என்கவுன்ட்டர் செய்ததைப் பற்றி யாரும் கேள்வி எழுப்பவில்லை. விசாரணை கமிஷன் வைத்தால், கார்த்திகேயனுக்கு சாதகமாகப் பேசுவதாக தேவ் உறுதியளித்திருந்தார். சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நடந்த குண்டுவெடிப்பு வழக்கில் வீரபத்திரன் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார். KIT—யில் ஒரு நாள் மட்டும் சலசலப்பு இருந்தது. பின் அனைவரும் தங்கள் வேலையைப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். எல்லாமே இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தன. ஆனால் கார்த்திகேயனால் இயல்பாக இருக்க முடியவில்லை.

தன்னுடனே இருந்த ஏழுமலை இல்லாமல் போனபின் அவரால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. ஏழுமலை இருந்திருந்தால் அவர் தன் குடும்பத்திற்கு என்னென்ன செய்திருப்பாரோ, அதையெல்லாம் தான் செய்வதாக ஏழுமலையின் குடும்பத்தாரிடம் உறுதி அளித்துவிட்டு பைக்கில் வந்துகொண்டிருந்தார் கார்த்திகேயன்.

ஆழகேசன் சொன்ன அந்தக் கடைசி இரண்டு வார்த்தைகள் அவரைத் துரத்தி வந்து தொந்தரவு செய்து கொண்டேயிருந்தன.

*“நான் கொல்லல...”*

அழகேசன்தான் குற்றவாளி என உலகம் நம்பிவிட்டது. ஆனாலும் கார்த்திகேயனுக்கு மனதில் உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

*‘சாகும் தருணத்தில் யாரும் பொய் சொல்ல மாட்டார்கள்...’*

*“நான் கொல்லல...”*

*‘சாகும் தருணத்தில் யாரும் பொய் சொல்ல மாட்டார்கள்...’*

*“நான் கொல்லல...”*

*‘சாகும் தருணத்தில் யாரும் பொய் சொல்ல மாட்டார்கள்...’*

திடீரென்று செல்போன் ஒலித்தது. இயல்பு நிலைக்குத் திரும்பிய கார்த்திகேயன் பைக்கை நிறுத்திவிட்டு ஃபோனை எடுத்துப் பேசினார்.

***

அழகேசனின் வீட்டிற்குள் நுழைய இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் அதிகம் மெனக்கெடவில்லை. முன்னறையில் ஒரு கண்ணாடி அலமாரி முழுக்க ஏராளமான ஆங்கில புத்தகங்கள் இருந்தன.

*‘My name is red, White nights, Post office, Sophie’s world...’*

அழகேசன் வாங்கிய விருதுகள் பலவும் அடுத்த அலமாரியை அலங்கரித்தன.

*‘சிறந்த நாடக நடிகர் விருது, சிறந்த கதாசிரியர் விருது, கலைச்சேவை விருது…’*

எல்லாவற்றையும் கவனித்தவாறே படுக்கை அறைக்குள் சென்றார் கார்த்திகேயன். சுற்றும் முற்றும் நோட்டம் விட்டார். அங்கே இருந்த அலமாரியின் கதவைத் திறந்தார். அதனுள்ளும் ஏராளமான புத்தகங்கள் இருந்தன.

*‘டோட்டல் க்வாலிட்டி மானேஜ்மென்ட்—பெஸ்டர்ஃபீல்ட். அட்வான்ஸ்டு மேனுபாக்சரிங் பிராசஸ்—ஹாஜ்ரா சௌத்ரி…’*

அலமாரியில் ஒரு டிராயர் இருந்தது. அதைத் திறந்தார். உள்ளே ஒரு லைசென்ஸ் இருந்தது. அதை எடுத்துப் பார்த்தார்.

*‘குமாரவேல்’*

“இவன் தான் சார்… காலையில அழகேசன் வீட்டு காம்பவுண்ட் எகிறி குதிச்சிருக்கான்… பக்கத்து வீட்ல பாத்திருக்காங்க… மோடிவ் இன்னும் விசாரிக்கல… நீங்கதான அழகேசன் கேஸ விசாரிச்சீங்க. அதான் உங்ககிட்ட முதல்ல இன்ஃபார்ம் பண்லாம்னு கால் பண்ணுனேன்…” சேலையூர் போலீஸ் ஸ்டேஷன் சப்—இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனிடம் சொன்னார்.

“சார்… இவங்க சொல்ற மாதிரி நான் திருடலாம் போல சார். திருடுறவன் ஏன் சார் பகல்ல போணும்?” உடம்பு நடுங்க குமாரவேல் பேசினான். அவனை சிறிது நேரம் கூர்ந்து நோக்கிய கார்த்திகேயன், அவன் தோளைப் பற்றி ஸ்டேஷனுள்ளிருந்து வெளியே அழைத்து வந்தார்.

“சொல்லு... உனக்கு ஒண்ணும் ஆகாம நான் பாத்துக்குறேன்”

“நான் அழகேசன் சார் கிட்ட டிரைவரா வேலை பாத்தேன் சார். என் ஒரிஜினல் லைசென்ஸ அவரு வாங்கி வச்சிருந்தாரு சார். மனுஷன் போய் சேர்ந்துட்டார். லைசென்ஸ் வேணும் சார். கேட் பூட்டியிருந்துச்சு. அதான் எகிறிக் குதிச்சேன். அவர் பெட்ரூம்ல தான் சார் லைசென்ஸ வச்சிருப்பாரு”

“சரி… உன் லைசென்ஸ் உனக்கு கிடைக்கும். நீ எத்தனை வருஷமா அவருகிட்ட வேலை பாக்குற?”

“மூணு வருஷமா சார்…”

“அவரு ஆளு எப்படி?”

“ரொம்ப நல்ல மனுஷன் சார்… டிராமாலாம் போடுவாரு. என் புள்ளைங்கலலாம் ட்ராமாக்குக் கூட்டிட்டு போவாரு. அமைதியான ஆளு சார். அவரு கொலை பண்ணுனாருனு சொல்றத நம்ப முடியல சார்”

கார்த்திகேயன் சிறிது நேரம் யோசித்தார்.

“அவர கடைசியா எப்ப பாத்த?”

“போன புதன் கிழமை சார்... ஏதோ அன்னைக்கு சோகமாவே இருந்தாரு. என்னானு தெரில. எனக்கு ஏதோ தப்பாவே பட்டுச்சு. வெள்ளிக்கிழமலாம் போய் சேர்ந்துட்டாரு...”

“என்ன?” ஆச்சர்யமாகக் கேட்டார் கார்த்திகேயன்.

“சார்?”

“ஏதோ தப்பா பட்டுச்சுனு சொன்னீயே...?”

“எப்பவும் கலகலனு இருக்குற மனுஷன்… கொஞ்ச நாளாவே கவலையா இருந்தாரு… அதுவும் புதன் கிழம அவர் முகம் ரொம்ப சோகமா இருந்துச்சு. நான் எப்பவும் போல ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்குப் போயிட்டேன். நைட் ஒன்பது மணிக்கு போன் பண்ணுனாரு. அவசரமா வெளிய போனும் கிளம்பி வானாரு. போனேன். பாருக்குப் போ சொன்னாரு. ரொம்ப நேரம் குடிச்சாரு. பதினோன்றை மணிக்கு அவர வீட்லவுட்டுட்டு காரையும் பார்க் பண்ணிட்டு வீட்டுக்குப் போனேன்”

“அடிக்கடி குடிப்பாரா?”

“எப்பவாச்சும் குடிப்பாரு சார்... ஆனா என் டூட்டி முடிஞ்சதும் வரச் சொல்ல மாட்டாரு... ஆட்டோல போய்டுவாரு. அன்னைக்கு ஆட்டோக்காரங்க ஸ்டிரைக்கு.. அதான் என்ன கூப்ட்டிருக்காரு... கார்ல போகும் போது கூட, ‘உங்கள டிஸ்டர்ப் பண்றேன்… மன்னிச்சிடுங்கனு…’ சொல்லிக்கிட்டே இருந்தாரு…“

“ஏன் அவரே கார் எடுத்துக்கிட்டு போக மாட்டாரா?”

“அவருக்கு கார் ஓட்டத் தெரியாது சார்...”

குமாரவேலின் லைசென்ஸை பாக்கெட்டில் வைத்துக்கொண்டார் கார்த்திகேயன். அலமாரியின் கதவை மூடும் போது, மேல் வரிசையிலிருந்து புத்தகங்கள் கீழே சரிந்து விழுந்தன. ஒவ்வொன்றாக எடுத்து மீண்டும் அடுக்கினார். அப்போது அவர் கையில் சிக்கிய ஒரு மேகஜின் அவர் கவனத்தை ஈர்த்தது.

*‘All India society of industrial and Production Engineers–May–Aug 09’*

அந்த மேகஜினின் பெயர் பரிச்சயமான பெயர் போல் தோன்றியதால் அதைத் திறந்து பார்த்தார்.

‘All India industrial and Production Engineers meet–09’ பற்றி மிக நீண்டதொரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அழகேசன் குறிப்பிட்ட மீட் இதுதான் என்பதைப் புரிந்து கொண்டார். பக்கங்களைத் திருப்பிக் கொண்டே வந்தார். அந்த மீட்டில் பங்கேற்றவர்களின் புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தன. ஒரு பக்கத்தில் Seminar on Rapid Prototyping என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இடம்பெற்றிருந்தது. அதில் இருந்த புகைப்படத்தைப் பார்த்ததும் கார்த்திகேயனுக்கு ஆச்சர்யமும் அதிர்ச்சியும் ஒருங்கே உருவாயின.

அந்தப் புகைப்படத்தில் ஆறு பேர் நின்றுகொண்டிருந்தனர். பிரகாஷ், ராமகிருஷ்ணன், கணேஷ், ரங்கதுரை, ஆழகேசன் ஆகிய ஐவரும் வரிசையாக நின்றுகொண்டிருக்க ஆறாவதாக ஒரு பெண்மணியும் நின்று கொண்டிருந்தார்.

# 24

“அந்தக் கேஸ் முடிஞ்சு போச்சுயா... அதையே ஏன் புடிச்சு தொங்கிக்கிட்டு இருக்க?” கடுப்படித்தார் வீரபத்திரன்.

“சார் லிசன் டு மீ பிளீஸ். அழகேசனுக்கு காரே ஓட்ட தெரியாதுங்கிறதுதான் இங்க பாய்ண்ட். கோயம்பத்தூர்ல அந்தக் கொலைகாரன் கார் ஓட்டிட்டுப் போனத நானே பாத்தேன். கார்ல வந்துதான் அவன் ரங்கதுரையையும் பிக் பண்ணியிருக்கான்” கார்த்திகேயன் தன் நிலையிலிருந்து பின்வாங்காமல் பேசினார்.

“அவனுக்குக் கார் ஓட்ட தெரியாதா? இல்ல அவனுக்குக் கார் ஓட்ட தெரியும்ங்க்றது அந்த டிரைவருக்குத் தெரியாதா…? இர்ரெலவண்ட் திங்க்ஸ். லீவ் இட்”

“சார் அப்பனா இந்த போட்டோக்கு என்ன பதில் சொல்றீங்க?”

அந்த மேகஜினிலிருந்த போட்டோவைக் காண்பித்தார் கார்த்திகேயன்.

“இங்க பாருங்க… இதுல இருக்குற எல்லாம் செத்துட்டாங்க… பட் இந்த லேடி மட்டும் மிஸ்ஸிங்… சோ...”

கார்த்திகேயன் மேற்கொண்டு பேசவிடாமல் தடுத்தார் வீரபத்திரன்.

“சோ வாட்... இந்த புக்கப் பாரு… நிறைய போட்டோஸ் இருக்கு. இங்க பாரு அழகேசன் கூட ஏகப்பட்ட ஸ்டூடென்ஸ் நிக்கிறாங்க. கொஞ்சநாள் போனா இவங்க எல்லாரும் சம்மந்தப்பட்டிருக்காங்கனு சொல்வியா...?”

“நான் சொல்றத கொஞ்சம் கேளுங்க சார்...” எழுந்து நின்று கத்தினார் கார்த்திகேயன். அவர், ஒரு உயர் அதிகாரியிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்வது அதுவே முதல் முறை. வீரபத்திரனால் கார்த்திகேயனின் இந்த வித்தியாசமான நடவடிக்கையை ஜீரணிக்க முடியவில்லை. அப்படியே உறைந்து போய் அமர்ந்திருந்தார்.

“இந்த லேடி பேரு மக்தலீன் பெட்ரிசியா. ப்ரொடக்சன்லதான் லெக்ட்சரரா வேலை பாத்திருக்காங்க. டூ இயர்ஸ் முன்னாடி தான் வீ.ஆர்.எஸ் வாங்கியிருக்காங்க. பெருங்களத்தூர்ல ஒரு இண்டிபெண்டன்ட் ஹவுஸ வாங்கி,

தனியா தங்கியிருக்காங்க. ஃபேமிலினு யாருமில்ல. வீட்ட விட்டு எப்பவும் வெளிய வர மாட்டாங்க, யாருக்கிட்டையும் பேசமாட்டாங்கனு தான் பக்கத்து வீட்டுக்காரங்க சொன்னாங்க. ஞாயிற்றுகிழமைனா பக்கத்துல இருக்குற பெந்தேகோஸ்தே சர்ச்க்கு போவாங்கலாம். நாலஞ்சு வாரமா அவங்க வீடு பூட்டியே இருக்காம். ஃபைவ் வீக்ஸ் முன்னாடி அவங்கள சர்ச்ல சில பேர் பாத்துருக்காங்க. அதாவது பிரகாஷ் கொலை செய்யப்படுறதுக்கு அஞ்சு நாளைக்கு முன்னாடி. அப்பறம் அவங்க என்ன ஆனாங்க எங்க போனாங்கனு தெரியல...''

''மிஸ்டர் கார்த்திகேயன்... அவங்க சம்மந்தப்பட்ட யாரும் கம்ப்ளைண்ட் கொடுக்காத வரைக்கும் நாம இதுல தலையிட முடியாது...''

வீரபத்திரன் மரியாதையாக தன்னை விளிப்பது கார்த்திகேயனுக்கு பயத்தை அளித்தது. அவர் கோபத்தின் உச்சிக்குச் சென்றால்தான் அப்படிப் பேசுவார். இல்லையேல் 'வாயா' 'போயா' என்று யதார்த்தமாகப் பேசுவதே அவரது வழக்கம். வேறு வழியில்லை என்பதால் கார்த்திகேயன் தொடர்ந்து பேசினார்.

''சார். ஐ நோ தட். அவங்க மிஸ் ஆனத வச்சு நான் எந்த முடிவுக்கும் வரல. திஸ் இஸ் டிஃபரெண்ட்... அவங்க ரெண்டு வருசத்துக்கு முன்னாடி வரைக்கும் தாம்பரத்துல வாடகை வீட்ல குடி இருந்திருக்காங்க. அடிக்கடி லேட் நைட்ல ஒரு ஆள் அங்க வரத அந்தத் தெருவுல இருக்க சிலர் பாத்துருக்காங்க. அந்த ஆள் ஆட்டோலதான் வருவானாம். தலைல முடி இருக்காதாம். குறுந்தாடி வச்சிருப்பானாம். எனக்கு டவுட் வந்துச்சு. அழகேசன் போட்டோவ காமிச்சிசேன். அவருதான்னு கன்ஃபார்ம் பண்ணினாங்க. அழகேசனோட அந்த லேடி கிட்டத்தட்ட இருபது வயசு பெரியவங்க. அவங்களுக்குள் ஏதோ அஃப்ஃபைர் இருந்திருக்கு. ஆனா கடந்த ரெண்டு வருஷமா பெருங்களத்தூர்ல அந்த லேடியோட நெய்பர்ஸ் யாரும் அழகேசன பாத்ததில்லனு சொல்றாங்க''

வீரபத்திரனால் மேற்கொண்டு பொறுமையாக இருக்கமுடியவில்லை.

''சோ... இப்ப மிஸ்ஸிங் கேஸ் இல்லீகல் அஃப்ஃபைர் கேஸ் ஆகிடுச்சா?'' கிண்டலாகக் கேட்டார் வீரபத்திரன். கார்த்திகேயனுக்கு மேற்கொண்டு பேசிப் பயனில்லை என்று தோன்றியது.

“இங்க பாருங்க கார்த்திகேயன்... இந்த கேஸ் முடிஞ்சிருச்சு. இது வெறும் ரிவெஞ்ச் கில்லிங்க்ஸ். அப்படிதான் எல்லாரும் நம்புறாங்க. அதான் உண்மையும் கூட. தேவை இல்லாம இந்த கேச மறுபடியும் ஓபன் பண்ணுனீங்கனா, உங்களுக்கு தான் பிரச்சனை. அந்தாள என்கவுன்ட்டர்ல நானா போட சொன்னேன்? ஏன் அவசர என்கவுன்ட்டர் பண்ணுனீங்கனு கேப்பாங்க. டு யூ ஹாவ் ஆன்சர்? உங்க ஃப்யூச்சர ஸ்பாயில் பண்ணிக்காதீங்க. அவ்ளோதான் என்னால சொல்ல முடியும். எனக்கு வேலை இருக்கு. யூ கேன் லீவ் நவ்”

கார்த்திகேயன் தலைகுனிவோடு அங்கிருந்து வெளியே வந்தார். காரிடரில் நின்றுகொண்டிருந்த ஆண்டனி அவர் அருகில் வந்து பேசத் தொடங்கினார்.

“சார்... கேஸ் நல்லபடியா முடிஞ்சிச்சு... நான் ப்ரமோஷன் எக்ஸ்பெக்ட் பண்றேன்... எப்படியும் உங்கக்கிட்டையும் என் வொர்க்பத்தி ஃபீட்பேக் கேப்பாங்க... பாசிடிவா கொடுங்க சார்... பிளீஸ்...”

“இனிமே அதுக்கு அவசியமிருக்காது ஆண்டனி...” என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் கார்த்திகேயன். ஆண்டனிக்கு அந்த வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தம் புரியவில்லை. அவர் கார்த்திகேயனையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

# 25

இருண்ட அந்த அறையில் சங்கிலியால் கைகால் பிணைக்கப்பட்ட நிலையில் தரையில் கிடந்தாள் மக்தலீன் பெட்ரிசியா. கதவு திறக்கும் சப்தம் கேட்டது.

“இன்னும் எத்தனை நாள் தான் என்ன இப்படி வச்சிருப்ப... ஒரேடியா என்ன கொன்னுரு...” பெட்ரிசியா கோபமாக பேசினாள்.

அவன் சிரித்தான். சப்தமாகச் சிரித்தான். டார்ச் லைட்டை பெட்ரிசியாவின் முகத்தில் அடித்தான். அவள் முகம் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவனுடைய முகத்தை பெட்ரிசியாவால் பார்க்க முடியவில்லை.

“உங்கள என் கையால கொல்ல மாட்டேன் மேடம்... ஆனாலும் செஞ்ச தப்புக்கு நீங்க தண்டனைய அனுபவிச்சுதான் ஆகணும். உங்களால ரெண்டு பொண்ணுங்களோட வாழ்க்கை போச்சு...”

பெட்ரிசியா முகத்தில் ஆச்சர்ய ரேகை படர்ந்ததைக் கவனித்த அவன் தொடர்ந்து பேசினான்.

“எல்லாம் போயிட்டாங்க... பிரகாஷ், கணேஷ், ரங்கதுரை, ராமகிருஷ்ணன்”

அவள் முகத்தில் எந்தச் சலனமும் ஏற்படவில்லை.

“உங்களோட அழகேசனும் போய்ட்டாரு...” பெட்ரிசியாவின் முகம் சோகமாக மாறியதை அவன் கவனித்தான்.

“அவன என்னடா பண்ணுன?”

“ஹா... ஹா... நான் ஒண்ணும் பண்ணல மேடம்... நாலு பேரையும் அவருதான் கொன்னாரு. அதனால போலீஸ் அவர கொன்னுருச்சு”

“அழகால கொலைலாம் பண்ணமுடியாது... அவன் ரொம்ப ஷை டைப்...”

“ஷை டைப்பா? சப்மிஸ்ஸிவ் டைப்பா?”

அந்த பெண்மணியால் பதில் பேச முடியவில்லை.

“எனக்கு எல்லாம் தெரியும் மேடம்... ஃபெமினைன் மேல்... மஸ்குலைன் பீமேல்...”

அவன் மீண்டும் சிரித்தான்.

“உங்களுக்கு ஒண்ணு தெரியுமா மேடம்...? உங்களுக்கு அவர் மேல இருந்த அப்ஷசனவிட அவருக்கு உங்கமேல இருந்த அப்ஷசன் அதிகம்... என் பேச்ச கேக்கலனா உங்க பெட்ரிசியாவ பரலோகத்துக்கு அனுப்பிருவேனு சொன்னேன்... நான் சொல்றதெல்லாம் செஞ்சாரு. சொல்லிக்கொடுத்த மாதிரியெல்லாம் பேசுனாரு. சும்மா சொல்லக்கூடாது… நல்ல நடிகர் அவரு”

“யாருடா நீ... ஏன் இதெல்லாம் பண்ணுற?”

அவன் இரண்டடி முன்னே வந்தான். டார்ச்சை மேல்நோக்கி அடித்தான். அவன் முகம் தெளிவாகத் தெரிந்தது.

“நீ... நீ...?”

“20063503… ஆனந்த்ராஜ்”

***

எமர்ஜென்சி லேம்ப் அந்த இருண்ட அறையை ஒளியூட்டியது. பெட்ரிசியா நாற்காலியில் அமர்ந்திருந்தாள். வழுவின்றி தோன்றினாள். இனிமேல் அவளைக் கட்டி வைக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதிய ஆனந்த்ராஜ் கடமைக்கென்று நாற்காலியின் இடது கைப்பிடியோடு அவளது இடது கையைக் கட்டியிருந்தான். அவள் குடிக்க தண்ணீர் கொடுத்தான். தண்ணீர் குடித்துவிட்டு தொடர்ந்து பேசினாள்.

“2009 மீட்ல நானும் கலந்துக்கிட்டேன். அழகு எங்க காலேஜ் மேல் ஸ்டாஃப் எல்லாரையும் சன்டே விருந்துக்கு கூப்புட்டான். கணேஷையும் இன்வைட் பண்ணியிருந்தான். எனக்கும் அழகுக்கும் இருந்த ரிலேஷன்சிப் அவங்க எல்லாருக்கும் தெரியும். அழகு ஹாஸ்பிடல் போயிருந்தப்ப அவங்க அவன் வீட்டுக்குப் போயிருக்காங்க. குடிபோதையில எங்க ரிலேஷன் பத்தி உளறியிருக்காங்க. தாரணி ரொம்ப சென்ஸிட்டிவ். எல்லாத்தையும் லெட்டர்ல எழுதி வச்சிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டா. அந்த லெட்டர் போலீஸ் கையில கிடைக்குறதுக்கு முன்னாடி அழகு கைல கிடச்சதால நாங்க தப்பிச்சோம். எல்லாத்தையும் சொல்லி அவன் என்கிட்ட வந்து அழுதான். நான்கூட இதெல்லாம் இனிமே வேணாம்னு சொன்னேன். அவன் கேக்கல. நானும் உண்மையில வாய் வார்த்தையா சொன்னேனே ஒழிய மனசுல இருந்து சொல்லல. அழகேசன் KIT–ல ஜாய்ன் பண்ணி கொஞ்சநாள்லயே எங்களுக்குள்ள ரிலேஷன்சிப் ஸ்டார்ட் ஆகிடுச்சு. பட் அட் ஒன் பாயிண்ட் எல்லாமே தப்புனு தோணுச்சு. நான் தொடர்ந்து சர்ச்க்கு போக ஆரமிச்சேன். இனிமே எந்தத் தப்பும் பண்ணக்கூடாதுனு முடிவு பண்ணுனேன். காலேஜ் போனா அழக பாக்க வேண்டி வரும்னுட்டுதான் வீ.ஆர்.எஸ் வாங்கினேன். சொந்தமா வீடு வாங்கிட்டு தனியா வாழ ஆரமிச்சேன். ஆரம்பத்துல கொஞ்ச நாள் அழகு ஃபோன் பண்ணி தொந்தரவு பண்ணுனான். அப்பறம் அவனும்

புரிஞ்சிக்கிட்டு ஒதுங்கிட்டான். எங்க தப்பெல்லாம் நாங்க உணர்ந்ததுக்கப்பறம் எங்கள தண்டிக்கிறது என்ன நியாயம்?''

''தப்பு பண்ணுன எல்லாரையும் மன்னிக்க ஆரமிச்சா, அவங்களால பாதிக்கப் பட்டவங்களுக்கு யாரு நியாயம் வாங்கித் தருவா? தப்பு பண்ணுன ஒவ்வொருத்தனும் தண்டனைய அனுபவிச்சே ஆகணும்...''

''தண்டனை கொடுக்குற உரிமையை உனக்கு யாரு கொடுத்தா...?''

''தப்பு பண்ணுற உரிமைய உங்களுக்கு எவன் கொடுத்தானோ அவன்தான்...''

பெட்ரிசியா மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ஆனால் ஆனந்த்ராஜ் பேசினான்.

''இன்னும் நீங்க செஞ்சத் தப்ப மறைக்கவே பாக்குறீங்களே மேடம்...''

பெட்ரிசியா என்ன என்பதுபோல் பார்த்தாள்.

''நிரஞ்சனி...''

பெயரைக் கேட்டதும் அந்தப் பெண்மணி அதிர்ச்சியில் உறைந்தார்.

***

சூரியன் மறைந்து இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. அடர்ந்த மரங்களுக்கிடையே ARKS பொறியியல் கல்லூரியின் கெஸ்ட் ஹவுஸ் அமைந்திருந்தது. அது ஒரு டூப்ளெக்ஸ் கெஸ்ட் ஹவுஸ். வரிசையாக நிறைய கெஸ்ட் ஹவுஸ்கள் இருந்தன. ஒவ்வொரு கெஸ்ட் ஹவுசிற்குமிடையே நிறைய மரங்கள் இருந்தன.

வாசலில் நின்று ஃபோன் பேசிக்கொண்டிருந்த கணேஷ் தன்னை நோக்கி வந்த அழகான பெண்ணைப் பார்த்ததும் ஃபோனைத் துண்டித்துவிட்டு 'என்ன வேணும்' என்பது போல் பார்த்தார்.

''பெட்ரிசியா மாம் வரச் சொல்லியிருந்தாங்க...'' இனிமையான குரலில் பேசினாள் அவள்.

''மேடம் கொஞ்சம் பிசி... வாட் டு யூ வான்ட்...?''

''நாளைக்கு பேப்பர் பிரசன்டேஷன் ஆர்கனைஸ் பண்றத பத்தி பேசணும்''

''ஓ! யூ ஆர் ஃப்ரம் KIT?''

“நோ சார்... ARKS ஸ்டுடண்ட்...”

“உன் பேரு?”

“நிரஞ்சனி...”

கொஞ்சிக் கொஞ்சிப் பேசிய அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தார் கணேஷ்.

“பெட்டர் யூ டாக் வித் மேடம்... அவங்க மேல இருக்காங்க... யூ கேன் கோ” என்று அந்தப் பெண்ணை மேலே அனுப்பினார்.

முதலில் தயங்கிய அந்த பெண், பின் மாடிப்படி நோக்கி நடந்தாள். அவள் மாடிப்படி ஏறிக்கொண்டிருக்கையில், கீழ் அறையிலிருந்த பெட்ரிசியா கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். பெட்ரிசியாவைப் பார்த்ததும் கணேஷ் ‘கொஞ்ச நேரம் பிளீஸ்’ என்பது போல் வாயசைத்தார். பெட்ரிசியாவிற்குப் புரியவில்லை. அவள் அருகில் சென்ற கணேஷ்,

“மேடம். கொஞ்ச நேரம். ஜஸ்ட் ஃபன்...” என்றார்

“யாரு...”

“நிரஞ்சனி...”

“ஹா ஹா... ஏய்! எதுவும் பிரச்சனை வராம பாத்துக்கோ... இது எங்க காலேஜ் இல்ல...” அலட்டிக்கொள்ளாமல் பேசினாள் பெட்ரிசியா.

“அதான் சொன்னேனே ஜஸ்ட் ஃபார் ஃபன்... யூ கேரி ஆன்” என்று சொல்லிவிட்டு விசமப் புன்னகை புரிந்தார் கணேஷ்.

பெட்ரிசியா சிரிக்க, “மேடம் வெக்கம்லாம் படுறீங்க” என்று சொல்லி மீண்டும் சிரித்தார் கணேஷ். பெட்ரிசியா எதுவும் பேசாமல் கதவைச் சாத்தினாள். அறையினுள் அழகேசன் அமர்ந்திருந்தார்.

***

ரங்கதுரை பிரகாஷ் ராமகிருஷ்ணன் ஆகிய மூவரும் போதையில் இருந்தனர். ராமகிருஷ்ணன், போதையில் தன் மனைவியைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருந்தார். அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

“யாருனு பாருங்க கிருஷ்ணன்...” ரங்கதுரை சொல்ல கிருஷ்ணன் கதவைத் திறந்தார். வெளியே நின்று கொண்டிருந்த அந்த அழகான

பெண்ணைப் பார்த்ததும் கிருஷ்ணனுக்கு போதை இறங்கியது.

“சார்... பெட்ரிசியா மாம் இங்க இருக்குறதா சொன்னாங்க...”

இனிமையான குரல் கேட்டு அறையினுள்ளிருந்து எட்டிப் பார்த்த பிரகாஷ், “உள்ள வாமா. இங்கதான் இருக்காங்க” என்று கத்தினார். அறையினுள் காலடி எடுத்து வைத்ததுமே, நிலைமையை ஓரளவிற்கு அவளால் யூகிக்க முடிந்தது. வேகமாக வந்த வழி திரும்பினாள். திரும்பியவள் அதிர்ந்தாள். கணேஷ் வழியை மறைத்துக்கொண்டு நின்றார்.

“மேடம் ரொம்ப பிசியா இருக்காங்க, சாரோட“ சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தார் கணேஷ்.

“சார். பிளீஸ்... லெட் மீ கோ... மேடம்கிட்ட கம்ப்ளைண்ட் பண்ணிருவேன்...”

“மேடம் கிட்ட கம்ப்ளைண்ட் பண்ற உரிமை அழகேசனுக்கு மட்டும்தான் இருக்கு...” கேலியாகச் சொன்னார் பிரகாஷ்.

“ஹேய்! நாங்க உன்ன ரேப்பா பண்ணப் போறோம்... ஜஸ்ட் கொஞ்ச நேரம் உக்காந்து பேசிட்டுப் போ...” கணேஷ் சொன்னார்.

“பயப்படாம வா மா... சொல்லு உனக்கு பாய் ஃப்ரெண்ட் இருக்கானா?” சபலம் கலந்த ஆர்வத்துடன் வினவினார் ரங்கதுரை. அந்தப் பெண்ணிற்கு உடலெல்லாம் வேர்க்க ஆரமித்தது.

“அதுக்குள்ள வேர்க்குது. இந்தா துடச்சிக்கோ” என்று கைக்குட்டையை நீட்டினார் ராமகிருஷ்ணன். அதற்கு மேல் அங்கிருப்பது ஆபத்து என்று உணர்ந்த அவள், அறைக்குள் ஓரடி எடுத்து வைத்தாள். கணேஷும் அறைக்குள் வந்தார். யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் அவள் வேகமாகத் திரும்பி வெளியே ஓடினாள்.

“அவளப் புடியா... யாராவது பாத்துற போறாங்க” என்று ரங்கதுரை சப்தமிட, கணேஷ் அவள் பின் ஓடினார். பதற்றமாக இருந்த நிரஞ்சனி வலது புறம் திரும்பி கீழே இறங்குவதற்குப் பதிலாக, இடது புறம் திரும்பினாள். அங்கே மாடிப்படி இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் படி ஏறி மொட்டை மாடிக்குச் சென்றாள். கணேஷும் அவளைப் பின்தொடர்ந்து அங்கே சென்றார்.

“ஹேய்... வீ வேர் ஜஸ்ட் ப்ளேயிங்க் ஓ.கே! நாங்களும் மறந்துடுறோம். நீனும் மறந்துரு. யூ கேன் லீவ்.. ஐம் யுவர் ஃப்ரெண்ட்... ஓ.கே!” என்றவாறே கணேஷ் அவள் அருகில் செல்ல, பயத்தினால் உறைந்திருந்த அவள் என்ன செய்வது என்று தெரியாமல் கீழே குதித்தாள்.

# 26

ஆனந்த்ராஜ் அந்த அறைக்குள் அங்குமிங்கும் அலைந்தவாறே பெட்ரிசியாவிடம் பேசிக்கொண்டிருந்தான். அவள் தான் அமர்ந்திருந்த மர நாற்காலியின் கைப்பிடி உடையும் நிலையில் இருப்பதைக் கவனித்தாள். அந்தக் கைப்பிடியில்தான் அவளுடைய இடதுகை கட்டப்பட்டிருந்தது. அவள் இடது கை பழக்கமுள்ளவள் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. ஆனந்த்ராஜ் அசந்த நேரத்தில், அந்தக் கைப்பிடியை உடைத்து அவன் மேல் அடித்துவிட்டுத் தப்பிக்க அவள் முடிவுசெய்திருந்தாள். அவள் மனதளவில் கலங்கவில்லையெனினும், ஆனந்த்ராஜிற்கு சந்தேகம் வரக்கூடாது எனபதற்காக கரிசனமாகப் பேசுவது போல் நடித்தாள்.

“அந்தப் பொண்ணு சாகலனு கேள்விப்பட்டேன்... கோமால இருக்கானு சொன்னாங்க. எல்லாத்துக்கும் நான்தான் காரணம்” நீலிக்கண்ணீர் வடிக்க முயற்சித்தாள். இயல்பாகவே முரட்டுக்குணம் கொண்ட அவளுக்கு கண்ணீர் வரவில்லை.

“கேள்விப்பட்டீங்களா? உங்களுக்கு அவ செத்துருந்தாலும் வெறும் செய்திதான மேடம். அவ உடம்புல உயிர்மட்டும் தான் மிஞ்சியிருக்கு. அஞ்சு வருஷமா படுத்த படுக்கையா இருக்கா... அவ அம்மா நடை பொணமா அலையுறாங்க... எல்லாத்துக்கும் நீங்கதான் காரணம்...”

“நான் ஒத்துக்கிறேன்... நான் பண்ணதெல்லாம் தப்புதான்... அதுக்கு நான் நிறைய கஷ்டத்த அனுபவிச்சிட்டேன்” அழுவது போல் பாசாங்கு செய்தாள் பெட்ரிசியா.

“நீங்க உண்மையிலேயே நல்லவங்களா இருந்தா போலிஸ்கிட்ட எல்லாத்தையும் சொல்லியிருக்கணும்.. இப்ப நடிக்கிறீங்க. அந்த கேஸ்ல உங்கமேல யாருக்கும் சந்தேகம் வரல. அந்த மாடி ரூம உங்களுக்குதான் அலாட் பண்ணியிருந்தாங்க. அந்த ரூம்ல நீங்கதான் இருந்திருக்கணும். நீங்க கீழ் ரூம்ல தங்குனது யாருக்கும் தெரியாது. அதனால போலீஸ்க்கு எதுவும் வித்தியாசமா தெரியல. சூசைட் அட்டெம்ப்ட்னு கேசக் குளோஸ் பண்ணிட்டாங்க. நீங்களும் தப்பிச்சிட்டீங்க...”

”உனக்கெப்படி இதெல்லாம் தெரியும்... உனக்கும் அந்தப் பொண்ணுக்கும் என்ன சம்மந்தம்?”

“சம்மந்தம் இருந்தாதான் தப்பத் தட்டி கேக்கணுமா...? ஒரு காக்கா செத்து போச்சுனா மத்த காக்காலாம் துடிக்கிறதில்ல? அது மாதிரிதான் மேடம் இதுவும். ஒரு அப்பாவிப் பொண்ண உங்க சந்தோசத்துக்காக... ச்சி... இத பேப்பர்ல வெறும் செய்தியாதான் நானும் படிச்சேன்... ஒருநாள் நோ அப்ஜெக்ட்சன் சர்டிபிகேட் வாங்க வார்டன் ஆஃபிஸ்க்கு போனப்ப பிரகாஷும், ராமகிருஷ்ணனும் குடி போதையில இதப் பத்தி பேசிக்கிட்டிருந்தாங்க... கேக்கும் போது ரத்தமெல்லாம் கொதிச்சிச்சு. இவ்ளோ மோசமான மனுசங்களுக்கு ஏதாவது தண்டனை வாங்கிக் கொடுக்கணும்னு தோணுச்சு. அவங்க பேசுனதெல்லாம் மொபைல்ல ரெகார்ட் பண்ணுனேன். ஏதாவது பண்ணணும்னு முடிவு பண்ணினேன். போலீஸ்கிட்ட போனா உங்க அதிகாரத்த வச்சு நீங்க தப்பிசிருவீங்க. நானே தண்டனை கொடுக்க முடிவு பண்ணுனேன். ஆனா என் ஒருத்தனால இதெல்லாம் பண்ணமுடியாதுனு எனக்குத் தெரியும். யோசிச்சேன். அப்பதான் நிரஞ்சனிக்கு ஒரு அண்ணன் இருக்குறது தெரிய வந்துச்சு. அவரப் போய் பாத்தேன். எல்லாத்தையும் சொன்னேன். அண்ணனாச்சே! எப்படித் தாங்கிக்க முடியும்...? நாங்க சிக்கிக்காம உங்க எல்லாருக்கும் மரண தண்டனை கொடுக்க முடிவு பண்ணுனோம். கணேஷ் யாருனு தெரியல... AIPEM மேகஸின்ல கணேஷோட டீடெயில்ஸ் இருந்துச்சு. மத்தவங்க டீடெயில்ஸ கலெக்ட் பன்றது அவ்ளோ கஷ்டமா இல்ல.

எல்லாரையும் ஃபாலோ பண்ணுனோம். உங்க ஆக்டிவிடிஸ் எல்லாத்தையும் நோட் பண்ணுனோம். திட்டம் போட்டோம். ரொம்ப பெர்ஃபெக்ட்டா போட்டோம். காலம் கூடி வந்துச்சு. உங்களக் கடத்துனோம். கல்ட்ஃபெஸ்ட் அன்னைக்கு காலேஜுக்குள்ள நுழஞ்சேன். பிரகாஷக் கொன்னேன். கோயம்புத்தூர்ல கணேஷ ஃபாலோ பண்ணுனேன். சுவர் ஏறிக் குதிச்சு அவர் ஆஃபிஸ்குள்ள நுழஞ்சேன். அவரையும் நரகத்துக்கு அனுப்பினேன். இந்தக் கேஸ இன்வெஸ்டிகேட் பண்ணுன இன்ஸ்பெக்டர் நாங்க எக்ஸ்பெக்ட் பண்ணுனதோட புத்திசாலியா இருந்தாரு. அவருக்குத் தெரியாமலேயே அவர எமோஷனலா கார்னர் பண்ணுனோம். கணேஷக் கொன்னுட்டு அந்த ஏரியாலயே சுத்துனேன். நான் எதிர்ப்பார்த்த மாதிரியே இன்ஸ்பெக்டர் ரொம்ப எமோஷன் ஆனாரு. அவருக்குள்ள ஒரு இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளக்ஸ விதச்சோம்… கோபத்த விதச்சோம்… இட் வர்க்ட் அவுட் வெல். அந்த காம்ப்ளக்ஸ்தான் வளர்ந்து அவரோட அறிவ டாமினேட் பண்ணுச்சு. எதைபத்தியும் யோசிக்காம உங்க அழக என்கவுன்ட்டர் பண்ண வச்சுச்சு...''

பெட்ரிசியாவிற்கு கோபம் அதிகமாயிற்று. சரியான தருணத்திற்காக அந்தப் பெண்மணி காத்திருந்தார்.

''ரங்கதுரைய பச்சைமலைல வச்சுக் கொன்னேன். வேணும்னே போலீஸ்ல சிக்குனேன். நான் கஸ்டடில இருந்தப்ப நிரஞ்சனியோட அண்ணன் ராமகிருஷ்ணன கொன்னாரு. எல்லா தப்பையும் அழகேசன ஒத்துக்க வச்சோம். நாங்க சொல்லிக்கொடுத்த கதைய சொல்ல வச்சோம். உங்களுக்கு ஒண்ணும் ஆகிடக் கூடாதுங்க்றதுக்காக அவர் செய்யாத தப்ப செஞ்சேனு ஒத்துகிட்டாரு. பாவம் இந்த விளையாட்ல ஒரு அப்பாவி போலீஸ் செத்துட்டாரு. இருந்தாலும் மத்தவங்கள தண்டிச்சிட்டோம்னு நினைக்கும் போது ரொம்ப சந்தோஷமா இருக்கு மேடம்''

ஆனந்த்ராஜ் சிரித்தான். கோரமாகச் சிரித்தான். அடர்ந்த முடியும் தாடியும் கொண்ட அவன் சப்தமாகச் சிரிப்பதைப் பார்க்கும் எவரும் பயத்தில் நடுங்கக்கூடும். ஆனால் பெட்ரிசியா அசராமல் அமர்ந்திருந்தாள்.

*''பாதகஞ் செய்பவரைக் கண்டால்— நாம்*

*பயங்கொள்ள லாகாது பாப்பா,*

*மோதி மிதித்துவிடு பாப்பா— அவர்*

*முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.*"

கண்களை மூடி உரக்கப் பாடிய அவன் அப்படியே சரிந்து கீழே விழுந்தான். அவன் தலையிலிருந்து ரத்தம் வழியத் தொடங்கியது. நாற்காலியின் கைப்பிடிக் கட்டையோடு நின்றுகொண்டிருந்தாள் பெட்ரிசியா. ஐம்பது வயதைக் கடந்த பின்பும் அவள் உடலில் பலம் இருந்தது. கயிற்றை அவிழ்த்துத் தூக்கி எறிந்தாள்.

"இவ்வளவு டீடெயில்ஸ் கலெக்ட் பண்ணுன நீ, நான் லெஃப்ட் ஹாண்டர்னு நோட் பண்ணலயேடா..."

மீண்டும் இடது கையில் வைத்திருந்த கட்டையால் அவன் தலையில் ஓங்கி அடித்தாள். அவன் மயங்கினான். அவள் கதவை நோக்கி ஓடினாள்.

***

அது மிகப் பழமையான காற்றாலை தொழிற்சாலை. தனியாருக்குச் சொந்தமான அந்த தொழிற்சாலை என்றோ மூடப்பட்டுவிட்டது. அந்தத் தொழிற்சாலைக்குள் ஒரு மூலையில் தான் அந்தச் சிறிய இருட்டு அறை அமைந்திருந்தது. அதன் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடி வந்த பெட்ரிசியா, வெளியே இருந்த பழைய எந்திரங்களைப் பார்த்து ஸ்தம்பித்து நின்றாள். அது எந்த இடமென்று அவளுக்குத் தெரியவில்லை. தட்டுத் தடுமாறி தொழிற்சாலைக்கு வெளியே வந்தவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் வெறும் புழுதிக் காடாக இருந்தது. பழுதடைந்த சில காற்றாலை விசிறிகள் அசையாமல் நின்றுகொண்டிருந்தன. ஆள்அரவம் அற்ற அந்த இடத்திலிருந்து எப்படித் தப்பிச் செல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

வெகுதொலைவில் ஒரு கார் வருவதைக் கவனித்தாள். நிம்மதி பிறந்தது.

"ஹெல்ப் ஹெல்ப்..."

கார் இவளை நோக்கி வந்தது. கார் கண்ணாடி இறங்கியது.

"சார் ப்ளீஸ் ஹெல்ப்..."

காரிலிருந்து அந்த ஆஜானுபாகுவான மனிதன் இறங்கினான்.

"மேடம்... ரிலாக்ஸ்... என்ன பிரச்சனை...?"

“சார்… உள்ள… உள்ள… ஒருத்தன் என்ன ரொம்ப நாளா கடத்தி வச்சிருந்தான்… ஹி இஸ் ட்ரையிங் டு கில் மீ…”

அந்த மனிதனுக்கு கோபம் வந்தது. வேகமாக கார் கதவைத் திறந்து உள்ளேயிருந்து பிஸ்டலை எடுத்தான். அதைக் கண்டதும் பெட்ரிசியாவின் முகத்தில் பயம் குடிகொண்டது. அதை அவன் கண்டுகொண்டான்.

“மேடம் டோன் வொர்ரி…” என்றவாறே தன் பர்ஸை பாக்கெட்டிலிருந்து உருவி அதனுள்ளிருந்த ஐ.டி கார்டை அவள் முகத்திற்கு நேராகக் காண்பித்தான். அதைக் கண்டதும் அவள் தைரியம் கொண்டாள்.

‘தேவதச்சன்.S அசிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ்’

“நீங்க இங்கயே இருங்க… ஐ வில் கோ இன்ஸைட் அண்ட் செக்…” அங்குமிங்கும் நோட்டம் விட்டவாறே அசிஸ்டண்ட் கமிஷனர் பேசினார்.

“இல்ல… நானும் வரேன்… ப்ளீஸ்… இங்க தனியா இருக்க முடியாது…”

***

ஆனந்த்ராஜிற்கு மயக்கம் தெளிந்திருந்தது. அவன் எழுந்து வெளியே வந்தான். அவனைக் கண்டதும், பெட்ரிசியா “சார்” என்று கத்தினாள்.

“ஃப்ரீஸ்…” என்றவாறே துப்பாக்கியை அவனை நோக்கி குறிவைத்தார் தேவ். அவன் அப்படியே நின்றான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

“பயித்தியக்காரத்தனமா ஏதும் பண்ணாத. ஸ்டே வேர் யு ஆர்” மீண்டும் சொன்னார் தேவ்.

“சார் நீங்க இதுல தலையிடாதீங்க…” ஆனந்த்ராஜ் அலட்டிக்கொள்ளாமல் பேசினான்.

“ஏதாவது பேசுன, ஐ வில் கில் யு ஹியர் இட்செல்ஃப்…” அவருக்குக் கோபம் அதிகமாகிக் கொண்டே போனது.

“சார்… இவனுக்கு ஒரு கூட்டாளி இருக்கான் சார். இவனே சொன்னான். நீங்க இவனக் கொன்னாலும் அவன் என்னத் தேடி வருவான். அவன் யாருனு கேளுங்க. ப்ளீஸ்…” பேசிமுடிப்பதற்குள் பெட்ரிசியாவிற்கு மூச்சு வாங்கியது.

“டோன் வொரி. ஹி இஸ் ஹார்ம்லெஸ். பயப்படாமா இருங்க” பெட்ரிசியாவை ஆசுவாசப்படுத்த முயன்றார் தேவ்.

“சீரியல் கில்லர் சார் அவன். எப்படி பயப்படாம இருக்குறது?”

“சீரியல் கில்லர் தான். ஆனா உங்க அழக அவன் கொல்லலயே” சொல்லிவிட்டுச் சிரித்தார் தேவ்.

பெட்ரிசியாவின் முகம் மாறியது. அவள் சுதாரிப்பதற்குள் துப்பாக்கியைத் திருப்பி அவள் நெற்றியில் ஓங்கி அடித்தார் தேவ். அவள் துடிதுடித்துக் கீழே விழுந்தாள். ஆனந்த்ராஜ் பெட்ரிசியாவின் அருகில் வந்தான்.

“மேடம். நான் தான் சொன்னேனே. நான் உங்களக் கொல்ல மாட்டேனு. இனிமே எல்லாத்தையும் என் கூட்டாளி பாத்துப்பாரு” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

தேவ் ஆனந்த்ராஜைப் பார்த்து “கொஞ்சம் விட்டிருந்தா தப்பிச்சிருப்பா” என்றார்.

“நீங்க வருவீங்கனு தெரியும் சார்”

தேவ் புன்னகை புரிந்தார். ஆனந்த்ராஜ் அங்கிருந்து வெளியே சென்றான். தேவ் மட்டும் பெட்ரிசியாவிடம் பேசத் தொடங்கினார்.

“என் தங்கச்சி உங்கள என்ன மேடம் பண்ணுனா? வாழ்க்கைய எஞ்சாய் பண்ண வேண்டிய வயசுல ஒரு பொணம் மாதிரி படுத்து கிடக்கா. எங்க அம்மா பேசுறதையே நிறுத்திட்டாங்க... சின்ன குடும்பம் மேடம் எங்களோடது... அப்பா செத்ததுக்கப்பறம், அம்மா ரொம்பக் கஷ்டப்பட்டு எங்கள வளத்தாங்க. என்ன கலெக்டர் ஆக்கணும், என் தங்கச்சிய இஞ்சினியர் ஆக்கணும்னு ஆசப்பட்டாங்க. எல்லாம் நல்லா போயிட்டு இருந்துச்சு. ஆனா உங்க சந்தோஷத்துக்கு நீங்க நிரஞ்சனிய பலிகடா ஆக்கிட்டீங்க. வீட்ட வித்து ட்ரீட்மெண்ட் பண்ணுனோம். ஒரு பிரயோஜனமும் இல்ல. அவ இப்படியே பெட்ல கிடக்க வேண்டியதுதானு டாக்டர் சொல்லிட்டாரு. அப்பதான் ஒரு நாள் ஆனந்த் என்ன வந்து பாத்தான். என் தங்கச்சியோட நிலைமைக்கு யாரு காரணம்னு சொன்னான். எல்லாரையும் பழி வாங்க முடிவு பண்ணுனோம். இத்தனை கொலை பண்ணிட்டுத் தப்பிக்கணும்னா ஒண்ணு போலீஸ்ல எனக்கு பவர் இருக்கணும், இல்ல நானே போலீசா இருக்கணும். என் கனவெல்லாம் விட்டுட்டு ஐ.பி.எஸ் பாஸ் பண்ணுனேன். எங்கெங்கயோ டியூட்டி பாத்தேன்.

நிறைய காச இறச்சு சென்னைக்கு ட்ரான்ஸ்ஃபர் வாங்கினேன். எங்க டைம் ஸ்டார்ட் ஆச்சு...''

பெட்ரிசியா கீழே துடிதுடித்துக் கொண்டிருந்தாள்.

''முதல்ல பிரகாஷ்... போலீஸ் பேட்ரால் கார்ல KIT உள்ள ஆனந்த்ராஜ நான்தான் கூட்டிட்டுப் போனேன். பிரகாஷ் கதைய அவன் முடிச்சதும் உள்ள கூட்டிட்டுப் போன மாதிரியே வெளிய கொண்டாந்து விட்டேன். போலீஸ் கார்ங்க்றதுனால யாரும் செக் பண்ணல... இந்த மொத்த கேமையும் நாங்க தான் டிசைன் பண்ணுனோம். ஆனா எங்க கண்ட்ரோல்ல இல்லாத ஒரு ஃபேக்டர் தான் அந்த இன்ஸ்பெக்டர். அவனோட மூவ் என்னனு தெரிஞ்சாதான் அடுத்த லெவல விளையாட முடியும். அதனால போலீஸ் ஸ்டேஷன்ல அவனுக்குத் தெரியாம அவன் பேசுறத ஒட்டுக் கேட்டேன். பட் அது ரொம்ப பழைய மெதட் ரொம்ப ரிஸ்க்கான மெதட்னு அப்பறம்தான் தெரிஞ்சிது. என்ன பண்ணலாம்னு யோசிக்கும் போதுதான் வேறொரு ஐடியா கிடச்சுது. எல்லா டிபார்ட்மெண்ட்லயும் வேலை செய்யாம மேல வரணும்னு சில பேர் இருப்பாங்க. எங்க டிபார்ட்மெண்ட்லயும் ஒருத்தன் இருந்தான்.

*''என்ன ஆண்டனி. எப்ப இன்ஸ்பெக்டர் ஆகப்போறீங்க?''*

*''எல்லாம் ஏ.சி சார் மனசு வச்சா நடக்கும்...''*

பதவி ஆசை காட்டுனேன். அந்த சப்—இன்ஸ்பெக்டர் என் வலைல விழுந்தான். அந்த இன்ஸ்பெக்டரோட நடவடிக்கை எல்லாத்தையும் ஃபாலோ பண்ணி என்கிட்ட சொன்னான். அத வச்சி அந்த இன்ஸ்பெக்டரோட ஒவ்வொரு மூவுக்கும் செக் வச்சு அவன இன்ஃபீரியரா பீல் பண்ண வச்சோம். ஒவ்வொருத்தரையா காலி பண்ணுனோம். ஒரு போலீசா இருக்குறதுல ஒரு அட்வாண்டேஜ் இருக்கு. எங்க வேணா போகலாம். அசிஸ்டண்ட் கமிஷ்னர்னு சொல்லி ராமகிருஷ்ணன் வீட்டுக்குள்ள நுழஞ்சேன். அவரக் கொன்னேன். அழகேசனோட மோதிரத்த அங்க போட்டேன். அழகேசன சிக்க வச்சேன்.

*''அந்த வேஸ்ட் டம்ப் ஏரியா வழியாதான் உங்களக் கூட்டிட்டு போவாங்க. நல்லா நோட் பண்ணிக்கிட்டே போங்க. ஒரு இடத்துல X—னு மார்க் ஆகியிருக்கும். அந்த மார்க்குக்குப் பக்கத்துல வெப்பன் இருக்கும். அத எடுத்து உங்க பக்கத்துல இருக்குற போலீஸ் மேல குத்திட்டு ஓடியிருங்க.*

*யாரும் உங்களத் துரத்த மாட்டாங்க. அவங்கள நான் பாத்துக்குறேன்...'' தேவ் பொறுமையாகப் பேசினார்.*

*''முடியாது'' அழகேசன் மறுத்தார்,*

*''முடியாதுனா உங்க பெட்ரிசியாவ உயிரோட பாக்கமுடியாது''*

நான் ஜஸ்ட் குத்ததான் சொன்னேன். உங்க மேல இருந்த வெறி, அந்த ஹெட்கான்ஸ்டபிள கொலையே பண்ணிட்டாரு உங்க அழகு''

தேவ் கேலியாகச் சிரித்தார். பெட்ரிசியா தேவின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். தன் வாழ்க்கை முடியப்போகிறது என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது. எனினும் அவள் கெஞ்சவில்லை.

''மேடம் என்ன மன்னிச்சிருங்க... உணர்ச்சிவசப்பட்டு என் ரகசியம் எல்லாத்தையும் உங்ககிட்ட சொல்லிட்டேன்... ரகசியம் யாருக்கும் தெரியக் கூடாது...'' தேவ் மீண்டும் கேலியாகச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு சத்தம் வெளியெங்கும் பிரதிபலித்தது. காரின் முன் இருக்கையில் ஆனந்த்ராஜ் அமர்ந்திருந்தான். கண்களை மூடி தியானம் செய்துகொண்டிருந்த அந்த சித்தன் தன்னை அறியாமலேயே சித்தர் பாடலை உதிர்த்தான். அவன் நெற்றியிலிருந்து ரத்தம் வடிந்துகொண்டே இருந்தது.

*''அரியுமல்ல அயனுமல்ல அப்புறத்தில்அப்புறம்*

*கருமைசெம்மை வெண்மையைக் கடந்துநின்ற காரணம்*

*பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்*

*துரியமும் கடந்துநின்ற தூரதூர தூரமே''*

காற்று அடித்தது. பழைய காற்றாலை விசிறிகள் சுற்ற முடியாமல் சுற்றின. எங்கும் புழுதி பறந்தது. அதைப் பொருட்படுத்தாமல் மண்புழுவொன்று கோபுலேசனில் ஈடுபட்டிருந்தது. தொழிற்சாலைக்குள்ளிருந்து துப்பாக்கி குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டது.

# 27

எல்லோரும் எல்லாவற்றையும் மறந்துவிட்டு தங்களுடைய வேலைகளில் மூழ்கிவிட்ட பின்...

KIT உற்பத்தி பொறியியல் துறையில் பல புது விரிவுரையாளர்கள் இணைந்திருந்தார்கள். அவர்கள் தற்காலிக ஊழியர்களாதலால், அரசாங்க சம்பளம் பெறும் ஊழியர்கள் அவர்களை அடிமை போல் நடத்தத் தொடங்கியிருந்தார்கள்.

***

ஹாஸ்டலில் அனுமதியின்றி பர்த்டே பார்ட்டி கொண்டாடியதற்காக, மன்னிப்பு கடிதம் எழுதிக் கொண்டிருந்தான் இரண்டாமாண்டு மாணவனொருவன்.

***

கங்கை அம்மன் கோவில் வாசலில் குடித்துவிட்டு விழுந்துகிடந்தவர்களைப் பிடிப்பதற்காக சைரன் வைத்த போலீஸ் காரில் வந்து இறங்கினார் சிட்லபாக்க காவல் நிலைய ஆய்வாளர் ஆண்டனி.

எல்லாம் தெறித்து ஓடினர். ஆனால் காக்கையன் மட்டும் அப்படியே விழுந்து கிடந்தான்.

“யோவ்... இவனத் தூக்கி வண்டில போடுயா” ஆண்டனி கத்தினார்.

“சார்... மன்னுச்சுருங்க சார்... அவனுங்கதான் சார் ஊத்தி குடுத்தானுங்க. பாவிப் பசங்க ஓடிட்டானுங்க...” காக்கையன் கெஞ்சினான்.

“சரி. பாக்கெட்ல எவ்ளோ வச்சிருக்க... எடு...” ஆண்டனி மெதுவாகப் பேசினார்.

“நானே எச்ச சரக்க குடிச்சிட்டு கிடக்குறேன். என்கிட்ட என்ன இருக்கும்?”

“யோவ்... இவனத் தூக்கி வண்டில போடுயா” ஆண்டனி மீண்டும் கத்தினார்.

“சார் சார்... என் பொண்டாட்டி வீட்டு வேலைக்கு போயிருக்கு. இப்ப வந்துரும். வந்தோன வாங்கிக் குடுக்குறேன் சார்...” காக்கையன் மீண்டும் கெஞ்சினான்.

“சரி போ... இங்க இருந்து ஓடுனான் பார். அவன் எல்லாருக்கிட்ட இருந்தும் 100 ரூபாய் வாங்கிட்டு வா. இல்லனா எல்லாத்தையும் ஸ்டேஷன்ல வச்சுருவேன்...” என்றவாறே கான்ஸ்டபிளைப் பார்த்தார்.

கான்ஸ்டபிள் காக்கையனுடன் சென்றார். ஆண்டனி கூலிங்க் கிலாஸை மாட்டிக்கொண்டு, பேட்ரால் காரின் பக்கத்தில் பந்தாவாகக் காத்திருந்தார்.

***

சந்தீப் குமார் ஜெயினிடம் ஒரிஜினல் லைசென்ஸைக் கொடுத்துவிட்டு பல டாக்குமென்ட்களில் கையெழுத்து போட்டு விட்டு வெளியே வந்தார் குமாரவேல். அவருக்காக வெளியே புது ஆட்டோ ஒன்று காத்திருந்தது. உள்ளே அவர் மனைவியும், பிள்ளைகளும் அமர்ந்திருந்தனர்.

“இன்னும் ரெண்டு வருஷத்துல கடன அடச்சிடலாம் இல்லைங்க...” மனைவி கேட்டாள்.

“இன்னும் ரெண்டு ஆட்டோவே வாங்கிறலாம்” சந்தோஷமாகச் சொன்னார் குமாரவேல்.

ஆட்டோ சீறிப் பாய்ந்தது.

***

கொடைக்கானல் ரெஸிடென்ஷியல் பள்ளி ஒன்றின் நிர்வாகியாகப் பொறுப்பேற்றிருந்தார் பாதிரியார் இம்மானுவேல். அவருடைய மிக நெருங்கிய நண்பருடைய பள்ளி அது. நண்பர் இறந்த பின், வெளிநாட்டில் இருந்த அவரது மகன்கள் இம்மானுவேலிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டனர்.

அந்தப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த கார்த்திகேயனின் மகன் நகுல் வகுப்பாசிரியை ஜெனிப்பரை “அம்மா” என்று அழைக்க, அவள் “டேய் வீட்ல தான்டா அம்மானு கூப்புடணும்... இங்க மிஸ்னு கூப்பிடு” என்று சொல்லிவிட்டு பாடம் நடத்தத் தொடங்கினாள்.

பள்ளி மைதானத்தில் பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் பலரும் ரிலே ரேஸ் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

“இந்த முறை ஸ்டேட் லெவல்ல நாம தான் வின் பண்றோம்... பிராக்டிஸ் பிராக்டிஸ் பிராக்டிஸ்” என்று மாணவர்களுக்கு உற்சாகமூட்டிக்கொண்டிருந்தார் உடற்பயிற்சி ஆசிரியர் கார்த்திகேயன். மூன்றாவது மாடியில், தன்னுடைய குளிர் சாதன அலுவலக அறையில் நின்றுகொண்டு ஜன்னல்வழியே கார்த்திகேயனையே பார்த்துக்கொண்டிருந்தார் இம்மானுவேல்.

***

ஹெவி இன்ஜினியரிங் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து வைக்க பிரதமர் சென்னை வரவிருப்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்திக் கொண்டிருந்தார் அசிஸ்டண்ட் கமிஷ்னர் தேவ். வேலைப்பளு அதிகமாக இருந்தாலும், அவரது முகம் சாந்தமாக இருந்தது.

***

வடபழனி முருகர் கோவிலில் தன் மனைவியுடன் நின்று சந்தனக்காப்பிலிருந்த முருகனை தரிசித்துக் கொண்டிருந்தார் டி.ஜி.பி வீரபத்திரன். இடையிடையே தன் கடிகாரத்தைப் பார்த்தார். அதைக் கண்டுகொண்ட அவர் மனைவி,

“அதெல்லாம், பத்து நிமிஷம் டூட்டிக்கு லேட்டா போனா ஒண்ணும் ஆகிடாது...” என்று சலித்துக்கொண்டாள்.

***

இடுக்கியில் மலைகளுக்கிடையே அமைந்திருந்த அந்த சிறுவீட்டின் உள்ளறையில் நிரஞ்சனி படுத்திருந்தாள். நாட்டு வைத்தியத்தால் அவளைக் குணமாக்கும் முயற்சி வெகுநாட்களாகவே நடந்துவந்தது. நிரஞ்சனியின் அருகே அமர்ந்து அவளையே பார்த்தவாறு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் அவள் தாய். தான் பெறாத ஒரு மகன் தங்களுடனே தங்கி தங்களைக் கவனித்துக் கொள்வதை எண்ணும் போது அவள் கண்கள் சற்று அதிகமாகவே கலங்கின.

வெளியறையில் ஒரே ஒரு நைட் லேம்ப் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. கதவுகளும் ஜன்னல்களும் அடைக்கப்பட்டிருந்தன. அலமாரியில் ஏராளமான புத்தகங்கள் இருந்தன. அவன் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவன் முடியையும் தாடியையும் சவரம் செய்திருந்தான். அவன் கண்கள்

பிரகாசித்தன. அவன் முகத்தில் பேரொளி வீசியது. அவன் கையிலிருந்த புத்தகத்தின் கடைசி பக்கத்தைப் படித்துக்கொண்டிருந்தான்.

*‘வையகம் அதனில் மாக்கள் மயங்குவர், வய வெஞ் சேனை*
*எய்திடின்’ என்பது உன்னி, இராகவன் இனிதின் ஏவ,*
*பெய் கனி, கிழங்கு, தேன் என்று இனையன பெறுதற்கு ஒத்த*
*செய்ய மால்வரையே ஆறாச் சென்றது, தகைப்பு இல் சேனை.’*

*‘சுந்தரகாண்டம் முற்றிற்று’*

அரவிந்த் சச்சிதானந்தம் பிற நூல்கள்

மணிரத்னம் படைப்புகள் ஓர் உரையாடல்

சகலகலாவல்லவன் கமல் பிற பரிமானங்கள் ஓர் உரையாடல்

நகுலனின் நாய்—சிறுகதை தொகுப்பு

தொடர்பு

aravindhskumar@gmail.com